# புதுக்கோட்டை
# தொண்டைமான் செப்பேடுகள்



முனைவர் ஜெ. ராஜாமுகமது
செ. கோவிந்தராஜ்

வெளியிடுபவர்
முதன்மை செயலர் & அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை-8.
2009

# புதுக்கோட்டை

# தொண்டைமான் செப்பேடுகள்

ஆசிரியர்

முனைவர் **ஜெ. ராஜாமுகமது,**
M.A., M.A., M.A., BGL., Ph.D.,
உதவி இயக்குநர் (ஓய்வு),
தமிழ்நாடு அருங்காட்சியகத்துறை,
சென்னை.

இணை ஆசிரியர்

**செ. கோவிந்தராஜ்,**
B.Sc., M.A., P.G.Dip.in.Arch.
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை.

வெளியிடுபவர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயலர் & அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை–8.

2009

276-8—1

முதற்பதிப்பு – 2009

எண்ணிக்கை : 500

© அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை-8.

விலை : ரூ 100/-

Published with the financial assistance received from the Ministry of Culture, Government of India and Government of Tamil Nadu.

Laser typesetting by aksharaa muthra alayam.
Ch-18. Ph. 044-24364303.

Printed at : Government Central Press, Chennai - 600 079.

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்**, இ.ஆ.ப.,
முதன்மை செயலர் &
அருங்காட்சியகங்களின்ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்
சென்னை–600 008.

தொலைபேசி : 044 – 2819 3778
நிகரி : 044 – 2819 3035

# வாழ்த்துரை

தமிழ் நாட்டில் சென்னைக்கு அடுத்து பெரிய அருங்காட்சியமாகத் திகழும் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில், புதுக்கோட்டை வரலாற்றுக்குச் சான்றாக விளங்கும் ஆவணங்கள் பல உள்ளன. மேலும், இப் பகுதியின் வரலாற்றை விளங்க வைக்கும் தொல்லியல் சின்னங்களும் நிரம்ப உள்ளன.

புதுக்கோட்டையின் வரலாறு குறித்து 1948–க்கு முற்பட்ட புதுக்கோட்டை சமஸ்தான அரசு, ஆங்கிலத்தில் Pudukkottai State Manual, Pudukkottai Inscriptions ஆகிய நூல்களை வெளியிட்டிருந்தது. பல ஆண்டுகளுக்கு முன் பதிப்பிக்கப்பட்ட அந்த நூல்கள் கிடைக்காமல் போனதால் ஆய்வாளர்களுக்கு புதுக்கோட்டையின் வரலாற்றுச் செய்திகள் சென்றடையாத நிலை இருந்தது. எனவே, அந்த நூல்கள் அனைத்தையும் அருங்காட்சியகத்துறை மறுபதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இது ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன் தருவதாக உள்ளது.

மக்களின் வரலாற்றை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் புதுக்கோட்டை அருங்காட்சியக முன்னாள் காப்பாட்சியரும், அருங்காட்சியகத் துறையில் உதவி இயக்குனர் பதவி வகித்து ஓய்வு பெற்றுள்ள முனைவர் ஜெ. ராஜாமுகமது அவர்கள் எழுதியுள்ள புதுக்கோட்டை மாவட்ட வரலாறு என்ற நூலினை 1992–இல் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழுத் தலைவர் திருமதி. ஷீலாராணி சுங்கத், இ.ஆ.ப. அவர்கள் வெளியிட்டுள்ளார்.

வரலாற்று ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் மாணவர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் புதுக்கோட்டை வரலாற்று விளக்க நூலாக இருந்த இந் நூலும் கிடைக்காத நிலையில், அதனையும் தற்போது அருங்காட்சியகத் துறை மறுபதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இவ்வாறாக, புதுக்கோட்டை வரலாற்றை அனைவரும் தெரிந்து கொள்ள அருங்காட்சியகம் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதனைப் போன்றே புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகளையும் மேலும் பிற நிறுவனங்கள் வசமுள்ள தொண்டைமான் செப்பேடுகளையும் ஒரே தொகுதியாக வெளியிடுவது புதுக்கோட்டையின் வரலாற்று ஆய்வுக்கு பயனுடையதாக இருக்கும் என்பதால், இச் செப்பேடுகள் அனைத்தையும் தொகுத்துக் களப்பணி மேற்கொண்டு மேலாய்வுகள் செய்து, ஓய்வு பெற்ற உதவி இயக்குநர் முனைவர் ஜெ. ராஜாமுகமது மற்றும் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. செ. கோவிந்தராஜ் ஆகிய இருவரும் "புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகள்" என்ற இந்த நூலை எழுதியுள்ளனர்.

ஆய்வு உலகத்திற்குப் பயன்படும் இந்த நூலினைப் பதிப்பித்து வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். முனைவர் ஜெ. ராஜா முகமது செ. கோவிந்தராஜ் ஆகிய இருவருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். முனைவர் ஜெ. ராஜாமுகமது அவர்கள் ஓய்வு பெற்று ஓய்ந்து இருந்துவிடாமல் புதுக்கோட்டை வரலாற்றிற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் மேலும் பல நூல்களை எழுதும் பணியைச் செய்ய வாழ்த்துகிறேன்.

சென்னை – 8
16.3.2009

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

# முன்னுரை

புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் வரலாற்றுச் சான்றாக விளங்கும் செப்பேடுகளை ஒரு தனி நூலாக வெளியிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தொண்டைமான் மன்னர்களது செப்பேடுகள் நிறைய எண்ணிக்கையில் இருந்ததற்கான குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பல ஆண்டுகளாக பலனளிக்கவில்லை. ஆகவே கிடைத்துள்ள செப்பேடுகளை பதிப்பித்து நூலாக வெளியிடப்படுகிறது.

இதுவரை 24 செப்பேடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 9 செப்பேடுகள் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. இவற்றில் பலவற்றை மத்திய தொல்லியல் அளவீட்டுத் துறையினர் படி எடுத்துள்ளனர். புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள செப்பேடுகளையும் படியெடுத்து புலவர் செ. இராசு அவர்கள் எழுதிய தொண்டைமான் செப்பேடுகள் என்ற நூலினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

இதில் புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி தொண்டைமான் மன்னர்களின் செப்பேடுகள் குறித்து மேலாய்வு செய்து புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகள் என்ற இந்த நூலினை எழுதியுள்ளோம். புலவர். செ. இராசு அவர்களின் நூலில் கூறப்பட்டுள்ள சில கருத்துக்களையும் இந்தப் புத்தகத்தில் எடுத்துக் கையாண்டுள்ளோம். புலவர் செ. இராசு அவர்களுக்கும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தினருக்கும், மத்திய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையினருக்கும் எங்களது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் காசிமடம், காஞ்சிபுரம் சங்கரமடம் நிர்வாகங்களுக்கும் பேராசிரியர் முனைவர் வள்ளி, சிங்கத்தா குறிச்சிகோயில் நிர்வாகி, தமிழகத் தொல்லியல் கழகம் ஆகியோருக்கும் எங்களது நன்றியினைத் தெரிவிக்கிறோம். எங்களது ஆய்வில் என்றும் உதவி நிற்கும் நண்பர் மேலப்பனையூர் கரு. ராஜேந்திரன் அவர்களுக்கும் நன்றி.

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள செப்பேடுகளை உள்ளடக்கி இந்த நூலினை எழுதுவதற்கு அனுமதியளித்து நூலினை வெளியிட்டுள்ள வரலாற்று ஆர்வலரான அரசு அருங்காட்சியகங்களின் ஆணையர், முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புதுக்கோட்டை.
16-3-2009

**ஜெ. ராஜாமுகமது**

**செ. கோவிந்தராஜ்**

# புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகள்


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | | |
| | புதுக்கோட்டை வரலாறு | – | 1 |
| 1. | களத்தூர் செப்பேடு | – | 26 |
| 2. | கீரனூர் செப்பேடு | – | 32 |
| 3. | துறுமாச் செப்பேடு | – | 36 |
| 4. | காடங்குடிச் செப்பேடு | – | 41 |
| 5. | காஞ்சிபுரம் செப்பேடு | – | 45 |
| 6. | வாழைக்குறிச்சிச் செப்பேடு | – | 49 |
| 7. | ஈரவயல் செப்பேடு | – | 53 |
| 8. | திருவிடைமருதூர் செப்பேடு | – | 57 |
| 9. | புதுக்கோட்டைச் செப்பேடு | – | 63 |
| 10. | கூடலூர் செப்பேடு | – | 66 |
| 11. | அடப்பன் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு I | – | 71 |
| 12. | அடப்பன் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு II | – | 82 |
| 13. | வெண்ணை முத்துப்பட்டிக் கல்வெட்டு | – | 85 |
| 14. | அம்மணி சத்திரச் செப்பேடு | – | 96 |
| 15. | காசிச் செப்பேடு | – | 106 |
| 16. | திருக்கோகர்ணம் செப்பேடு | – | 111 |
| 17. | மலையூர் செப்பேடு | – | 118 |
| 18. | சுப்பிரமணியன் சத்திரம் செப்பேடு | – | 124 |
| 19. | கீரனூர் செப்பேடு | – | 128 |
| 20. | முதலிப்பட்டிச் செப்பேடு | – | 133 |
| 21. | திருச்சிராப்பள்ளிச் செப்பேடு | – | 138 |
| 22. | தூவூர் செப்பேடு | – | 144 |
| 23. | சிங்கத்தாகுறிச்சிச் செப்பேடு | – | 147 |
| 24. | நாஞ்சியூர் செப்பேடு | – | 151 |
| 25. | மேற்கோள் நூல் பட்டியல் | – | 155 |

# புதுக்கோட்டை வரலாறு

புதுக்கோட்டை 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ஆம் நாள் தனி மாவட்டமாக மலர்ந்தது. இதற்கு முன்பு திருச்சி மாவட்டத்தில் ஒரு வருவாய் கோட்டமாக இருந்தது. தொண்டைமான் மன்னர்களின் முடியாட்சியில் இருந்த புதுக்கோட்டை தனியரசு (சமஸ்தானம்) இந்திய சுதந்திரத்திற்குப் பின் 3-3-1948-இல் ஒன்றுபட்ட இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பதினொன்று வட்டங்கள் உள்ளன. குளத்தூர், இலுப்பூர், ஆலங்குடி, கறம்பக்குடி, புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, திருமயம், பொன்னமராவதி, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி என்பனவாகும் அவை. 765 வருவாய் கிராமங்கள் உள்ளன. இம் மாவட்டத்தின் பரப்பளவு 4600 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும்.

ஆதிமனிதன் புதுக்கோட்டையில் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள பாறை இருக்கைகளும், இயற்கை குகைகளும் மனிதன் தொன்றுதொட்டு இப் பகுதியில் வாழ்ந்து வந்திருக்க வேண்டுமென்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

கற்கால நாகரிக அடிச்சுவட்டில் பெருங்கற்படை நாகரிகத்தின் (Megalithic period) வளர்ச்சியடைந்த நிலையினை புதுக்கோட்டையில் காணலாம். ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் புதைகுழிகள், ஈமத்தாழிகள். அவர்கள் உபயோகித்த இரும்பு ஆயுதங்கள், மண்பாண்டங்கள் ஆகியன அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இவை புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. கி.மு. 200 முதல் கி.பி. 200 வரை வழக்கிலிருந்த பிராமி என்னும் தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் சித்தன்னவாசல் மற்றும் குடுமியான்மலையில் காணப்படுகின்றன. சங்க கால இலக்கியங்களில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பல ஊர்ப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. சங்க காலம் என்பது கி.மு. 300 முதல் கி.பி 300 வரை ஆறு நூற்றாண்டுகளுக்குட்பட்ட காலமாகும்.

திருமயம் வட்டத்திலுள்ள ஓலியமங்கலம் சங்க கால ஒல்லையூர் ஆகும். (புறநானூறு 25, 71, 242, 247, 279) புறநானூறு 44–ஆம் பாடல் குறிப்பிடும் அழும்பில், ஆலங்குடி வட்டத்திலுள்ள அம்புக் கோவிலாகும். கோநாட்டு எரிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனாரின் ஊரான எரிச்சலூர் இலுப்பூருக்கு அருகிலுள்ளது. (புறநானூறு 54, 61, 167, 180, 197, 394 ) கீரனூருக்கு அருகிலுள்ள ஆவூர், புறநானூறு 38, 40, 166, 177, 178, 196, 261, 301, அகநானூறு 13, 24, 81, 143, 224, ஆகிய பாடல்களில் குறிப்பிடப்படும் ஊராகும்.

சங்க காலத்தில் இம் மாவட்டத்தின் தென்பகுதி பாண்டியப் பேரரசிலும் வடபகுதி உறையூர் சோழப் பேரரசிலும் உட்பட்டிருந்தன. மேற்குக் கடற்கரைக்கும் கிழக்குக் கடற்கரைக்கும் வழக்கிலிருந்த வணிகப் பெருவழி புதுக்கோட்டை வழியாகச் சென்றது. இதனால், பன்னாட்டு வணிகப் பொருட்களின் சந்தையாகப் புதுக்கோட்டை விளங்கியது. இப் பகுதியின் வணிகப் பொருட்களுக்கு ரோமானியப் பொன் நாணயங்கள் விலையாகப் பெறப்பட்ட செய்தி தெரிய வருகிறது. ஆலங்குடிக்கு அருகிலுள்ள கருக்காக்குறிச்சி என்னும் கிராமத்தில் 500 ரோம நாட்டுப் பொன் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி.1, 2–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். கி.பி. 4,5,6 ஆம் நூற்றாண்டுகள் பொதுவாக தமிழக வரலாற்றின் இருண்ட காலமாகக் கருதப்படுகின்றன.

இக் காலகட்டத்தில் களப்பிரர் என்போர் ஆட்சி செய்து தமிழகத்தின் அரசியல் சமுதாய, பொருளாதார நிலைமைகளை சின்னாபின்னமாக்கினர் என்பது இன்றும் ஆய்வுக்குரியதாகவே இருந்து வருகிறது. இருப்பினும், களப்பிரர் இனத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவனது கல்வெட்டு (கி.பி.4ம் நூற்றாண்டு) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதிக்கு அருகிலுள்ள பூலாங்குறிச்சியில் கிடைத்துள்ளது. இருண்ட கால வரலாற்றைத் தெளிவுபடுத்தச் சிறிதளவு வெளிச்சத்தினைப் புதுக்கோட்டைப் பகுதி அளிக்கிறது,

கி.பி. 590 வாக்கில் களப்பிரர் வசமிருந்து பாண்டிய நாட்டின் பகுதிகளைப் பாண்டியன் கடுங்கோன் கைப்பற்றிக் கி.பி. 620 வரை ஆட்சி செய்தான். தொடர்ந்து 10–ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம் வரை இம் மன்னர்களது ஆட்சி நிலைத்து இருந்தது. இதே கால கட்டத்தில் காஞ்சிபுரம் பகுதியில் (தொண்டை மண்டலம்) சிம்மவிஷ்ணு, பல்லவரின் ஆட்சியை நிறுவினான்.

கி.பி. 7–ஆம் நூற்றாண்டு வரை காவிரிக் கரை வரை பரந்து விரிந்திருந்த பல்லவப் பேரரசு கி.பி. 8,9–ஆம் நூற்றாண்டுகளில் புதுக்கோட்டையின் சில பகுதிகளிலும் நிலவியது. பல்லவர்களின் மேலாண்மைக்குட்பட்டு இப் பகுதியை முத்தரையர் என்னும் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

கி.பி. 9–ஆம் நூற்றாண்டின் இறுதியில் விஜயாலயனால் பிற்காலச் சோழப் பேரரசு உருவாக்கப்பட்டது. புதுக்கோட்டையின் பெரும்பகுதி சோழப் பேரரசின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. விஜயாலய சோழனால் நிறுவப்பட்ட சோழப் பேரரசின் வளர்ச்சிக்கு இப் பகுதியின் படைவீரர்கள், படைத்தலைவர்கள், ஆட்சியாளர்கள் காரணமாக இருந்தனர். கிராமங்கள் உள்ளாட்சி அமைப்புகளால் ஆளப்பட்டன. கலையழகு மிக்க கோயில்கள் பல எடுக்கப்பட்டன.

சோழ மன்னர்களின்கீழ் கொடும்பாளூர் வேளிர், முத்தரையர் போன்றோர் குறுநில மன்னர்களாக இப் பகுதியை ஆட்சி செய்தனர். சோழப் பேரரசு 13–ஆம் நூற்றாண்டில் சிதையத் தொடங்கியது. 13–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழரின் வீழ்ச்சிக்குப் பின் பாண்டியர் ஆதிக்கம் தலைதூக்கியது.

இரண்டாவது பாண்டியப் பேரரசு என்று அழைக்கப்படும் இம் மன்னர்களது ஆட்சி முதலாம் சடையவர்மன் குலசேகரன் காலம் (கி.பி. 1190–1217) தொடங்கி 14–ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் பாண்டிய அரச குடும்பத்தினரிடையே ஏற்பட்ட அரசுரிமைப் போர்களினாலும்

முஸ்லீம்களின் படையெடுப்பாலும் பாண்டியப் பேரரசு அழியத் தொடங்கியது. கி.பி. 1334–35–இல் மதுரையில் டெல்லி சுல்தான்களின் ஆட்சி நிறுவப்பட்டது. புதுக்கோட்டையின் பகுதிகளும் மதுரை சுல்தான்களின் ஆளுகைக்குட்பட்டது. இவர்களது ஆட்சி சுமார் 50 ஆண்டு காலம் நீடித்தது.

கி.பி. 1371–இல் விஜயநகர இளவரசன் குமாரகம்பண்ணன் மதுரை சுல்தான்களின் ஆட்சியை அகற்றி விஜயநகர ஆட்சியை நிறுவினான். புதுக்கோட்டைப் பகுதியும் விஜயநகர மன்னர் வசமானது. விஜயநகர மன்னர்கள் பலரது சிறப்பான ஆட்சி இங்கு நடைபெற்ற செய்திகள் தெரிய வருகின்றன.

பிற்காலத்தல் விஜயநகரப் பேரரசுப் பகுதிகள் நாயக்கப்பட்டினங்கள் என அழைக்கப்பட்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவை நாயக்கர் என்றழைக்கப்பட்ட அரசப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களைக் தலைநகரங்களாகக் கொண்டு நாயக்க மன்னர்கள் ஆட்சி செய்தனர்.

1640–ஆம் ஆண்டுவாக்கில் புதுக்கோட்டையில் புதுக்கோட்டை தொண்டைமான்களின் ஆட்சி மரபு ஏற்படும் வரை புதுக்கோட்டை மாவட்டத்தின் தென்பகுதி மதுரை நாயக்கரின் ஆட்சியிலும் கிழக்குப் பகுதி தஞ்சாவூர் நாயக்கர்களின் ஆட்சியிலும் இருந்தன.

நாயக்கரின் மேலாண்மைக்குட்பட்டு இப் பகுதிகளை அறந்தாங்கி தொண்டைமான் மன்னர்கள், பல்லவராயர்கள் போன்ற குறுநில மன்னர்களும் மற்றும் வாராப்பூர், பேராம்பூர், கத்தலூர், இலுப்பூர், குமாரவாடி, மருங்காபுரி, கூரைக்குடி ஆகிய இடங்களில் இவ்வூர் பெயர்களைத் தாங்கிய சிற்றரசர்களும் ஆட்சி செய்து வந்தனர்.

இதே போன்ற சிற்றரசர் நிலையில் கி.பி. 1640–ஆம் ஆண்டுவாக்கில் தொண்டைமான் பரம்பரையினரின் ஆட்சி புதுக்கோட்டைப் பகுதியில் நிறுவப்பட்டது.

பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகர மன்னர்கள், நாயக்கர் ஆகியோரது ஆட்சிகள் குறித்துத் தெரிந்துகொள்ள அம் மன்னர்கள் புதுக்கோட்டைப் பகுதியில் கட்டியுள்ள கோயில்களும் கலைச் சின்னங்களும் அவற்றில் காணப்படும் 1000–க்கும் மேற்பட்ட கல்வெட்டுகளும் பெரிதும் துணைபுரிகின்றன.

## புதுக்கோட்டை சமஸ்தானம்

புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் மன்னர்கள் தொன்மையானதொரு பரம்பரையினர் ஆவார்கள். ஆயினும் தொன்றுதொட்டு வந்த அரச மரபினர் அல்ல. தமது வீரத்தாலும் தீரத்தாலும் நாடாள்வோராக உயர்ந்தவர்கள். இவர்கள் பழங்காலத்தில் தமிழகத்தின் வட எல்லையான வேங்கடம் எனப்படும் திருப்பதிமலைப் பகுதியில் வாழ்ந்து வந்த கள்ளர் மரபினரின் வழி வந்தவர்கள். யானைப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதில் சிறந்து விளங்கியவர்கள்.

தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் வரலாற்றுப் பின்னணியிலிருந்து மறைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட விஜயநகர மன்னர்களின் ஆதிக்கம், அவர்களின் மேலாண்மைக்குட்பட்ட நாயக்கர் ஆட்சி முறை, இவற்றால் ஏற்பட்ட புதிய சூழ்நிலைகள், ஆகியவற்றின் காரணமாக வட தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த தமிழ் மற்றும் தெலுங்கு, பேசும் மக்கள் (கி.பி.15–ஆம் நூற்றாண்டிலிருந்து) தென் தமிழ் நாட்டுப் பகுதிகளுக்கு அதிக அளவில் குடிபெயரத் தொடங்கினர்.

அவ்வாறு இவர்கள் குடியேறிய இடங்களுள் திருச்சிக்கு அருகிலுள்ள அன்பில் கிராமம் மிகவும் முக்கியமானதாகும். இங்கிருந்த ஒரு பிரிவினர் குடிபெயர்ந்து புதுக்கோட்டையில் தற்போது ஆலங்குடியைச் சுற்றியுள்ள பிலாவிடுதி, வடக்கலூர், கல்லாக்கோட்டை,

கறம்பக்குடி, நெல்வேலி, நரங்கியம்பட்டு, அம்மணிப்பட்டு, பந்துவாக்கோட்டை, மங்கள வெள்ளாளவிடுதி ஆகிய ஊர்களில் குடியேறினர். இவர்களுள் கறம்பக்குடியில் குடியேறிய கள்ளர் வகுப்பினர், வீரத்திலும் கடின உழைப்பிலும் சிறந்து விளங்கினர். மேலும் இவர்கள் யானை பழக்குதல் போன்ற வீரசாகசங்களில் சிறப்புப் பெற்றிருந்ததாலும் இப் பகுதியை ஆண்ட நாயக்க மன்னர்களின் அரசப் பிரதிநிதிகளின் படையில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்று செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கினர் எனத் தெரிகிறது. இவர்கள் விவசாயத் தொழிலிலும் கண்ணும் கருத்துமாக இருந்ததாலும் சமுதாய கூட்டமைப்பு முறைகளில் ஆர்வம் கொண்டவர்களாக விளங்கியதாலும் அப் பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இந்தப் பிரிவினரிலிருந்து தோன்றிப் புகழுடன் விளங்கியவர்களே தொண்டைமான் பரம்பரையினர் ஆவர். இவர்கள் கறம்பக்குடிப் பகுதியில் நாடாள்வோராக இருந்து படிப்படியாக தங்கள் ஆட்சிப் பகுதியை விரிவாக்கி, தற்போது புதுக்கோட்டை, ஆலங்குடி, திருமயம், குளத்தூர், கந்தர்வக்கோட்டை ஆகிய வட்டங்களை உள்ளடக்கியப் பகுதிகளை, புதுக்கோட்டையை தலைநகராகக் கொண்டு ஆளத் தொடங்கினர்.

அப்போது பல்லவராயன் சீமை என்று வழங்கப்பட்ட நாட்டமைப்பில் அடங்கியிருந்த இப் பகுதிகள் பின்னர் புதுக்கோட்டை தொண்டைமான்களது தனியரசு, புதுக்கோட்டை சமஸ்தானம் (Pudukottai State) என்று அழைக்கப்பட்டது. சமஸ்தானம் என்றால் ராச்சியம் என்றும், ஆங்கிலத்தில் Kingdom அல்லது Dominion என்றும் பொருள்படும். தொண்டைமான் ராச்சியத்தை –தனியரசை– புதுக்கோட்டை சமஸ்தானம் என்றே பழைய பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டு வழக்கிலும் சமஸ்தானம் என்னும் சொல்லே வழங்கப்படுகிறது. ஆகவே "புதுக்கோட்டை சமஸ்தானம்" என்றே நாமும் குறிப்பிடலாம்.

புதுக்கோட்டை தொண்டைமான்களின் ஆட்சி 1686-இல் தொடக்கம் கண்டு 1948-ஆம் ஆண்டில் முடிவடைந்தது. கி.பி 1750-ஆம் ஆண்டுவாக்கில் புதுக்கோட்டை சமஸ்தான அரசவைக் கவிஞராக இருந்த வெங்கண்ணா என்பவர் இயற்றியுள்ள தொண்டைமான் வம்சாவளி என்கிற தெலுங்குக் காவியம், தொண்டைமான் மன்னர்கள் இந்திர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றொரு கர்ணபரம்பரைக் கதையைக் கூறுகிறது.

இந்திரன் பூலோகத்தைச் சுற்றி வரும்போது அங்கு ஒரு அழகிய பெண்ணைக் காந்தர்வ மணம் புரிந்து, அவர்களுக்குப் பிறந்த மக்களே புதுக்கோட்டை தொண்டைமான்களின் வம்சத்தினர் என்கிறது அக் கதை. இது கவிஞனின் மிகைப்படுத்தப்பட்டக் கூற்று எனக் கொள்வோம். மேலும், அக் காவியம் தொண்டைமான்களின் முன்னோர் பதினைந்து பேர்களை குறிப்பிடுகிறது.

(1. திருமால், 2.நமனா , 3.பச்சை, 4. தண்டகா, 5. நமணா, 6. திருமா, 7. நமனா, 8. பச்சை, 9. நமனா, 10. பச்சை, 11. கிண்கிணி 12. தண்டகா, 13. திருமா, 14. பச்சை, 15. ஆவுடைராயத் தொண்டைமான்)

இதில் பதினைந்தாவது வழித்தோன்றலான ஆவுடைராயத் தொண்டைமான், தனது வீரத்தால் காலப்போக்கில் இப் பரம்பரையினருக்கு அரச அந்தஸ்த்தைப் பெற்றுத்தர வித்திட்டார் எனத் தெரியவருகிறது. இவரது காலம் 1640 – 1686 எனக்கொள்ளலாம் தொண்டைமான் பரம்பரையினர் சோழநாட்டு திருவாலிநாட்டு சிற்றரசர் திருமங்கை ஆழ்வாருக்கு மந்திரியாக இருந்த ஒருவரின் வழிவந்தவர்கள் என 1728-ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று ( பு.க.879 ) கூறுகிறது.மேலும் தொண்டைமான் மன்னர்கள் இந்திரவம்சம், காசிபகோத்திரம் எனவும்

( பு.க.763 ) இவர்களது மாலை 'வாகைமாலை' எனவும் செப்பேடுகளிலிருந்து அறிகிறோம். விஜயநகரமன்னர் மூன்றாம் வெங்கடபதிராயர் (கி.பி.1630-1642) தமது பரிவாரங்களுடன் ராமேஸ்வரம் யாத்திரை மேற்கொண்டு, கறம்பக்குடி வழியாகச் சென்ற போது அவரது யானைகளுள் ஒன்றுக்கு மதம் பிடித்து யாராலும் அடக்க முடியாததாகிவிட்டது.

ஆவுடைராயத் தொண்டைமான் விரைந்து சென்று அந்த யானையை அடக்கி அரசர் முன் நிறுத்தினார். தொண்டைமானின் வீரத்தை மெச்சிய விஜயநகர மன்னர், அவருக்கு ராய ராகூத்த ராய வச்சிரிடு, ராய மன்னிடு ராய என்ற பட்டத்தை அளித்ததோடு, அரசர்களுக்கே உரித்தான அம்பாரி யானை, முரசு யானை, சிங்கமுகப் பல்லக்கு ஆகியவற்றை வைத்துக் கொள்ளவும் அனுமதி அளித்தார். அவரது அந்தஸ்த்தை உயர்த்தும் வகையில் உலாவரும்போது கட்டியக்காரர்களை வைத்துக் கொள்ளவும் சிற்றரசர்களுக்குரிய கண்ட பேருண்ட கருவியை முழங்கிடவும் உரிமையளிக்கப்பட்டது. மேலும் கறம்பக்குடி பகுதியிலிருந்த நிலங்களும் அளிக்கப்பட்டன. இப்படியாக அரசு கிடைப்பதற்கு முன்பே ஆவுடைராயத் தொண்டைமானுக்கு ராஜமரியாதை கிடைத்துவிட்டது.

மேற்கண்ட செய்திகள் தொண்டைமான் வம்சாவளி, ராயத்தொண்டைமான் அனுராகமாலை, ராயத்தொண்டைமான் இரட்டை மணிமாலை ஆகிய பாடல்களிலும் மற்றும் புதுக்கோட்டை செப்பேடுகளிலும் காணப்படுகின்றன. ஆவுடைராயத் தொண்டைமான் ஒரு பாளையக்காரர் போன்று தனக்குக் கிடைத்த பகுதியில் கி.பி.1661–ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்திருக்க வேண்டும். இவர்தான் தொண்டைமான் மன்னர் பரம்பரையின் தோற்றுவாய் (Progenetor) எனக் கருதப்படுகிறார். கி.பி.1661–இல் இவரது மகன் ரகுநாத ராயத் தொண்டைமான் இப் பகுதியின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார் – கி.பி.1661–ஆம் ஆண்டுவரை தஞ்சாவூர் நாயக்கர், மதுரை நாயக்கர், ராமநாதபுரம் சேதுபதி ஆகியோரிடம் படைத்தலைவராகப் பணி புரிந்து, பின்னர் மன்னர் அந்தஸ்துடன் புதுக்கோட்டைப் பகுதியை ஆளத்தொடங்கினர்.

## புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள்

| | |
|---|---|
| ரகுநாத ராயத் தொண்டைமான் | 1686–1730 |
| விஜய ரகுநாத ராயத் தொண்டைமான் | 1730–1769 |
| ராய ரகுநாதத் தொண்டைமான் | 1769–1789 |
| விஜய ரகுநாதத் தொண்டைமான் | 1789–1807 |
| விஜய ரகுநாத ராயத் தொண்டைமான் | 1807–1825 |
| ரகுநாதத் தொண்டைமான் | 1825–1839 |
| ராமச்சந்திரத் தொண்டைமான் | 1839–1886 |
| மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் | 1886–1928 |

# தொண்டைமான் மன்னர்களின் தோற்றம்

தொண்டைமான் மன்னர்களின் தோற்றம் (Origin) குறித்து ஆய்வாளர்களிடையே மிகுந்த கருத்து வேறுபாடுகள் உள்ளன.

கி.பி.12-13-ஆம் நூற்றாண்டிலிருந்து உள்ள புதுக்கோட்டை கல்வெட்டுகள் சிலவற்றில் தொண்டைமான் என்ற அடைமொழியுடன் காணப்படும் சில பெயர்களைக் கொண்டு புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்ட தொண்டைமான் மன்னர்கள் காலத்தால் முற்பட்ட மரபினர் என சிலர் குறிப்பிடுகின்றனர் (பு.க.எண்.547, 683, 823, 830, 879, 920, 934, 995). தொண்டைமான் இளந்திரையன், புராணங்களிலும் இலக்கியங்களிலும் இலக்கியப் பாடல்களிலும் வரும் தொண்டை '''ன் என வரும் பெயர்கள் ஆகியனவற்றையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அக் காலத் தமிழகத்தில் வாழ்ந்த கள்ளர் குல மக்களின் அடைமொழிகளுள் (பட்டப் பெயர் அல்லது கோத்திரப் பெயர்) தொண்டைமான் என்பதும் ஒன்றாகும். இவர்களுள், படைத் தலைவர்களாகவும் நாடாள்வோராகவும் இருந்தவர்களையே மேற்குறிப்பிட்ட கல்வெட்டுகள் குறிப்பிடுவதாகக் கருதலாம்.

முன்னர் குறிப்பிட்டவாறு வேங்கடப் பகுதியிலிருந்து இப் பகுதியில் குடியமர்ந்த தொண்டைமான் என பட்டப்பெயர் கொண்ட இனத்தவரின் ஒரு கிளைவழி மரபினரின் வழித்தோன்றல்களே புதுக்கோட்டை சமஸ்தானத்தை ஆண்டவர்களாதல் வேண்டும் எனக் கருத இடமுள்ளது. ஏனெனில், வெவ்வேறு காலக் கட்டங்களில் தொண்டைமான் என்ற பெயருடன் பல கிளை மரபினர் குறித்த செய்திகள் காணக்கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, புதுக்கோட்டை (சமஸ்தான) தொண்டைமான் மரபினரின் ஆட்சி அமைவதற்கு முன்பே அறந்தாங்கியில் தொண்டைமான் என்ற பட்டப் பெயருடன் குறுநில மன்னர்கள் சிலர் ஆட்சி செய்து வந்துள்ளனர். புதுக்கோட்டைக்கு அருகே உள்ளதொரு நிலப்பரப்பை ஆண்டுவந்த இவர்களைக்கூட

புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் பரம்பரையினருடன் தொடர்புபடுத்திக் காட்ட போதிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆகவே தொண்டைமான் என்ற பெயர் காரணம் கொண்டே இவர்கள் அனைவரையும் ஒரே தொகுதியினுள் அடக்கிவிடுவது ஏற்புடையதாக அமையவில்லை

புதுக்கோட்டை சமஸ்தானத் தொடக்கக் கால மன்னர்களின் ஆட்சியில் தெலுங்கு மொழிக்கு இருந்த செல்வாக்கினைக் கொண்டு இவர்களது தோற்றுவாய் குறித்த சில செய்திகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

1. தொண்டைமான் பரம்பரையின் முதல் மன்னர் விஜயநகர மன்னர்களின் பட்டமாகிய ராய என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். அதன்பிறகு ஆட்சிக்கு வந்த மன்னர்களும் இப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர்.

2. தெலுங்கு மொழிப்புலவர்கள் பலர் அரசவைக் கவிஞர்களாக இருந்துள்ளனர். புதுக்கோட்டை தெலுங்கு மொழியின் தென் மையமாகத் திகழ்ந்தது. தெலுங்கு இலக்கியங்கள் பல உருவாயின. அரசவைப் புரோகிதர்களாகத் தெலுங்குப் புரோகிதர்களே இருந்தனர். தெலுங்குப் படைவீரர்களின் குடியிருப்புகளும் இங்கு இருந்தன.

3. மன்னர் குடும்பத்தின் பயிற்று மொழி தெலுங்கு மொழியாகவே இருந்தது.

4. தொடக்க காலத் தொண்டைமான்கள் தெலுங்கு மொழியிலேயே கையொப்பமிட்டனர். அவர்களது வீரச் செயல்களும் வம்சாவளியும் தெலுங்கு மொழியிலேயே எழுதப்பட்டன.

5. தெலுங்கு மொழிக் கல்வெட்டுகள் 3 இங்கு காணப்படுகின்றன. (பு.க.எண்.890, 891,1903)

6. இங்கு செலாவணியிலிருந்த அம்மன் காசில் 1948–ஆம் ஆண்டுவரை தெலுங்கு எழுத்துக்களே பொறிக்கப்பட்டன.

7. தொண்டைமான் மன்னர்களின் அரச சின்னத்திலும் அரச முத்திரையிலும் ஸ்ரீ பிரகதாம்பாள் சகாயமு என்ற தெலுங்கு வாசகமே காணப்படுகின்றது.

தொண்டைமான் மன்னர்களுக்கும் தெலுங்கு மொழி பேசிய அவர்களது முன்னோர்களுக்குமிருந்த தொடர்புகளைக் காட்டுவதாகவே மேற்கண்ட செய்திகள் அமைகின்றன. விஜயநகர மன்னர்களின் படையெடுப்பை ஒட்டி, வேங்கடத்திலிருந்து இப் பகுதியில் குடியமர்ந்த இவர்கள், தெலுங்கு மொழியை வழக்கு மொழியாகக் கொண்ட அரச பரம்பரையினர் அல்லது அரசப்பிரதிநிதிகளாக ஆண்டவர்களின் பாரம்பரியத்துடன் நெருங்கிய உறவு கொண்டவர்களாதல் வேண்டும். புதுக்கோட்டையில் அவர்களது ஆட்சி மலர்ந்தபோது, தங்களது முன்னோர்களின் வழக்கு மொழியாகத் திகழ்ந்த தெலுங்கு மொழியை முன்னுரிமைப்படுத்துவது, அப்போதிருந்த அரசியல் சூழலில் தங்களது மேலாண்மையைக் குறிப்பதாக அமையும் என்பதாலும் தெலுங்கு மொழி வழக்கைப் பின்பற்றினர் எனக் கொள்ளலாம்.

விஜயநகர மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினாலேயே தெலுங்கு மொழி தொண்டைமான் மன்னர்களால் போற்றப்பட்டு வந்தது எனவும், மேலும் தொடக்கக் காலத் தொண்டைமான் மன்னர்கள் தங்களது தனி விருப்பத்தின் பேராலேயே தெலுங்கு மொழிப் புலமை பெற்று அம் மொழி இலக்கியங்களை வளர்த்திருக்கலாம் எனவும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தொண்டைமான் மன்னர்களின் ஆட்சி மலர்ந்த கி.பி. 17–ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் விஜயநகரப் பேரரசு என்று ஒன்று இல்லை என்றே சொல்லலாம். விஜயநகர மன்னர்களின் மேலாண்மையைப்

பெயரளவில் ஏற்றுக் கொண்டு, தன்னிச்சையாக மதுரை நாயக்கரும் தஞ்சாவூர் நாயக்கரும் தமிழகத்தை ஆண்டுவந்த காலம் அது. மேலும் புதுக்கோட்டை தொண்டைமான் பரம்பரையின் முதல் மன்னரான ராய ரகுநாதத் தொண்டைமான் விஜயநகர மன்னர்களின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு ஆண்டுவந்தார் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதும் இல்லை.

தங்களது ஆர்வத்தின் காரணமாக தெலுங்கு மொழியினை ஆதரிக்க எத்தனித்திருந்தால் தெலுங்கு மொழி இலக்கியத்தின் தென் மையமாக புதுக்கோட்டை திகழ்ந்திருக்குமா என்பது ஆராயப்பட வேண்டியதாகும். தொடக்க கால மன்னர்களின் தெலுங்கு மொழிப்புலமை, இங்கு அக் காலத்தில் தெலுங்கு மொழியின் வளர்ச்சி ஆகியவற்றைக் காணும்போது அம் மொழியுடன் நீண்ட காலமாக அவர்கள் கொண்டிருந்த தொடர்பைக் காட்டுவதாக அமைகிறது.

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் புதுக்கோட்டையை ஆளத்தொடங்கிய தொண்டைமான் மன்னர்களிடையே காலப்போக்கில் இப் பகுதி மக்களின் தொடர்புகளினால் ஏற்பட்ட அரசியல், மண உறவுகளின் காரணமாகத் தெலுங்கு மொழியின் செல்வாக்கும் பயன்பாடும் குறைந்திருக்க வேண்டும். ஆனால், தெலுங்கு மொழி அரச குடும்பத்தில் தொடர்ந்து பயன்படுத்துவது வழக்கத்திலிருந்தது.

தொண்டைமான் மன்னர்கள் இப் பகுதியில் வாழ்ந்த பல்லவராயர் போன்றோருடன் மண உறவு கொண்டனர். இதன் பயனாக, இப் பகுதியில் வாழ்ந்த பிற மக்களோடு இவர்களது தொடர்புகள் வலுப்பட்டன. எடுத்துக்காட்டாக, ராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் பல்லவராயர் பரம்பரையைச் சேர்ந்தவர். ஆனால் இவரும் தொண்டைமான் என்றே அழைக்கப்படுகிறார். மேற்கண்ட கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் பொதுவாகக் கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டவர்களிலிருந்து வேறுபட்ட தனியானதொரு கிளை மரபினர் எனக் கொள்வதே பொருத்தமாகும்.

# ரகுநாதராயத் தொண்டைமான்

ரகுநாதராயத் தொண்டைமான் கி.பி 1669–இல் தனது தந்தை வசமிருந்த கறம்பக்குடி, பிலாவிடுதி பகுதிகளின் பொறுப்பை ஏற்றார். அப்போது தஞ்சாவூரை அச்சுத விஜயராகவ நாயக்கரும் மதுரையை சொக்கநாத நாயக்கரும் ஆண்டு வந்தனர். ராமநாதபுரம், ரகுநாதத் தேவர் என்றழைக்கப்படும் திருமலை சேதுபதியின் பொறுப்பில் இருந்தது. தஞ்சையும் மதுரையும் விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டதாக (பெயரளவில்) இருக்க, ராமநாதபுரம் மதுரைக்கு உட்பட்டிருந்தது.

விஜயநகரப் பேரரசு குன்றியிருந்த நிலையில், பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களும் தமிழகத்தில் தங்களது செல்வாக்கை நிலைநிறுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர். மராட்டியர் தங்களது ஆளுகைக்குத் தகுந்த பகுதியை இங்கு தேடிக் கொண்டிருந்தனர். குழப்பமும் கலவரங்களும் நிறைந்த இந்தச் சூழ்நிலையில்தான் தொண்டைமான்களின் ஆட்சி அரும்ப ஆரம்பித்தது.

இக் காலக் கட்டத்தில் தனது செல்வாக்கை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்பிய ரகுநாதராயத் தொண்டைமான், தஞ்சை அச்சுத விஜயராகவ நாயக்கரின் படையுடன் சேர்ந்து பல போர்களில் கலந்து கொண்டு தனது வீரத்தை வெளிக்கொணர்ந்தார். தொண்டைமானின் வீரத்தையும் திறமையையும் பாராட்டிய தஞ்சை நாயக்கர் 'பெரிய ராமபாணம்' என்னும் விருதினையும் விலையுயர்ந்த வைரமாலையையும் அவருக்கு அளித்தார். இவை இன்றும் மன்னர் குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1673–ஆம் ஆண்டு வாக்கில் தஞ்சை நாயக்கர்ப் படைப் பொறுப்பிலிருந்து விலகித் தனது சொந்த ஊரான கறம்பக்குடிக்குத் திரும்பினார். தொண்டைமான் மன்னர்கள் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொண்டுள்ள 'விஜய' என்ற பெயர் தஞ்சை நாயக்கர்களால் வழங்கப்பட்டதாகும்.

இக் காலத்தில் மதுரை சொக்கநாத நாயக்கருக்கும் தஞ்சை அச்சுத விஜயராகவ நாயக்கருக்கும் நடைபெற்ற போரில் தஞ்சை நாயக்கர் இறந்துபட, மதுரை நாயக்கர் அரசவையில் குழப்பங்கள் குடிகொள்ள, நாயக்கரின் சகோதரர் முத்து அழகாத்திரி 1678-ல் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். திறமை குன்றியிருந்த முத்து அழகாத்திரிக்கு மக்களிடம் ஆதரவு இல்லை. மதுரை சேனையில் குதிரைப்படைத் தலைவனாக இருந்த ருஸ்தம்கான் இச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக்கொண்டு மதுரை அரசை கைப்பற்றி தன்னைத்தானே மன்னனென பிரகடனப்படுத்திக் கொண்டான்.

ருஸ்தம்கானிடமிருந்து மதுரையை மீட்க விரும்பிய ராணி மங்கம்மாள் (சொக்கநாத நாயக்கரின் அரசி) ராமநாதபுரம் மன்னன் கிழவன் சேதுபதி மற்றும் சில பாளையக்காரர்களின் துணையை நாடினார். இதன் விளைவாக ருஸ்தம்கானிடமிருந்து மதுரை கைப்பற்றப்பட்டது. இத்த முயற்சியில் ரகுநாதராயத் தொண்டைமானும் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். இந்த உதவிக்கு நன்றியாக 12 கள்ளர் குடிகளுக்குத் தலைமையாக இருக்கும் உரிமையும் திருச்சியில் அரசுக் காவலராக இருக்கும் உரிமையும் ரகுநாதராயத் தொண்டைமானுக்குக் கிடைத்தது.

ரகுநாதராயத் தொண்டைமானின் செயல்திறனைக் கேள்வியுற்ற ராமநாதபுரம் கிழவன் சேதுபதி, தொண்டைமானையும் அவரது சகோதரரையும் ராமநாதபுரத்துப் படைப்பிரிவுகளுக்குத் தலைவராக்கினார். அவர்களுடைய தலைமை, ராமநாதபுரத்துக்கு பல வெற்றிகளைத் தேடித் தந்தது. மேலும் தொண்டைமானின் சகோதரி காதலியைக் கிழவன் சேதுபதி திருமணம் செய்து கொண்டார். இத் திருமணத்தினால் இவர்களிடையே நெருங்கிய உறவு ஏற்பட்டதைத் தொடர்ந்து தமது மைத்துனர்களைத் தம்மைப்போல் ஒரு அரசிற்கு உரிய அரசராக்கிவிட வேண்டுமென கிழவன் சேதுபதி விரும்பினார்.

அச் சமயத்தில் இப்போதைய புதுக்கோட்டை மாவட்டத்தின் குளத்தூர், திருமயம் ஆகிய பகுதிகளைப் பல்லவராயர் மரபினர் ஆண்டு வந்தனர். சேதுபதி மரபினரைவிட பல்லவராயர் பழமை மிக்கவராயினும் இக் காலத்தில் சேதுபதியின் ஆட்சிக்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். புதுக்கோட்டைப் பகுதியை சிவந்தெழுந்த பல்லவராயர் என்பவர் ஆண்டுவந்தார்.

பல்லவராயர் சேதுபதியின் ஆட்சியிலிருந்து விலகி, சுயேச்சையாக ஆளவிரும்பித் தஞ்சை மராட்டிய மன்னர் எக்கோஜியின் உதவியை நாடிய செய்தியை அறிந்த சேதுபதி, பல்லவராயரின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து, அவர்களது ஆட்சிப் பகுதியின் பொறுப்பை ரகுநாதராயத் தொண்டைமானுக்கு அளித்து அவரை 1686-இல் மன்னர் அந்தஸ்திற்கு உயர்த்தினார். அப்போது புதுக்கோட்டைப் பகுதி பல்லவராயன் சீமை என்று அழைக்கப்பட்டது.

## புதுக்கோட்டை நகரின் தோற்றம்

புதுக்கோட்டை என்னும் பெயர், இங்கே புதிய கோட்டை கட்டப்பட்ட பின் ஏற்பட்டதாக இருக்கலாம். இதேபோன்று இங்கிலாந்தில், நியூகேசல் (New Castle) ரஷ்யாவில், நோவோகாரடு (Novogorodo) ஆகிய ஊர்கள் புதுக்கோட்டை எனப் பெயர் வரும்படி புதிய கோட்டைகளைப் பெற்றுள்ளதை இன்றும் காணலாம். தொண்டைமானின் ஆட்சியில் (கி.பி 1686-க்கு முன் திருமயம், கீழாநிலை, பிரட்டுநிலை, பிரான்மலை, பொற்பனைக்கோட்டை ஆகிய இடங்களில் இருந்த கோட்டைகள் அழிந்து விட்டன) புதிதாக நிர்மானிக்கப்பட்ட கோட்டை புதுக்கோட்டை எனப் பெயர் பெற்று, அந்தப் பெயரே ஊருக்கும் வழங்கப்பட்டதாகக் கொள்ளலாம். கி.பி 1686-இல் ரகுநாதராயத் தொண்டைமான் இப் பகுதியின் மன்னரானபோது புதுக்கோட்டையில் கோட்டை எதுவும் இருக்கவில்லை.

தொண்டைமான் பதவிக்கு வந்தபின் தற்போதைய புதுக்கோட்டை நகரம் உருவாக்கப்பட்டதாகத் தொண்டைமான் வம்சாவளி என்னும் தெலுங்குக் காவியம் தெரிவிக்கிறது. தற்போதைய புதுக்கோட்டை நகரின் கிழக்குப் பகுதி கலசமங்கலம் என்றும் மேற்குப் பகுதி சிங்கமங்கலம் என்றும் வழங்கப்பட்டது எனவும் இவ்விரண்டு பகுதிகளும் இணைந்தே புதுக்கோட்டை உருவானதாகவும் புதுக்கோட்டை மானுவல் கூறுகிறது. கலசமங்கலம் என்ற பெயரை தற்போதைய கலசக்காட்டில் (திருக்கட்டளை அருகில்) உள்ள ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஆனால் சிங்கமங்கலம் என்பது குறித்து எந்தவிதச் சான்றுகளும் கிடைக்கவில்லை. ஆகவே, எப் பகுதி சிங்கமங்கலம் என அழைக்கப்பட்டது என்பது சரியாகத் தெரியவில்லை. இவ் விரண்டு பெயர்களும் இணைந்து எப்படி புதுக்கோட்டை என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது பற்றியும் காலத்தால் முற்பட்ட சான்றுகள் கிடைக்கவில்லை. ஆவூரில் தங்கியிருந்த பாதிரியார் வெனான்சியஸ் புச்செட், 1700–இல் தயாரித்த வரைபடத்தில் புதுக்கோட்டை என்னும் பெயரைக் குறித்துள்ளார். ஆகவே, ரகுநாதராயத் தொண்டைமான் ஆட்சிக்கு வந்த பத்து ஆண்டு காலத்திற்குள் (கி.பி 1686+10) புதிய கோட்டையைக் கட்டிப் புதுக்கோட்டை எனப் பெயரிட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். ஆனால், கி.பி 1754–இல் புதுக்கோட்டை நகரில் கோட்டை கொத்தளங்கள் ஏதும் இல்லையென ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

ரகுநாதராய தொண்டைமானால் கட்டப்பட்ட கோட்டை கி.பி 1732–1734–இல் சந்தாசாஹிப் மற்றும் தஞ்சை மராட்டிய தளபதி ஆனந்தராவ் ஆகியோரின் படையெடுப்பின்போது அழிந்துபட்டிருக்க வேண்டும். அப்படி இடிந்து போன அழிந்த கோட்டை தற்போது அடப்பன் குளம் என்று வழங்கப்படும் குளத்திற்கு வட கிழக்குப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இன்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இப் பகுதியில் இடிந்துபோன சுவர்களின் எச்சங்களும் அகழி போன்ற அமைப்புகளும் காணப்பட்டன. தற்போது இப் பகுதிகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதியாக உள்ளன.

கோட்டை இடிக்கப்பட்டவுடன் அதன் அருகிலிருந்த சிவஞானபுரம் என்னும் இடத்தில் தொண்டைமான் ஒரு சிறிய அரண்மனையைக் கட்டிக் கொண்டதாகத் தர்பார் பதிவேட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிவஞானபுரம் என்னுமிடம் முன் சொன்ன கோட்டை அமைவிடத்திற்குத் தென்கிழக்கில் உள்ள பகுதியாகும்.

1813-இல் எழுதப்பட்ட புதுக்கோட்டைக் கணக்காய்வுக் குறிப்பு (Statistical Account of Pudukkottai) புதுக்கோட்டை நகரில் கோட்டை இருந்ததையும் 2 1/2 மைல் சுற்றளவிற்குச் சுற்று மதில்களும் இந்த சுற்று மதில்களின் நான்கு திசைகளிலும் காவல் வாயில்கள் இருந்ததாகவும் தெரிவிக்கிறது. இந்தக் காவல் வாயில்கள் வாடி என்று அழைக்கப்பட்டன ( மச்சுவாடி, அம்மன்வாடி ). புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகே இடிபாடுகளுடன் கூடிய மேடு ஒன்றை இன்றும் காணலாம். இது ஒரு காவல் வாயிலாக (Commanding Station) இருந்தது. இதற்குப் பக்கத்தில் அனுமார் கோயில் உள்ளது. இது கோட்டை அனுமார் என்று அழைக்கப்படுகிறது. அனுமார் கோட்டைக் காவல் தெய்வம் எனக் கோட்டைகள் குறித்த சாத்திர நூல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு அருகிலுள்ள குளம் 'கும்மந்தான் குளம்' என்று வழங்கப்படுகிறது. Commander Tank என்பது கும்மந்தான் குளம் என மருவி வழங்குகிறது.

கி.பி 1813-இல் புதுக்கோட்டை கணக்காய்வுக் குறிப்பு குறிப்பிடும் மேற்குறிப்பிட்ட கோட்டை தற்போது நகரின் மத்தியிலுள்ள பழைய அரண்மனையாக இருக்க வேண்டும். இதனைச் சுற்றி அகன்ற அகழியும் இருந்ததற்கான அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஏனெனில், கி.பி 1754-இல் கோட்டை ஏதும் இல்லை என்ற குறிப்பையும் 1813-இல் கோட்டை பற்றிய குறிப்பையும் காணும்போது மேற்கண்ட ஆண்டுகளுக்குட்பட்ட காலத்தில் பழைய அரண்மனை கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது விளங்கும்.

இது குறித்து மேலும் ஆய்வுகள் தொடர்கின்றன. பழைய அரண்மனையின் வானுயர்ந்த மதில்கள் சில ஆண்டுகளுக்கு முன் இடிக்கப்பட்டுப் புதிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டு இவ்வூரின் பழமைச் சுவடு தெரியாமல் மறைந்து கொண்டு இருப்பது வரலாற்று ஏடுகளுக்கு பெருத்த இழப்பாகும். ஆகவே, தற்போது கோட்டை ஏதும் இல்லாத ஊராக விளங்குகிறது புதுக்கோட்டை.

18-19-ஆம் நூற்றாண்டு பதிவுகளில் புதுக்கோட்டை என்னும் சொல் அரிதாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை சமஸ்தானம் தொண்டைமான் சீமை (Thondaiman Country) என்றே குறிக்கப்படுகிறது. மேலும் புதுக்கோட்டை என்று குறிக்கப்படும்போதெல்லாம் தொண்டைமான் புதுக்கோட்டை என்றே குறிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மானாமதுரைக்குப் பக்கத்தில் இருந்த புதுக்கோட்டை 'மறவன் புதுக்கோட்டை' எனக் குறிப்பிடப்படுகிறது. இன்றும் கூட தென் மாவட்டங்களில் நமது புதுக்கோட்டையைத் தொண்டைமான் புதுக்கோட்டை என்று அழைப்பதைக் காண்கிறோம்.

# புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகள்

புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகள் இருபத்து நான்கு கிடைத்துள்ளன. இவற்றுள் 9 செப்பேடுகள் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. அவை அனைத்தும்

| | | |
|---|---|---|
| ரகுநாத ராயத் தொண்டைமான் | கி.பி. | 1686–1730 |
| விஜய ரகுநாத ராயத் தொண்டைமான் | ,, | 1730–1769 |
| ராய ரகுநாதத் தொண்டைமான் | ,, | 1769–1789 |
| விஜய ரகுநாதத் தொண்டைமான் | ,, | 1789–1807 |

ஆகிய மன்னர்களின் காலத்தைச் சேர்ந்தவை. 23 செப்பேடுகள் தமிழிலும் ஒரு செப்பேடு தெலுங்கிலும் உள்ளன. மத்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் 13 செப்பேடுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. 1911–இல் ஒரு செப்பேடும் 1915–இல் ஒரு செப்பேடும் 1924–ல் ஒரு செப்பேடும் 1950–இல் 10 செப்பேடுகளும் படி எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ஏழு செப்பேடுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

து.அ. கோபிநாதராவ் அவர்களின் 'சங்கரமடத்துச் செப்பேடுக'ளில் ஒரு செப்பேடும், புதுக்கோட்டை சமஸ்தானத்துக் கல்வெட்டுத் தொகுதியில் ஒரு செப்பேடும், புலவர். செ.இராசு எழுதியுள்ள திருப்பனந்தாள் காசிமடத்துச் செப்பேடுகள் என்னும் நூலில் ஐந்து செப்பேடுகளும் பதிப்பிக்கப்பட்டு உள்ளன. திருப்பனந்தாள்மடம் (5), தருமபுரமடம் (2), திருவாவடுதுறை மடம் (1), சூரியனார்கோவில் சிவாக்கிரயோகிகள் மடம் (1) சங்கரமடம் (1) ஆகிய மடங்களுக்குப் பத்து செப்பேடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

நான்கு செப்பேடுகளில் அக்ரகாரம் அமைத்த கொடை கூறப்படுகிறது. அவை

(1) ரெகுநாத காதலி ஆயிபுர அக்கிரகாரம் (1709)

(2) கீரனூர் பேரய்யா அக்கிரகாரம் (1732),

(3) கீரனூர் மங்களாம்பா சமுத்திர அக்கிரகாரம் (1804)

(4) மலையூர் இராமச்சந்திர அக்கிரகாரம் (1803) என்பன.

ஆறு செப்பேடுகளில் சத்திரம் அமைத்த செய்தி கூறப்படுகிறது. அவை

(1) அடப்பங் கூத்தப்பன் சத்திரம் (சேதுமார்க்கம்) (1747)
(2) அடப்பன் கூத்தப்பன் சத்திரம் (சேதுமார்க்கம்) (1797)
(3) அடப்பன் கூத்தப்பன் சத்திரம் (காசி 1800)
(4) அம்மணி சத்திரம் (1799)
(5) அடப்பன் சுப்பிரமணியம் சத்திரம் (சேதுமார்க்கம்) (1803)
(6) திருச்சி இருசப்ப முதலியார் சத்திரம் (1805) என்பன ஆகும்.

காசி விஸ்வநாதர் கோவில், திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி கோவில், வைத்தீசுவரன் கோவில் வைத்தியநாத சுவாமி கோவில், துருவாசபுரம் திருமேனி நாதர்கோவில் ஆகிய கோவில்களுக்கு தொண்டைமான் அரசர்களால் பல கொடைகள் அளிக்கப்பட்டன. காசித் தலத்திற்கு ஐந்து செப்பேடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஏற்படுத்தப்பட்ட நான்கு சத்திரங்களும் சேது மார்க்கத்தில் (ராமேஸ்வரம் செல்லும் வழி) உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. சத்திரங்களுக்குத் தெப்பக் குளங்களும் நிலங்களும் பசு, எருமைகளும் பல்வேறு பாத்திரங்களும் அளிக்கப்பட்டன. அங்கு அன்னதானம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. சத்திரங்களுக்கு வாணியர் எண்ணெய் அளந்துள்ளனர். எண்ணெய் அளக்கப் பயன்பட்ட படி பல்லவன் படி என்று கூறப்படுகிறது.

பல செப்பேடுகளில் விசயநகர அரசர் கால்வழிகள் கூறப்பட்டு மதுரை நாயக்கர் வம்சாவளியும் கூறப்பட்டுள்ளது. சில தொண்டைமான் செப்பேடுகள் மதுரை நாயக்கர் ஆட்சியில் பொறிக்கப்பட்ட குறிப்பு உள்ளது. புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் தெலுங்கு பூர்வீகம் காரணமாகப் பெரும்பாலான செப்பேடுகளில் ஸ்ரீ ராமஜெயம் என்ற எழுத்துக்கள் மிகப் பெரிய அளவில் தெலுங்கில் பொறிக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை தொண்டைமான்கள் காசிபகோத்திரம் சார்ந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளனர். கானாட்டு சுபேதார் செங்கமலம்பிள்ளை அவருடைய இரண்டு மக்கள் கூத்தப்பன், சுப்பிரமணியம் ஆகியோர் இருவரும் விஜயரெகுநாதத் தொண்டமானிடம் தனி அந்தரங்க அலுவலராகப் பணிபுரிந்தனர் எனத் தெரிய வருகிறது.

அவர்கள் பார்த்த அலுவல் அடப்பம் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் பெயரில் மன்னர் விஜயரெகுநாதத் தொண்டைமான் (கி.பி. 1789–1807) சத்திரம் அமைத்தது அவர்களிடம் மன்னர் கொண்டு இருந்த அன்பைப் புலப்படுத்துகிறது.

மடங்கள் மீதும் அந்தணர்களிடமும் கோயில்களிடத்தும், அலுவலர்களிடத்தும் மக்களிடத்தும் தொண்டைமான் மன்னர்கள் கொண்டிருந்த அன்பு இச் செப்பேடுகள்மூலம் புலப்படுகிறது.

நிலக் கொடை செப்பேடுகளில் வாமனர் உருவம் பொறிப்பது வழக்கமாக இருந்துள்ளது. இச் செப்பேடுகள் பலவற்றை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே எழுதியுள்ளனர். அவர்கள் குறித்த செய்தி கீழ்க்கண்டவாறு பதிவாகியுள்ளது.

பழனியப்ப வாத்தியார்
|
ரகுநாத வாத்தியார்
|
பழனியப்ப வாத்தியார்
|
ரகுநாத வாத்தியார் — வடமலை வாத்தியார்

கொடை நிலங்களுக்கு நாற்பாங்கு எல்லைகள் கூறப்படுவதுடன் வயல், காடுகளுக்குப் பெயர்களும் கூறப்படுகின்றன. சில இடங்களில் நிலம் உழுகின்ற ஏர்க் கணக்கில் கூறப்பட்டுள்ளன.

செப்பேடு 'தாம்புர சாதனைப் பட்டயம்' எனக் குறிப்பிடப்படுகிறது. தொண்டமான் ஊரணி, தொண்டமான் புன்செய் என அரசர் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஊரில் அனுபவிக்கும் சுவந்திரம் 18 என்று கூறப்படுகிறது. அவை ஆவிரை, கொளிஞ்சி, அறுகு, தாளிவைப்பு, செம்பு, மாவடை, மரவடை, மேல்நோக்கிய மரம், கீழ்நோக்கிய கிணறு, கோவில், குளம், பெரு நீர்நிலை, சிறு நீர்நிலை, நீர்வரும் ஆறு, தான் போகும் குளக்கால், பறைமை, வலைமை, அம்பலம், உம்பளம் என்பன. இவையன்றி அனாதி தரிசு, உடைப்பு, ஏந்தல், ஓடை, குட்டை, குளம், திட்டு, திடல், தோப்பு, தொரவு என்பனவும் கூறப்படுகின்றன.

பெரும்பாலான கொடைகள் பவுர்ணமி, அமாவாசை, கிரகண நாட்களில் கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு வரிகளும், வருவாய் பற்றிய சொற்களும் காணப்படுகின்றன. ஆளமைஞ்சி, இடங்கை, வலங்கை, இடுகாடு, இறை, ஊழியமாழியம், காணிக்கை, கொட்டிய எருது, சுரப்பிபசு, சேத்துக்காணிக்கை, செம்புவிலை, சீட்டு, சொர்ணாதாயம், நீராணிக்கம், படுதுறை, பலவரி, பள்வரி, பலசுவந்திரம், பொடிவிலாடம், பாசிவிலை, புல்லுவரி, பெட்டி, பைங்குடி, மடத்துவரி, யாவிரை வகையறுப்பு, வண்டில்மாடு வரிவலை, வலங்கை, விருட்சம், வேண்டுகோள்வரி என்பன அவை.

மத்தியத் தொல்லியல் துறை, தொண்டைமான் செப்பேடுகள் அனைத்தையும் விஜயநகரச் செப்பேடுகள் என்று குறித்துள்ளதும், அரசர் பெயர்களாக ஸ்ரீரங்கராயர், வெங்கடதேவர் என்று கூறுவதும் பிழையாகும். 1805-ஆம் ஆண்டுச் செப்பேட்டைக் கூட விசயநகர மன்னர் செப்பேடு என்று குறித்துள்ளனர்.

தொண்டைமான் செப்பேடுகளில் 5 செப்பேடுகள் முற்றுப்பெறாத செப்பேடுகள் ஆகும். அவை அனைத்தும் விஜயரகுநாதக் தொண்டைமான் (1789-1807) காலத்தைச் சேர்ந்தவை.

இச் செப்பேடுகளில் காணப்படும் செய்திகளிலிருந்து தொண்டைமான் மன்னர்களின் அறச்செயல்கள் தெரியவருகின்றன.

# செப்பேடுகள்- அறிமுகம்

வரலாறு எழுதப் பயன்படும் ஆவணங்களில் கல்வெட்டுக்களைப் போல செப்பேடுகளுக்கும் மிகுந்த பங்கு உண்டு. முன்பு அரசு ஆவணங்களும் ஆணைகளும் கொடைச் செய்திகளும் பெரும்பாலும் ஓலைகளிலேயே எழுதப்பட்டன. அந்த ஓலைகளின் இறுதியில் 'சிலையிலும் செம்பிலும் செய்து கொள்ளுக' என்று சில சமயங்களில் எழுதப்படுவதும் உண்டு. சிலை என்பது கல் ஆகும். அந்த வகையில் செப்பேடுகளை மூன்றாம் பிரதி என்று கூறுவர். பண்டைய சட்ட நூல்கள் இத்தகைய செப்புப் பட்டயங்களை தாமிர பத்ரம் எனக் குறிப்பிடுகிறது. கி.பி. 4-ம் நூற்றாண்டில் இந்தியாவில் செப்பேடுகள் வழங்கப்பட்டதாக சீனப் பயணி பாஉறியான் கூறுகிறார். தென்னிந்தியாவின் செப்பேடுகள் தனிப் பட்டயங்களாகவும் பல தகடுகள் கொண்டு புத்தகங்கள் போன்றும் காணப்படுகின்றன. முதலாம் இராசேந்திர சோழனின் கரந்தைச் செப்பேடு 57 ஏடுகளை உடையது 17-ஆம் நூற்றாண்டிலிருந்து செப்பேடுகளின் வழக்கு பெருமளவில் நடைமுறைக்கு வந்தது.

பாண்டிய மன்னர் கி.பி 768-இல் வெளியிட்ட வேள்விக்குடிச் செப்பேடு பழமையான பாண்டியர் செப்பேடு ஆகும். தொடக்க கால மன்னர்கள் அதிக அளவில் செப்பேடுகளை வெளியிடவில்லை. பிற்காலச் சோழர், பாண்டியர் வீழ்ச்சிக்குப் பின் நாடாண்ட விஜயநகரப் பேரரசர்கள் அவர்களுக்கு கீழ் இருந்த தஞ்சாவூர், மதுரை நாயக்கர்களும் மதுரை நாயக்கரின் கீழிருந்து ராமநாதபுரத்தை ஆட்சி செய்த சேதுபதி மன்னர்கள், அறந்தாங்கித் தொண்டைமான், புதுக்கோட்டைத் தொண்டைமான், மராத்தியர், சமுதாய சாதித் தலைவர்கள் ஆகியோர் மிகுந்த அளவில் செப்பேடுகளை வெளியிட்டுள்ளனர்.

கோயில்களுக்கும் மடங்களுக்கும் அந்தணர்களுக்கும் நிலங்களை வழங்கியுள்ள செய்திகளே செப்பேடுகளில் அதிகமாகக்

காணப்படுகின்றன. மகமை என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து கோயில்களுக்கும் மடங்களுக்கும் வரி கிடைக்க ஏதுவாக ஆணை பிறப்பித்தும் செப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன. செப்பேடுகள் வரலாற்று ஆதாரங்களாக பயன்படுவதோடு சொத்து ஆவணங்களாகவும் விளங்கி வந்துள்ளன. தமிழ்நாட்டில் ஏறக்குறைய 600 செப்பேடுகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. ஆனால் பாதிக்கு மேல் பதிப்பிக்கப்படவில்லை. சில செப்பேடுகள் கிரந்த எழுத்து மற்றும் தமிழ் எழுத்து கலந்து தயாரிக்கப்பட்டிருக்கும். ஆனால், பெரும்பாலான செப்பேடுகள் தமிழிலேயே உள்ளன.

செப்பேடுகளின் தொடக்கம் கல்வெட்டுக்களைப்போலவே மங்கல வாசகத்துடன் ஆரம்பமாகும். பெரும்பாலும் ஸ்வஸ்திஸ்ரீ என ஆரம்பமாகும். பிள்ளையார் சுழியும் மங்கலக் குறியாக சில செப்பேடுகளில் இடம்பெறுகின்றது. மங்கலச் சொல்லை அடுத்து பெரும்பாலும் மன்னன் பெயர் சொல்லப்பட்டிருக்கும். மெய்க் கீர்த்தி அல்லது புகழ்ச்சி மாலையைக் கூறிய பின் மன்னர் பெயர் கூறப்படும். புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகளில் விஜயநகர வேந்தர் மற்றுமவர் கீழ் இருந்த நாயக்கரின் மெய்க் கீர்த்தியும் பிறகு தொண்டைமான் மன்னர்களின் புகழ்ச்சி மாலையும் இடம் பெற்றிருக்கின்றன. புராண புருஷர்களுடன் தங்களை ஒப்பிட்டு மகிழ்வதில் சிற்றரசர்கள் பெரிதும் இன்புற்றார்கள். தொடர்ந்து மன்னர் பெயரைக் காணலாம். பெரும்பாலான செப்பேடுகளில் ஆட்சியாண்டு எழுத்துக்களிலேயே கூறப்பட்டிருக்கும். விஜயநகர அரசு மரபு தொட்டு செப்பேடுகளில் கலி வருடம், சக வருடம், கொல்லமாண்டு, தமிழாண்டு ஏதாவது ஒன்றோ, இரண்டோ இடம் பெறும்.

தமிழாண்டு (பிரபவ தொடங்கி) மாதம், தேதி,பட்சம், நட்சத்திரம், திதி, கிழமை, யோகம், வேளை போன்றவை கூறப்படும். சந்திர சூரிய கிரகணங்கள், சங்கராந்தி போன்றவையும் கூறப்பட்டிருக்கும். அதிகமான செப்பேடுகளில் சக ஆண்டு என்ற குறிப்பைக் காண்கிறோம். செப்பேட்டில் சக ஆண்டு குறிப்பிட்டிருந்தால்,

அதற்குச் சமமான கிருஸ்துவ ஆண்டைக் கணக்கிட 78 கூட்ட வேண்டும். (சகம் 1665 + 78 = கி.பி.1743) சில செப்பேடுகளில் மன்னரின் ஆட்சியாண்டு குறிப்பிடப்பட்டிருக்கும். கி.பி. 11–ஆம் நூற்றாண்டு வரை பெரும்பாலும் தானம் தந்தவர்கள் அரசர் அல்லது உயர்குடிப் பிறந்தவர்களாகவே இருந்தனர். பிற்காலத்தில் அனைத்துத் தரத்து மக்களும் கொடைகள் அளித்துச் செப்பேடுகள் வெளியிட்டுள்ளனர். கோயில் வழிபாடு செய்வதற்கும் சத்திரங்களை நிர்வகிப்பதற்கும் பிராமணர்களுக்கும் செயற்கரிய செயல்கள் செய்தோருக்கும் இன்னும் பல செயல்களுக்காகவும் செப்பேடுகள் வழங்கப்பட்டன. செப்பேடுகளில் தானம் பெறுபவர்கள் பெயர், ஊர், குலம், கோத்திரம், யாவும் கூறப்படும். பின்னர் கொடையாக வழங்கப்பட்ட ஊர், நிலம் ஆகியன நான்கெல்லையுடன் குறிப்பிடப்பட்டிருக்கும். மன்னர் உத்தரவாக செப்பேடு வெளியிட்ட பின் செப்பேடுகளில் கண்ட தானங்களை நிறைவேற்றும் கடமை ஊரவை அல்லது கோயில் ஸ்தானிகளுக்கு உரியது ஆகும். சில சமயம் தனி நபர் பெயரும் கூறப்பட்டிருக்கும். செப்பேடுகளின் இறுதியில் சாட்சிகளின் பெயர், வாசகம் தயாரித்த ஊர்க் கணக்கன் அல்லது மத்தியஸ்தன், செப்பேட்டை வெட்டியவர்கள் ஆகியோர் பெயர்களும் இடம் பெற்றிருக்கும். மேலும், தானத்தினை காப்பாற்றுவது குறித்து காப்புரையும் காணப்படும். தானத்தை காப்பாற்றுவதால் ஏற்படும் நன்மைகளும் கெடுதல் செய்வதால் ஏற்படும் தீங்குகளும் விளக்கப்பட்டிருக்கும். செப்பேடுகள் பெரும்பாலும் ஆவணமாக இருப்பதால் செப்பேடு வாசகங்களைப் பொறித்தவர்கள் கற்றறிந்தவர்களாக இருந்தனர்.

செப்பேட்டைப் பொறித்தவர்கள் கொல்லர்கள் ஆகலாம். சிற்பிகள், ஆசாரிகள், கருமாரர்கள் என்றும் வழங்கப்படும் விசுவகர்மா இனத்தவர்களே இவர்களாதல் வேண்டும். இவர்கள் வடமொழி, தமிழ்மொழி இரண்டிலும் புலமை வாய்ந்தவர்களாக விளங்கினர் என்பது சிறப்பான செய்தியாகும். புதுக்கோட்டை தொண்டைமான் செப்பேடுகளை வாத்தியார்கள் எனப்படும் பெயர் கொண்டோர் எழுதியுள்ளனர்.

# 1. களத்தூர்ச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | காரைக்குடித் தமிழ்ப் பேராசிரியை வள்ளி அவர்கள் இல்லம் |
| அரசர் | : | ரகுநாத சேதுபதி காத்த தேவர், (ராய தொண்டைமானார், ரகுநாத ராய தொண்டைமானார்) |
| காலம் | : | 20-11-1709 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 27 செ.மீ X 16 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

இச் செப்பேடு துளை இல்லாத அழகிய கைப்பிடியை உடையது. கைப்பிடியின் கீழ் 'ஸ்ரீ ஸுபமஸ்து' என எழுதப்பட்டுள்ளது. கிரந்தச் சொற்கள் சற்று அதிகம் கலந்துள்ளன.

1639-இல் விசய நகர மன்னர் பெரிய வேங்கடராயர் (1630-1642) இராமேசுவரம் யாத்திரை வந்தார். யாத்திரை சிறப்பாக நடைபெற உதவி புரிந்தவர் கறம்பக்குடி ஆவடை தொண்டைமான் என்னும் கள்ளர் சமூகப் பெருவீரர். அவருக்கு விசயநகர மன்னர் ராய என்னும் பட்டம் கொடுத்துச் சிறப்பித்தார். ஆவடைராயத் தொண்டைமான் என அவர் அழைக்கப்பெற்றார். அவர் சேதுபதி மீது பாசம் கொண்டவர். தன் மகனுக்கு இரகுநாதராயத் தொண்டைமான் என்னும் பெயரைச் சேதுபதி நினைவாகச் சூட்டினார். ஆவடைராயத் தொண்டைமான் கி.பி. 1661-இல் காலமானார்.

கிழவன் சேதுபதி என்னும் ரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் கறம்பக்குடியைச் சேர்ந்த அந்த ஆவடை தொண்டைமானார் மகன் ரகுநாதராயத் தொண்டைமானாரை தம் படைத்தலைவராக நியமித்தார். ஆவடைராயத் தொண்டைமானார் மகளும் ரகுநாதராயத் தொண்டைமானாரின் சகோதரியுமான காதலி நாச்சியாரைக் கிழவன் சேதுபதி (ரகுநாத சேதுபதி காத்த தேவர்) திருமணம் செய்து கொண்டார்.

தம்முடைய மைத்துனர் இரகுநாதராயத் தொண்டைமானுக்குப் பெருமை தரவேண்டும் என்பதற்காகவே புதுக்கோட்டைத் தொண்டைமான் அரச மரபினை கி.பி.1686-இல் கிழவன் சேதுபதி ஏற்படுத்தினார். இரகுநாதராயத் தொண்டைமான் தன் 45-ஆம் வயதில் புதுக்கோட்டை அரசரானார் (1686-1730).

இச் செப்பேட்டில் காதலி நாச்சியார் 'ரெகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் தர்மபத்நியான ராய தொண்டைமானார் புத்ரி ரெகுநாதராய தொண்டைமானார் சகோதரியாரான காதலி நாச்சியாரவர்கள் என்று குறிக்கப்பெறுகிறார். அப் பெயர் இராமேசுவர அம்மன் 'மலைவளர் காதலி, என்ற பெயரின் ஒரு பகுதியாகும். அப் பெயர் 'பர்வதவர்த்தினி, என்ற பெயரின் தமிழாக்கமாகும். 20-11-1709 அன்று தேர்போகி நாட்டில் உள்ள களத்தூருக்கு 'ரெகுநாத காதலி ஆயிபுரம், என்று பெயர் மாற்றி 55 பாகமாகப் பிரித்து 55 அந்தணர்களைக் குடியேற்றிக் கொடையாக அளிக்கப்பட்டு அக்கிரகாரம் ஏற்படுத்திய கொடைச் செய்தி இச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

அப் பகுதியில் பல களத்தூர்கள் இருப்பதால் இக் களத்தூர் தேர்போகி களத்தூர் என்று அழைக்கப்பட்டது. இன்று மக்கள் அதனை டி. களத்தூர் என அழைக்கின்றனர்.

இக் கொடை இராமேசுவரத்தில் தனுஷ்கோடிக் கரையில் வீரம நல்லூரில் இருக்கும் வெங்கடேஸ்வர ஐயர் மகன் சங்கர நாராயண ஐயர் வசம் தானமாகக் கொடுக்கப்பட்டது. இக் கொடை கொடுக்கப்பட்ட நாள் அமாவாசை என்பது குறிப்பிடத்தக்கது.

களத்தூருக்கு எல்லையாகக் கிள்ளிக்குடிக் கண்மாய், தேர் போகியில் தேனாறு, கொட்டாங்குடி வயல், திருத்தங்கூர் பாம்பாறு ஆகியவை கூறப்பட்டுள்ளன.

நஞ்சை, திட்டு, திடல், மாவடை, மரவடை, கிணறு, மரம், குளம், குட்டை, ஏந்தல், பிறவடை, பாசி, பயிலை, ஆவிரை, கொளுஞ்சி, தேன்படு பொதும்பு, ஊரணி, உடைப்பு, மீன்படு பள்ளம், குரம்பிணி, குறிப்பு முதலிய எல்லாம் கொடையாக அளிக்கப்பட்டன.

பள்வரி, பலவரி, மடத்துவரி, வேண்டுகோள்வரி, செம்புவிலை, காணிக்கை, வண்டில்மாடு, கொட்டில் எருது, சுரப்பிபசு, பொடிவிலாடம், நீராணிக்கம் இவைகளில் உண்டான சகல வரியையும் நீக்கிச் சர்வமானியமாகக் கொடையாக இவ்வூர் கொடுக்கப்பட்டது.

இச் செப்பேடு சேது மன்னர் பாரம்பரியம் குறித்த செப்பேடாயினும் இரண்டு தொண்டைமானார் பெயரும் தொண்டைமானார் குடும்பத்துப் பெண் காதலி நாச்சியாரும் குறிக்கப்பட்டுத் தொண்டைமான் – சேதுபதி வரலாற்றுத் தொடர்பைக் கூறும் காரணத்தால் இத் தொகுப்பில் சேர்க்கப்பட்டது.

இன்றைய புதுக்கோட்டை மரபுத் தொண்டைமானார் பெயர் குறிக்கப்படும் முதல் செப்பேடு என்னும் பெருமை இச் செப்பேட்டுக்கு உண்டு.

## மூலம்

### முதல் பக்கம்

### ஸ்ரீ ஸுபமஸ்து

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாஹந சகாப்தம் 1631 இதின் செல்லாநின்ற விரோ
2. திநாம ஸம்வத்ஸரத்தில் தெக்ஷிணாயநத்தில் ஸரம ரிதுவில் கார்த்திகை மீ ல் கிர்ஷ்ண
3. பக்ஷத்தில் அமாவாஸையும் ஆதித்யவாரமும் அநுராயா் நட்சத்திரமும் ப்ரிதிநாம யோக
4. மும் நாகவாகரணமும் ஸுபயோக ஸுபகரணமும் கூடின புண்ணியதிநத்தில், தே
5. வை நகராதிபந், ஸேதுமூல ரக்ஷாதுரந்தரந், (ராமநாதஸ்வாமி கார்யா துரந்தர)
6. ராமநாத ஸ்வாமி கார்ய துரந்தரந், ஸிவபூஜா துரந்தரந். பரராஜ சேகரன்.
7. பரராஜகஜ ஸிம்ஹம், ரவிகுலசேகரந், ரவிமாத்தாண்டன், சொரிமுத்துவன்
8. னியன், ஸ்வஸ்தி ஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரந், அரியராயதள விபாடன், பாஷை

9. க்குத் தப்புவார் கண்டன், மூவராயிர கண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
10. ன், பட்டமானங் காத்தான், துட்டராயிர கண்டன், புவநேக வீரன், வீரகஞ்சுகன், வீரவள
11. நாடன், வீரவெண்பாமாலை, இளஞ்சிங்கந் தளஞ்சிங்கம், பகைமன்னர் சிங்கம், துரை
12. ராயன், ஆத்திறப்பாச்சி, கடலில்ப்பாச்சி, மதப்புலி, அடைக்கலங்காத்தான், தாலிக்கு
13. வேலி, சத்துருவாதியள் மிண்டன், வன்னியராட்டந் தழைத்தான், மேவலர்கள் கோளரி.
14. மேவலர்கள் வணங்குமிரு தாளினான், வீரமஹா கெம்பீரன், கீர்த்திப் பிரதாபந், ஆரியம
15. ருங்காத்தான், தொண்டியந்துறை காவலன், துர்க ரேபந்தன், அனுமகேதநன், பரதள
16. விபாடன், குடைக்குக் கர்ன்னன், பரிக்கு நகுலன், அரசராவணராமன், அடியார் வேளைக்கா
17. றன், உரிகோல் சுரதாநன், அந்தம் பிர கண்டன்,மூவராயிர கண்டன், சாடிக்காறர் கண்ட
18. ன், ஸ்வாமித்துரோகியள் மிண்டன், பஞ்சவன்ன ராயராவுத்தன், பனுக்குவார் கண்டன், இ
19. வுளிபாவடி மிதிதேறுவார் கண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதா
20. ன், பாண்டிமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிட்டாபனாசாரிய
21. ன், பூர்வ தெக்ஷண பச்சிம உத்திர சப்த ஸமுத்திராதிபதி, ஈளமுங் கொங்கும் யாழ்பாண
22. பட்டணமும் கெசவேட்டை யாடியருளிய ராசாதிராசன், ராசபரமேஸ்வரந், நவகோடி
23. நாராயணந், நவகண்ட சக்ரவத்தி, மலைகலங்கிலும் மனங்கலங்காத கண்டன், கொட்ட
24. மடக்கி, வைய்யாளி நாராயணன், காவிக்குடையான், பரதநாடகப் பிரவீணன், கருணாக
25. டாக்ஷன். காமிநி கந்தற்பன், சத்யபாஷா ஹரிச்சந்திரன், சங்கீத சாகித்ய வித்யா விநோதந்

## இரண்டாம் பக்கம்

26. வீரதண்டை சேமத்தலை விளங்கமிரு தாளிநான், ஸத்ரஜனா ஸேதுகா
27. வலன், வம்சாதிபநாதன் துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான குலோத்துங்க சோழ நல்லூர் கீழ்ப்ப
28. ால் விரையாத கண்டனில் இருக்கும் ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத ஸேதுபதி காத்ததேவரவ
29. ர்கள் புத்ரன் ஸ்ரீ ஹிரண்ய கர்ப்பயாஜி ரெகுநாத ஸேதுபதி காத்த தேவரவர்கள் தர்மபத்நியா
30. ன ராய தொண்டமானார் புத்ரி ரெகுநாத ராய தொண்டைமானார் சஹோதரியரான கா
31. தலி நாச்சியாரவர்கள், நானா கோத்ரத்தில் நானா சூத்ரத்தில் நானா ஸாகாத்யாயியா
32. ளான ஷடியமருஷ்ண கோத்திரத்தில் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் யஜுஸ்ஸாகாத்யாயியா
33. ன குமரண்டூர் வீரமநல்லூரில் இருக்கும் வெங்கடேஸ்வரய்யன் புத்ரந் ஸங்கரந
34. ாராயணய்யன் முதலாகிய பிராமணருக்கு ராமீஸ்வரத்தில் தனுஷ்கோடிக்கரை
35. ரயில் அக்ரஹாரத்துக்கு ஸங்கரநாராயணய்யன் கய்யில் ஸஹிரண்யோதக தா
36. ராபூர்வமாக ப்ரமாநம் பண்ணிக் கொடுத்தோம். கிராமமாவது தேர்போகி நாட்டி
37. ல் களத்தூருக்கு எல்கையாவது : கிள்ளிகுடி கண்வாய்க்கு மேற்கு, தேர்போகியி
38. ல்த் தேனாற்றுக்கு வடக்கு, கொட்டங்குடி வயலுக்கு கிழக்கு, திருத்தங்கவர் பாம்பாற்றுக்குத் தெ
39. ற்கு, இந்தப் பெருநான்கெல்லைக்குள்பட்ட களத்தூருக்குப் ரதிநாமமான ரெகுநாத
40. காதலி ஆயிபுரம் கணஸங்கைய பாகம் 55, இந்த பாகம் இதிலுள்ள நஞ்சை திட்டுத் திட
41. ல் மாவடை மறவடை கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய மரம் குளகுட்டம் ஏந்தல் பிறவடை

42. பாசி படுகை ஆவிரை கொழிஞ்சி தேன்படுபொதும்பு ஊஹறணி
உடைப்பு மீன்படுபள்ளம்

43. குரம்பிணி குளிப்பு இதிலுள்ள பள்வரிப் பலவரி மடத்துவரி
வேண்டுகோள் செம்புவிலை

44. காணிக்கை வண்டில்மாடு கொட்டிய எருது சுரவிப்பசு
பொடிவிலாடம் நீராணி

45. க்கம் யிதிலுண்டான சகலவரியும் தங்களுக்கு
ஸர்வமாந்யமாகக் கட்டளை இட்டபடியி

46. னாலே யிதிலுள்ள நிதி நிக்ஷேப ஜல தரு
பாஷாணாக்ஷியாகாம்ய ஸித்த ஸாத்யமென்

47. று சொல்லப்பட்ட அஷ்டபோக தேஜஸ்வாமியங்களும்
சந்திராா்க்கஸ்தாயியாக புத்ர பௌத்ர பா

48. ரம்பர்யமாக தாநாதி விநிமய விக்ரயங்களுக்கும்
யோக்கியமாக ஆண்டனுபவிக்க

49. க்கடவாராகவும், இந்த தம்மத்தைப் பரிபாலநம்
பண்ணினபேர் கோடி சிவலிங்

50. க பிரதிஷ்டையும், கோடி பிரம்ம பிரதிஷ்டையும் பண்ணின
ஸ°கத்தை யடைவாராகவும்

51. இந்த அக்ரஹாரத்துக்கு யாதாமொருவன் துரோகம்
பண்ணினவன் கெங்கைக் கரையி

52. லே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போவானாகவும்.

# 2. கீரனூர் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1730–1769) |
| காலம் | : | 28–5–1732 |
| மொழி | : | தெலுங்கு |
| அளவு | : | 30 செ.மீ X 20.5. செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

புதுக்கோட்டை தொண்டைமானார் மரபினரின் தெலுங்குச் செப்பேடு இஃதொன்றேயாகும். புதுக்கோட்டை தொண்டைமான் மரபில் கிடைத்துள்ள முதல் செப்பேடும் இதுவேயாகும். உயரம் குறைவான சிறு கைப்பிடியின் மையப்பகுதியில் துளையுள்ளது. துளையின் இரு புறங்களிலும் சூரியன், சந்திரன் வரையப்பட்டுள்ளது. பிற செப்பேடுகளில் உள்ள சூரியன், சந்திரன் போல இல்லாமல் இச் செப்பேட்டின் கைப்பிடியில் வரையப்பட்டுள்ள சூரிய சந்திரன் கீழ் வளைகோடுகள் இணைக்கோடுகளாக வரையப்பட்டுள்ளன. அவை ஆகாயத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆகாயத்தில் சூரியனும் சந்திரனும் மிதந்து கொண்டுள்ளது போன்ற காட்சி எளிய முறையில் உயர்வாகக் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தெலுங்குச் செப்பேட்டின் தமிழாக்கம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

செப்பேட்டின் மையத்தில் ஒரு ஓரத்தில் சிறு துளை உள்ளது. இத் துளை வேறு எந்தச் செப்பேட்டிலும் காணப்பெறாத அமைப்பினை உடைய துளையாகும். இரண்டாம்பக்க இறுதியில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதியுள்ளனர்.

இச் செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

விசையரகுநாத ராயத் தொண்டைமானார் அவர்கள் 28-5-1732 அன்று சந்திர கிரகணப் புண்ணியநாளில் ஸ்ரீவத்ச கோத்திரத்தைச் சேர்ந்தவரும் யஜுர்வேதம் பயின்றவரும் ஆதப்பையரின் பேரனும் எல்லமரசய்யா மகனும் ஆன பேரய்யா அவர்களுக்குக் கீரனூரைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது. கீரனூரில் பேரய்யாவிற்கு அக்கிரகாரம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.


விசையரகுநாதராயத் தொண்டைமானார் முதல் அரசரின் மகன் திருமலைராயத் தொண்டைமானுக்கும் பன்றி கொண்டார் குடும்பத்துப் பெண்ணான நல்லாயி ஆயிக்கும் 1713-இல் பிறந்தவர். இவர் தந்தை திருமலைராயத் தொண்டைமான் 1729-இல் இறந்துவிடவே தன் தாத்தாவை அடுத்து 1730-இல் பட்டம் ஏற்றார். புதுக்கோட்டை தொண்டைமான் மரபின் முதல் அரசர் ரகுநாதராயத் தொண்டைமானின் பேரரான இவர் புதுக்கோட்டை மரபின் இரண்டாவது அரசராவார்.

திருச்சிராப்பள்ளிச் சாவடிக்குத் தெற்கு கபிலநாடு மகாணத்துக்கு நாயகம் ஆன புதுக்கோட்டைக்குக் கிழக்கேயுள்ள கோனாடு மகாணத்தில் கீரனூர் உள்ளதெனக் கூறப்பட்டுள்ளது.


கீரனூரின் எல்லைகளாக நல்லூர் எல்லை, இல்லனிப்பட்டி, சித்தூர், நிலைப்பட்டி ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இறுதிப் பகுதியில் தானத்தைக் காப்பது பற்றிய சில வடமொழிச் சுலோகங்கள் தெலுங்கு எழுத்துகளிலேயே எழுதப்பட்டுள்ளன.

இச் செப்பேடு மட்டுமின்றி இந்தச் செப்பேட்டிற்குப் பின்னர் வெளியிடப்பட்ட புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர் செப்பேடுகள் பலவற்றில் சேதுபதி செப்பேடுகள் போலவே 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.



2. கீரனூர் செப்பேடு முதல் பக்கம்



2. கீரனூர் செப்பேடு இரண்டாம் பக்கம்

# செப்பேட்டின் மொழி பெயர்ப்பு

ஸ்வதிஸ்தி ஸ்ரீ விஜயாப்புதைய சாலிவாகன சகாப்தம் 1654 கலியப்தம் 4833 பரிதாபி வருடம் ஜேஷ்ட சுத்தம் 15க்கு ஞாயிற்றுக் கிழமை கேட்டை நட்சத்திரம் சௌபாக்கிய நாம யோகம் பத்ரவாகரணம் கூடிய இந்நாளில் சந்திர கிரகணம் என்னும் புண்ணிய காலத்தில் ஸ்ரீமத் ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வர ராஜவீர பிரதாப ஸ்ரீ வீர வெங்கடதேவ மகாராயர் அவர்கள் விஜயநகரத்தில் வாழ்ந்து கொண்டு ரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து பிருத்விராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டுவரும் நாளையில் காஷ்யப கோத்திரம் இந்திரவம்சம் ரகுநாத ராய தொண்டைமானார் அவர்களின் பேரன் திருமலை ராய தொண்டைமானார் அவர்களின் மகன் விசைய ரகுநாத ராய தொண்டைமானார் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம் யஜுர் வேதம் பயின்ற ஆதப்பையா அவர்களின் பேரன் எல்லமரசய்யா அவர்களின் மகன் பேரய்யா அவர்களுக்குக் கொடுத்த தாமிர சாசனம் என்னவென்றால் திருச்சிராப்பள்ளிச் சாவடிக்குத் தெற்கு கபிலநாடு மகாணத்திற்கு நாயகம் ஆன புதுக்கோட்டைக்குக் கிழக்கு கோனாடு மகாணத்திற்குச் சேர்ந்த கீரனூர் எல்லைக்கு விபரம் நல்லூர் எல்லைக்குக் கிழக்கு இல்லனிப்பட்டிக்கு வடக்கு சித்தூருக்குக் கிழக்கு, நிலையப்பட்டிக்குத் தெற்கு ஆக உள்ள கீரனூர் அக்கிரகாரம் காஷ்யப கோத்திரம் இந்திர வம்சம் ரகுநாத ராய தொண்டைமானார் அவர்களின் பேரன் திருமலை ராய தொண்டைமானார் அவர்களின் மகன் விசைய ரகுநாத ராய தொண்டைமானார் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம் யஜுர் வேதம் பயின்ற ஆதப்பையா அவர்களின் பேரன் எல்லமரசய்யா அவர்களின் மகன் பேரய்யா அவர்களுக்குத் தாரைவார்த்து அக்கிரகாரம் செய்து கொள்ளுமாறு கொடுத்தோம் ஆகையினாலே இதற்கு உண்டான நஞ்சை புஞ்சை நத்தம் படுகை பூமியில் கண்ட வாஸ்து விஷேசங்களும் மாவடை மரவடை சகலமான சமுதாய பிராப்திகளும் நிதி நிட்சேப ஜல தருபாஷாண ஆச்சண்ய ஆகாமி சுத்த சாத்தியம் எனும் அஷ்ட போகங்கள் முதலிய எல்லாவற்றையும் தானாதி வினியோ விக்ரய யோக்கியமாகஆச்சந்திரார்க்க ஸ்தாயி ஆக புத்திர பௌத்திர பாரம்பரியமாக அனுபவித்துக் கொள்ளுமாறு காஷ்யப கோத்திரம் இந்திர வம்சம் ரகுநாத ராய தொண்டைமானார் அவர்களின் பேரன்

திருமலை ராய தொண்டைமானார் அவர்களின் மகன் விசைய ரகுநாத ராய தொண்டைமானார் அவர்கள் ஸ்ரீவத்ச கோத்திரம் யஜுர் வேதம் பயின்ற ஆதப்பையா அவர்களின் பேரன் எல்லைரசய்யா அவர்களின் மகன் பேரய்யா அவர்களுக்கு அக்கிரகாரத்துக்குக் கொடுத்த தாமிர சாசனம்.

(இதற்குப் பின்னர் தானத்தைக் காப்பதைப் பற்றிய மூன்று வடமொழிச் சுலோகங்கள் தெலுங்கு எழுத்துக்களிலேயே எழுதப்பட்டுள்ளன.)

## 3. துறுமாச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1730–1769) |
| காலம் | : | 22–7–1732 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 28 செ.மீ X 19.5. செ.மீ |

### அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டில் துளையுடன் கூடிய கைப்பிடி உள்ளது. கைப்பிடியின் மேல் பகுதியில் சந்திர, சூரியன் உருவம் வரைகோட்டில் வரையப்பட்டுள்ளது. அதன்கீழ்ச் சிவலிங்க வடிவில் காசி விசுவநாதரும் இடப்புறம் நின்ற நிலையில் விசாலாட்சியும் வரைகோட்டு ஓவியத்தில் வரையப்பட்டுள்ளனர். அதனை அடுத்து முத்தலைச் சூலமும் இறுதியில் நந்தி உருவமும் வரையப்பட்டுள்ளன. சிவலிங்கத்திற்குக் கிரீடம் சூட்டப்பட்டுள்ளது. அதன் கீழ்ப்புறம் செப்பேட்டுச் செய்திப் பொறிப்புக்கு முதலில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. பிள்ளையார் சுழியுடன் செப்பேடு தொடங்குகிறது.

இடையிடையே சில கிரந்த எழுத்துக்களும் இறுதியில் பிறர் அளித்த கொடைகளைப் பாதுகாப்பதால் ஏற்படும் பலன் குறித்த இரு வடமொழிச்

சுலோகங்களும் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. சாசனத்தின் இறுதியில் 'சம்பிரதி சுரப்பையயன் கையெழுத்து' என்று காணப்படுகிறது. இறுதிப் பகுதியிலும் ஒரு பிள்ளையார் சுழி உள்ளது.

விசைய ரகுநாத தொண்டைமானாரவர்கள் 22-7-1732 அன்று காசியில் விசுவேசுவரர் விசாலாட்சி அம்மன் அபிடேகம் நைவேத்தியம் அன்னதானத்துக்குத் தருமபுரம் திருஞானசம்பந்த பண்டார சன்னதி அவர்கள் சீடரான திருப்பனந்தாள் காசிவாசி தில்லை நாயகத் தம்பிரான் அவர்கள் வசம் கானாட்டுப் பகுதியில் உள்ள துருவாசபுரமான 'துறுமா' என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது.

துருவாசபுரம் திருமயம் வட்டத்தில் உள்ளது. துர்வாசமுனிவர் இவ்வூருக்கு வந்து தவம் செய்ததால் இவ்வூருக்கு இப் பெயர் ஏற்பட்டதாகப் புராணக் கதை கூறுகிறது. கல்வெட்டுகளில் துருமா என்றே இவ்வூர் குறிக்கப்படுகிறது. துறுமாவின் எல்லைகள் கூறப்படவில்லை.

தொண்டைமானார் இந்திரகுல வங்கிஷன், அன்பில்நாடன், தென்கோடி ஆதிபன், வடகரைப்புலி, வாகைமாலை புயன் என்று சிறப்பிக்கப்படுகிறார். தென்கோடி என்பது தனுஷ்கோடியைக் குறிக்கும்.

துறுமாவின் நான்கெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், ஏந்தல், புறவடை, திட்டு திடல், நத்தம், படுகை, நிதி, நிட்ஷேபம், அனாதி தரிசு, பெருமரக்காடு, மாவடை, மரவடை, பாசிவிலை, சேத்துக் காணிக்கை, சொர்னாதாயம், பலசுதந்திரம், வலை, இடை, பைங்குடி, கீழ்நோக்கிய கிணறு, மேல் நோக்கிய விருட்சம், இடுகாடு, படுதுறை உட்பட்ட அனைத்தும் கொடையாக அளிக்கப்பட்டன.

துறுமாவின் வருவாயிலுருந்து துறுமாவில் உள்ள சிவபெருமான் திருமேனி நாதருக்கு (திருப்பாடலீஸ்வரர்) மூன்றில் ஒரு பங்கும் காசித் தர்மத்துக்கு மூன்றில் இரண்டு பங்கும் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

இச் செப்பேட்டில் மதுரை நாயக்க மரபில் கி.பி. 1529 தொடங்கி ஆட்சி புரிந்து வந்த அனைத்து மன்னர்கள் பெயரும் வரிசையாகக் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பானதாகும். இறுதியில் ஸ்ரீ விசையரெங்க முத்துவீர சொக்கநாத நாயக்கர் (1706–1732) ஆட்சிக் காலத்தில் இக் கொடை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக் காலத்தில் புதுக்கோட்டைத் தொண்டைமானார் தம் மேலாண்மையாளர்களாக மதுரை நாயக்கர் இருந்தனர்.

## மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. உ சுவஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுரன், அரியராய தழு
2. விபாடன், பாஷைக்கு தப்புவராய கண்டன், மூவராயிர க
3. ண்டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், ப
4. ரிமேல் நகுலன், கரிமே லுதையன், வில்லால் விசையன், சொ
5. ல்லால் தருமன். வாளுக்கு வீமன், அழகுக் கனங்கன், அறி
6. வுக்கு அகஸ்த்தியன், கொடைக்கு கன்னன், பூலோக புரந்தரன்
7. புட்க பேரியட்ச பாஞ்சாலதேசஞ் சாதகமான உத்தண்ட தொர
8. த்தண்ட சண்டமதருணி மண்டலேசுரன், அஷ்ட்ட திக்கும்
9. ராசமனோ பயங்கரன், துஷ்ட்ட நிக்கிரக சிஷ்ட்ட பரிபாலன், ரி
10. றிதிக்கிளையான், பரசுராமன், படைகண்டு தத்தளிப்பார் கண்ட
11. ன், பாண்டிமண்டலத் தாபனாசாரியன், சோழமண்டலப்
12. பிறதிஷ்டாபனாசாரியன், தொண்டமண்டல சண்டப்
13. பிறசண்டன், சேர சோழ பாண்டிய வல்லாள பயங்கரன், பூ
14. றுவ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, எம்மண்
15. டலமும் கொண்டு ஈழமுந் திறை கொண்டு யாப்பாணமு
16. ம் அழித்து கெசவேட்டை கண்டருளிய ராசாதிராசன், ராசபர
17. மேசுவரன், ராசமாத்தாண்டன், ராசகண்டரவன், ராசாக்கள் தம்பிரா
18. ன், ராசநரேந்திரன், மன்னரில் மன்னன், மன்னர்கெம்பீரன் சாடிக்கா

19. றர் கண்டன், சாமத்துரோகிகள் மிண்டன், கட்டாரிச் சாளுவன், கலங்
20. காத கண்டன், குமட்டிராமன், சம்மட்டி நாராயணன், ஒட்டியர்தள விபா
21. டன், ஒட்டியர்மோகந் தவிள்த்தான், துலுக்கர்தள விபாடன். துலுக்கர்
22. மோகந் தவிள்த்தான், மறுமன்னியர் சுரதானன், மன்னியராட்டந் த
23. விள்த்தான், அசுபதி, கெசபதி, நரபதி, நவகோடி நாராயணன், ஸ்ரீ வீர
24. ப்பிறதாபனாகிய அரிஅரதேவ மகாராயர், புட்கராயர், மல்லிகா
25. ற்சுனதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், பிறபுடதேவ
26. மகாராயர், வீரநரசிங்கதேவ மகாராயர், நரசாஉடையதேவ மகாரா
27. யர், கிஷ்ட்டிணதேவ மகாராயர், சதாசிவராயர். ராமராயர், திருமலை
28. தேவ மகாராயர், சீரங்கராயர், வெங்கிடபதிதேவ மகாராயர், சிக்கரா
29. யர், ஆனைகொந்தி வெங்கிடபதிதேவ மகாராயர், ஸ்ரீரங்கதேவ
30. மகாராயர், காரியத்துக்குக் கற்த்தரான கச்சி விசுவநாத நாயக்கர். கிஷ்
31. ட்டிணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், குமாரகிஷ்ட்டிணப்ப நாய
32. கர், கஸ்த்தூரி ரெங்கப்ப நாயக்கர், முத்துக்கிஷ்ட்டிணப்ப நாயக்
33. கர், முத்துவீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், முத்துவீரப்ப
34. நாயக்கர், சொக்கநாத நாயக்கர், ரெங்க கிஷ்ட்டிண முத்துவீர
35. ப்ப நாயக்கர், ஸ்ரீ விசையரெங்க கிஷ்ட்டிண முத்துவீர சொக்க
36. நாத நாயக்கரய்யனவர்கள் பிறிதிவி ராச்சியம்பண்ணி அருளா நி
37. ன்ற சாலிவாகன சகார்த்தம் 1653 இதன் மேல் செல்லாநி
38. ன்ற பரிதாபி வருசம் ஆடி மீ 2 உஸ்திரவாரமும் பூறுவபட்சத்து
39. ஏகாதெசியும் மூல நட்சத்திரமுஞ் சுபநாம யோகமுந் தைது
40. லாகரணமும் பெற்ற சுபதினத்தில் ஸ்ரீமது இந்திரகுல வங்கிஷ
41. ன், அன்பில்நாடன், தென்கோடி ஆதிபன், வடகரைப் புலி, வா
42. கைமாலைப் புயனான ஸ்ரீமது ரெகுனாதத் தொண்டைமானா ரவர்க

43. ள், திருமலைத் தொண்டைமானாரவர்கள், ஸ்ரீமது விசையரெகு
44. நாதத் தொண்டைமானாரவர்கள் காசியில் விசுவேசுர
45. சுவாமி விசாலாட்சி அம்மன் அபிஷேகம் நைவேத்தி
46. யம் அன்னதானத்துக்குத் தருமபுரம் திருஞாந சம்ப
47. ந்த பண்டார சன்னதிச் சீஷரான காசிவாசித்

## இரண்டாம் பக்கம்

48. தில்லை நாயக தம்பிரானவர்கள் பாரிசமாக
49. க் காசித் தற்மத்துக்குத் தாம்பிர சாதனப்பட்டையங் கொ
50. டுத்தபடி, கானாட்டில் துறுவாசபுரமான துறுமா நா
51. ன்கெல்லைக் குட்பட்ட நஞ்சை புஞ்சை ஏந்தல் புறவ
52. டை திட்டுத் திடல் நத்தம் படுகை நிதி நிட்சேபம் அனாதி
53. தரிசு பெருமரக்காடு மாவடை மரவடை பாசிவிலை சே
54. த்துக்காணிக்கை சொற்னாதாயம் பலசுவந்திரம் வலை இடை
55. யைங்குடி கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய வி
56. ருட்சம் இடுகாடு படுதுறை உற்படத் துறுமாத் திருமே
57. னிநாத சுவாமிக்கு ஒரு பங்கும், காசித் தற்மத்துக்கு
58. இரண்டு பங்குஞ் சறுவமானியமாக நேமிச்சுத்
59. தாராபூறுவமாகத் தாம்பிரசாதனப் பட்டையங் கொ
60. டுத்தபடியினாலே சந்திராதித்த ருள்ளவரைக்கும்
61. புத்திர புவுத்திர பாரம் பரியமாக அனுபவித்துக்கொ
62. ண்டு தற்மத்தை உத்திரோத்திரமாய் நடத்திவிச்சுக்
63. கொண்டு சுகத்திலே யிருக்கக்கடவாராகவும். இந்தத் த
64. ற்மத்துக்கு வாக்குச் சகாயம் சரீர சகாயம் அற்த்த சகாயம் ப
65. ண்ணினபேர்கள் காசியிலே கங்கைக் கரையிலே கோடி
66. சிவலிங்கப் பிறதிட்டை பண்ணின பலனை அடைவர்கள்
67. இந்தத் தற்மத்துக்கு அகிதம் பண்ணிநபேர்கள் காசியிலே
68. கெங்கைக்கரையிலே கோடி காராம்பசுவைக் கொன்
69. ற தோஷத்திலே போவாராகவும் சம்பிறிதி ஈசுரப்
70. பையன் கையெழுத்து உ.ஸ்வதத்தாத்வி குணம்
71. புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரே
72. ண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் : ஸ்வதத்தாம் பரதத்தா
73. ம் வாயோகரேத் வஸுந்தராம் ஷஷ்டி வர்ஷ ஸஹ
74. ஸ்ராணி விஷ்டாயாம் ஜாயதே கிருமி :

# 4. காடங்குடிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1730–1769) |
| காலம் | : | 13–1–1739 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 23 செ.மீ X 16.5. செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

இச் செப்பேடு துளையையுடைய கைப்பிடியுடன் உள்ளது. கைப்பிடிப் பகுதியில் பிள்ளையார் சுழி மட்டும் வரையப்பட்டுள்ளது. முதல் பக்கம் நடுவே ' ஸ்ரீ ராமஜெயம்' எனத் தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் 13–1–1739 அன்று சந்திர கிரகணம் ஏற்பட்டதால் அதையொட்டித் திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அவர்கட்குத் திருமடத்தில் அன்னதானம் செய்யும் பொருட்டுத் தெற்குச் சீமையில் மிழலை நாட்டில் உள்கிடை காடங்குடி என்னும் ஊரைச் சர்வமானியமாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது. அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் அருளாட்சி நடத்தியவர்கள் 12–ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த தவத்திரு திருச்சிற்றம்பல தேசிகர் அவர்கள் ஆவர்.

தொண்டைமானார் அளித்த காடங்குடியின் எல்லைகளாகப் பண்ணியூர்க் குளக்கரைமுடங்கு, பழுந்தாமரைக்குளம், திருவாகுடி வடவயல் ஊரணி, பொன்பற்றி ஆத்தூரணி, மருதங்குடி கீழ்வயல், மசுத்தான் ஊரணி, பெருநாவலூர் உள்க்கிடை வலையனேந்தல் தென்கரை, கள்ளிப்பெருச்சி ஊரணி ஆகியவை கூறப்படுகின்றன.

செப்பேடு குறிப்பிடும் ஊர்கள் தற்போது அறந்தாங்கி வட்டத்தில் உள்ளன. இது அக்கால மிழலைக் கூற்றத்தின் ஒரு பகுதியாகும். அறந்தாங்கி தொண்டைமான் அரசு வலுவிழந்திருந்த நிலையில்

இப்பகுதிகளை பாலையவனம், நகரம், ஜமீன்தாரர்கள் ஆட்சி செய்து வந்தனர். புதுக்கோட்டை தொண்டைமான் இவர்களை வென்று மிழலைக் கூற்றத்தின் சில பகுதிகளை தனது வசமாக்கி ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தினார். தொண்டைமான் மன்னர்களின் ஆட்சி பரந்துபட்டு விளங்கியது. இதற்கு ஒரே அறுதியான சான்றாக விளங்குவது இச் செப்பேட்டு செய்தியாகும்.

இதே கொடைக்கு நகலாக மற்றொரு செப்பேடும் திருவாவடுதுறை ஆதீனத்திலேயே உள்ளது.

## மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அரியராயிரதள
2. விபாடன், பாஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன்
3. கண்டர்கண்டன், கண்டையப் பிறதாபன்
கட்டாரிச்சாளுவன், கண்டநாடு கொ
4. ண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரிகொண்டு
திரள்பரிவெட்டு முபை
5. ய குலோத்துங்கன், எம்மண்டலங்கொண்டு யீளமுந் திறைகொ
6. ண்ட ராசாதிராசன், ராசமாத்தாண்டன், ராசகண்டரவன், ராசாக்க
7. ள் தம்பிரான், கோட்டத்துமன்னியர் கண்டன்,
சொரிமன்னியர் சூரிய
8. ன். கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டமண்டலத்
தாபனாசாரியன்.
9. சோழமண்டலப் பிறதிஷ்டாபனாசாரியன், பாண்டிமண்டலப்
பற்பனா சாரியன்
10. மறுமன்னியர் கோடாரி, குறுமன்னியர் கோளரி,
ஒட்டியர்தள விபாடன், ஒட்
11. டியர்மோகந் தவிள்த்தான், துலுக்கர்தள விபாடன்,
துலுக்கர்மோகந் தவி

12. ள்த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிள்த்தான், படைக
13. ண்டு தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்சபாணாவதாரன், தற்க்காற்குத் தற்கன், தற்கவி
14. னோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிறசண்டன், பூறுவ தெட்சண
15. பட்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி, அசுபதி, கெசபதி, நரவேட்டை கண்ட
16. ருளிய மல்லிகொற்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர், ராமதே
17. வ மகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், விருப்பா
18. ட்சிதேவ மகாராயர், சீரங்கதேவ மகாராயர் பிறிதிவிராச்சியம் பண்
19. ணியருளாநின்ற சாலிவாகன சகாத்தம் 1659 இதன்மேற் கலியுகம்
20 4839 இதன்மேற் செல்லாநின்ற காலயுத்தி வருஷம் தை மீம் 15உ ராச ராசவ
21. ளநாடு ராசேந்திரசோழவளநாடு பன்றிசூள்நாடு அழும்பில்த் தெற்குளூ ரிலிரு
22. க்குங் காணியுடைய அரையர்மக்களில் ஸ்ரீமது திருமலையப்பத் தொண்டமானாவ
23. ர்கள் குமாரன் விசைய ரெகுனாதராயத் தொண்டமானாரவர்கள் சோள மண்டலத்தி
24. ன் உள்க்கடை திருவாவடுதுறைப் பண்டாரச் சன்னதி அவர்களுக்குத் தானசா
25. தனாங்குடுத்தபடி தானசாதனமாவது தெற்கில் சீர்மையில் மிழலைநாடு உள்
26. க்கடை காடங்குடிக்கு யெல்கையாவது பண்ணியூர்க் குளத்துக்கரை முடங்
27. குக்கும் பழந்தாமரைக்குளத்து நீர்ப்பிடிக்கு மேற்கு, திருவாகுடி வடவயலூற
28. ணிக்கும் யொன்பத்தி ஆத்தூறணிக்கும் வடக்கு, மருதங்குடி கீள்வயலுக்

29. கும் மசுத்தானூறணிக்குங் கிளக்கு, பெருநாவலூர் உள்க்கடை வலையானேந்த
30. ல்த் தென்கரைக்குங் கள்ளிப்பெரிச்சி ஊறணிக்குங் தெற்கு ஆகச் சூள்ந்த பெரு
31. நான் கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை மேல் நோக்கியமரங் கீள்நே
32. ாக்கியகிணறு திட்டுத்திடல் நிதி நிட்சேப செல தரு பாஷாணஞ் சகலமுஞ் சந்தி
33. ராதித்தாளுள்ளவரைக்கும் ஆதீனபாரம் பரைக்கும் ஆண்டுகொள்ளக்கட
34. வோர்களாகவும் இந்தச்சாதனம் தை மீ 15உ இஸ்த்ர வாரமும் பவுர்ணையும்

## இரண்டாம் பக்கம்

35. பூச நட்செத்திரமுங் கடின சுபதினத்தில்க் கிறாணம் வந்தபடியினாலே
36. அந்தக் கிராணத்திலே தற்மத்துக்கு நாம் அன்னதானத்துக்கு நம்முடைய கிறா
37. மத்தை விட்டுக்குடுத்தோம். இப்படி ஆளுமிடத்தில் யாதாமொருத்தர் தற்மத்து
38. க்கு நடக்கிற கிறமத்துக்கு வாக்குசகாயம் அற்தசகாயம் பண்ணினபேர் காசி
39. யிலேயும் ராமேசுவரத்திலேயும் கோடிசிவாலையம் மடவாலையம் அன்ன
40. சத்திரமுங் கட்டிவைத்தவர்களுக்கு யெந்தப்பலனோ அந்தப்பலனை அடைவாரா
41. கவும். இந்தக்கிறாம தற்மத்துக்கு விரோதம் பண்ணினபேர் கெங்கைக் கரை
42. யிலே கோஹத்தி பிரமத்தி ஸ்ரீஅத்தி பண்ணினவன் எந்தத்தோஷத்தை அ
43. டைவானோ அந்தத்தோஷத்தை அடைவானாகவும். இந்தப்படிக்
44. கு ஸ்ரீமது விசைய ரெகுனாத ராயத் தொண்டைமானரவர்கள் திருவாவ

45. டுதுறைப் பண்டாரச் சன்னதி அவர்கள் அன்னதானத்துக்கு தற்மசாதன
46. ங் குடுத்தோம்.

# 5. காஞ்சிபுரம் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | சங்கரமடம், காஞ்சிபுரம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் |
| காலம் | : | 13-1-1743 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 18 செ.மீ X 11 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு அரைவட்ட வடிவம் உள்ள துளை இல்லாத சிறு கைப்பிடியை உடையது. கைப்பிடியின் முன்பக்கம் மாலை சாத்தப்பட்ட சிறு சிவலிங்கமும் அருகில் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் ஒரு அம்மன் உருவமும் வரையப்பட்டுள்ளது. கைப்பிடியின் பின்பக்கம் ஸ்ரீ ராமஜெயம் என்று கிரந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இச் செப்பேட்டின் மேல் கீழ் முனைப்பகுதிகள் சிறிது உடைந்துள்ளன.

முன்பக்கம் உள்ள இலிங்கம், அம்மன் உருவங்களை இச் செப்பேட்டைப் பதிப்பித்துள்ள து.அ.கோபிநாதராவ் அவர்கள் திருவானைக்காவல் ஜம்புகேசுவரராகவும் அம்மன் அகிலாண்டேசுவரி தேவியாகவும் கருதுகிறார். செப்பேட்டில் திருவானைக்காப் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை. செப்பேட்டுக் கொடை காஞ்சிபுரத்தில் உள்ள அந்தணருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அவ்வுருவங்களைக் காஞ்சி ஏகாம்பரரேசுவரராகவும் காஞ்சி காமாட்சியம்மனாகவும் கருதவும் வாய்ப்பு உண்டு. இச் செப்பேடு மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் படி எடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுப் பிரிவினர் இச் செப்பேடு விசயநகர மன்னன் சீரங்கராயருக்கு உரியதென்று குறித்துள்ளனர். செப்பேட்டின் காலமாகிய கி.பி. 1742-43-இல் விசயநகர மன்னர் ஆட்சி புதுக்கோட்டைப் பகுதியில் நடைபெறவில்லை என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

13-1-1743 அன்று புதுக்கோட்டை அரசர் விசைய ரகுநாதத் தொண்டைமானார் அவர்கள் காஞ்சிபுரம் உள்கடை பவனிலிருக்கும் பவனி வெங்கிட்டய்யன் மகன் வெங்கிடகிஷ்ணய்யனுக்குக் கீழ்வருமாறு சாசனமுறி எழுதிக் கொடுத்துச் செப்பேடும் வெட்டித் தந்தார்.

1) தொண்டைமானார் ஆட்சிக்குட்பட்ட எல்லாவகை ஊழியக்காரர்களும் மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்குக் குறுணி தானியம் கொடுக்க வேண்டும்.
2) சீவிதம் பத்தி இருக்கும் ஊழியக்காரர் எல்லோரும் பத்து ஆள் சீவிதத்துக்கு ஒரு ஆள் சீவிதம் உம்பளம் போக மற்ற ஆட்களுக்கு வருடத்திற்கு எட்டு மரக்கால் நெல் கொடுக்கவேண்டும்.
3) பள்ளையச் சோத்துக் கட்டளைக்கு நாள்தோறும் மூன்றுபடி அரிசி கொடுக்க வேண்டும்.
4). வருடத்திற்கு 2 ஜோடி சோமனும் (வேஷ்டி) இரண்டு சேலைகளும் கொடுக்க வேண்டும்.

இக் கொடைகளைச் சந்திர சூரியர் உள்ளவரை அளித்துவர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து கொடுத்து இக் கொடையைப் பேணுவோர் புண்ணியமும் இதற்குத் தடை செய்தவர் பாவமும் அடைவர் என்று கூறப்பட்டுள்ளது.

## மூலம்

### முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அ
2. ரியராய விபாடன், பாஷைக்குத் தப்புவ ராய
3. கண்டன், மூவராயர கண்டன், கண்டர்கண்டன் க
4. ண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்ட நா
5. டு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒரு பரி கொ
6. ண்டு திரள்பரி வெட்டு முடைய குலோத்துங்கன். எ
7. ம் மண்டலங் கொண்டு யீழமுந் திறை கொண்ட ரா

8. சாதி ராசன், ராச மாற்தாண்டன், ராசகண்டரவன், ரா
9. சாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன்,
10. சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்
11. தகன், துங்காபிராமன், துர்க ரேபந்தன், படைக
12. ண்டு தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்ச பாணாவ
13. தாரன், தற்காற்குத் தற்கன், தற்க விநோதன், தண்
14. டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், துங்க
15. ாபிராமன், துர்க ரேவந்தன் பூறுவ தெட்சண
16. பச்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி, அசுபதி, கெ
17. சபதி, நரவேட்டை கண்டருளிய மல்லிகாற்சு
18. னதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர்,
19. யானைகுந்தி தேவ மகாராயர், கிஷ்ணதே
20. வ மகாராயர், ராமதேவ மகாராயர்,
21. விருபாட்சிதேவ மகாராயர், சீரெ
22. ங்கதேவ மகாராயர் பிறிதிவி ரா
23. ச்சியம் பண்ணியருளாநின்ற சாலி
24. வாகன சகாத்தம் 1663 இத
25. ன்மேல் செல்லாநின்ற துந்துபி
26. தை மீ 15 உ ராசராச வளநாடு ரா
27. சேந்திரசோழ வளநாடு பன்றிசூழ்
28. நாடு அன்பில் தெற்குலூ ரிலிருக்
29. குங் காணியுடைய அரைய மக்க
30. ளில் ஸ்ரீமது திருமலையப்பத் தொண்
31. டைமானாரவர்கள் குமாரன் ஸ்ரீமது வி
32. சைய ரெகுனாதராய தொண்டைமா
33. னாரவர்கள் வகை ஊழியக்காறர் எ
34. ண்ணப்பட்ட சகலமான பேர்களும்
35. இந்த தற்மம் விளங்கச் சம்மதித்து காஞ்
36. சி புரத்தில் உள்க்கடை பவனிலிருக்கும்
37. பவனி வெங்கிட்டய்யன் குமாரன் வெ
38. ங்கிட கிஷ்ணய்யனுக்கு தாம்பரசாச
39. ன முறி குடுத்தபடி, சாஸன முறியாவது

## இரண்டாம் பக்கம்

40. மாதப் படிவாங்கிற பேர்கள் சகல
41. பேர்க்கும் சனம் 1க்கு மாதம் ஒண்ணு
42. க்கு நெல்லுக் குறுணியும், சீவிதம்
43. பத்தி இருக்கிற ஊழியக்காறர் ச
44. கலருக்கும் பத்து ஆள் சீவிதத்
45. துக்கு ஒரு ஆள் சீவிதம் உம்ப
46. ளம் போக மத்தஆள் ஒன்றுக்கு
47. வருஷாவதி எட்டுமரக்கா நெல்
48. லும், பள்ளையச்சோத்து கட்டளை
49. அரிசி தினம் மூணுபடியும், வருஷ
50. ாவதி ரெண்டு சோடு சோமனும், ரெ
51. ண்டு சேலையும் குடுக்க கடவோமாக
52. வும். இந்த தற்மம் இந்தப்பிறகாரம் ச
53. ந்திராதி சூரியாதித்தவரைக்கும் வாங்கி
54. கொண்டு சுகத்திலே யிருக்க கடவேனாக
55. வும். இந்த தற்மத்துக்கு யாதா மொருத்த
56. ன் தடை பண்ணினாலும் பக்குவம் பண்
57. ணினாலும் காசியிலே கெங்கை கரை
58. யிலே காராம்பசுவை கொன்னவன்
59. பிறம்மத்தியை ஸ்ரீகத்தியை பண்ணி
60. னவன் எந்த தோஷத்தில் நரகத்தில் அ
61. னுபவிப்பானோ அந்த தோஷம் அ
62. னுபவிப்பானாகவும் இந்ததற்மம் ஊழி
63. யக்காறர் எண்ணைப்பட்ட சகலமான
64. பேர்களுக்கும் சரி இந்தற்மம் யாதாமொ
65. ருத்தர் விளங்க நடப்பிக்குராகளோ அ
66. வர்களுக்கு ஆயிரத்தெட்டு சிவாலயம்
67. அக்கிறகார சத்திரங்கள் பண்ணின ப
68. லன்னுண்டாய் செரிஞ்சீவியாய் புத்தி
69. ர பவுத்திராதி சம்பத்தோடே யிரு
70. ப்பார்கள். இந்தபடி எழிதினது வெரி
71. யாசாரியர் குமாரன் வேலாயுதம் கைய்
72. யெழுத்து வெரியநாயகி அம்மன் துணை.

# 6. வாழைக்குறிச்சிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | காசி மடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1730–1769) |
| காலம் | : | 21–2–1763 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 25 செ.மீ X 20.5 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு மையத்தில் சிறு துளையையுடைய வரைகோட்டு உருவங்கள் ஏதுமில்லாத கைப்பிடியை உடையது. முதல் பக்கத்தின் இறுதிப் பகுதியில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

21–2–1763 அன்று புதுக்கோட்டை அரசர் விசையரகுநாதராயத் தொண்டைமானாரவர்கள் தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சீடரான திருப்பனந்தாள் காசிவாசி குமரகுருபரத் தம்பிரான் அவர்கள் வசம் காசியில் அன்னதானக் கட்டளைக்காக வாழைக்குறிச்சி என்ற ஊரைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது.

வாழைக்குறிச்சியின் எல்லைகளாகப் பனையூர் வடக்குக்குளம், தெற்குக்குளத்து உள்வாய், குழிப்பிறை வாகைவயல், கோவலூர், புதுவயல், நெய்வேலி விஷமூலிகைவயல், கொத்தி வயல் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இவ் வெல்லைக்குள் ஈர வயலும் அதைச் சேர்ந்த புன்செய் 30 ஏர்க்காடும் போக மற்றப் பகுதி முழுவதும் அளிக்கப்பட்டது.

திருப்பனந்தாள் காசிமடத்தினர் என்றென்றும் சீஷ பரம்பரையாக இவ்வூரை அனுபவித்துக் கொள்ளலாம் என்று கூறப்படுள்ளது.

இச் செப்பேட்டைப் பழனியப்ப வாத்தியார் என்பவர் எழுதியுள்ளார். இறுதியில் தானத்தைக் காப்பது பற்றிய வடமொழிச் சுலோகம் ஒன்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

இச் செப்பேட்டில் உள்ள நரிவேட்டை கண்டருளிய என்ற தொடர் நரவேட்டையாக இருக்கலாம்.

இச் செப்பேட்டில் கூறப்பட்ட எல்லையினுள் அமைந்து, தானம் அளிக்காமல் நீக்கம் பெற்றுள்ள ஈர வயலும் அதைச் சேர்ந்த 30 ஏர்ப் புன்செய் நிலமும் 25-7-1790 அன்று விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் காசிக்கு அன்னதானத்துக்காகக் கொடுக்கப்பட்டது என்ற விபரம் மற்றொரு காசி மடத்துச் செப்பேட்டில் உள்ளது (எண் 7).

## மூலம்

### முதல் பக்கம்

**ஸ்ரீ ராமஜெயம்**

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அ
2. ரியராய விபாடன், பாஷைக்குத் தப்பு
3. வராயர்கண்டன், கண்டர் கண்ட
4. ன், கண்டையப்பிறதாபன், கட்டாரி
5. சாளுவன், கண்டநாடு கொண்டு
6. கொண்டநாடு கொடாதான், ஒருப
7. ரிகொண்டு திரள்பரி வெட்டுமுடைய
8. குலோத்துங்கன், எம்மண்டலங் கொ
9. ண்டு யீழமுந் திறைகொண்ட ரா
10. சாதிராசன், ராசகெம்பீரன், ராசா
11. க்கள் தம்பிரான், கோட்டத்து மன்
12. னியர்கண்டன், சொரிமன்னியர் கூ
13. ரியன், கெடிமன்னியர் காலாந்
14. தகன், தொண்ட மண்டல ஸ்தாபநா
15. சாரியன், சோழமண்டலப் பிறதி
16. ஸ்டாபநாசாரியன், பாண்டிமண்டில
17. த்துப் பத்மநாசாரியன், மறுமன்
18. னராயர் கோடரி, குறுமன்னியர்
19. கோளரி, துலுக்கர்தள விபாட

20. ன், துலுக்கர்மொகரந் தவிழ்த்தா
21. ன், தற்காற்குத் தற்கன், தற்கவினோ
22. தன். தண்டுவார் மிண்டன், சண்டப்பிற
23. சண்டன், சகலகுணாபிராமன், தூங்கா
24. பிராமன், துர்கரேபந்தன், பூறுவ தெ
25. ட்சண பச்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி,
26. அசுபதி, கெசபதி, நரிவேட்டை கண்டரு
27. ளிய மல்லிகாற்சுனதேவ மகாராய
28. ர், பிறபுடதேவ மகாறாயர், யானைகு
29. ந்திதேவ மகாராயர், விருப்பாட்சிதே
30. வ மகாராயர், ராமதேவ மகாராயர், சீரெ
31. ங்கதேவ மகாராயர், பிறிதிவிராச்சி
32. யம் பண்ணி!!அருளாநின்ற சாலி

## இரண்டாம் பக்கம்

33. வாகன சகாத்தம் 1684 கலி
34. 4863 யிதன் மேற் செல்லாநின்ற
35. சித்திரபானு வருஷம் மாசிமாதம் 13 சோமவார
36. மும் பூறுவாட்சத்து அஷ்டமியும் ரோகணிநட்
37. செத்திரமும் சுபின சுபதினத்தில் ராசராச
38. வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்றிகூ
39. ழ்நாடு அன்புத்தெற்குலூரிலிருக்குங் கா
40. ணியுடைய அரைய மக்களில் ரெகுந
41. ாதராய தொண்டைமானார் பவுத்திரன் தி
42. ருமலை ராய தொண்டைமானார் புத்திரன் வி
43. சைய ரெகுநாத ராய தொண்டைமானார்
44. தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சீஷரான
45. காசிவாசி குமரகுருபரத் தம்பிரான் அவர்கள் பா
46. ரிசமாக காசியில் அன்னதானக் கட்டளைக்குக்
47. கோனாட்டில் வாழைக்குறிச்சி தாராபூறுவமா
48. கத் தாம்பிறசாதனம் குடுத்தபடி வாழைக்குறிச்சிக்
49. கெல்லையாவது கீழ்பாற்கெல்லை பனையூர் வடக்குக்கு
50. ளம் தெற்குக் குளத்துள்வாய்க்கு மே (ா) ற்கு, தென்பாற்
51. கெல்லை குழிபிறை வாகைவயலுக்கு வடக்கு, மேல்

52. பாற்கெல்லை கோவலூர் புதுவயலுக்குக் கிழக்கு,
53. வடபாற்கெல்லை நெல்வேலி விஷமூலிகைவயல்க் கொ
54. த்தி வயலுக்குத் தெற்கு, ஆகச் சூழ்ந்த பெருநான் கெல்
55. லைக்குள்ள நிலத்தில் யீரவயலும் அதைச் சேந்த
56. புஞ்சை 30 ஏர்க்காடும் போக மத்த நஞ்சை புஞ்
57. சை சொற்ணாதாயம் வகையறுப்பு யிடங்கை வ
58. லங்கை பலசுவந்திரம் யிதுமுதலான எப்போ
59. ப்பட்ட வரியும் நிதி நிட்சேபம் மேல்நோக்கிய மர
60. ம் கீழ்நோக்கிய கிணறு சறுவமானியமாக தாரா
61. பூறுவமாக தாம்பிரசாதன பட்டையம் குடுத்த
62. படியினாலே சந்திராதித்தருள்வரைக்கும் எங்கள்
63. புத்திர பவுத்திர பாரம்பரியமாகத் தங்கள் சீஷ பாரம்ப
64. ரியமாக அநுபவித்துக்கொண்டு தற்மத்தைப் பரிபாலனை
65. ம் பண்ணிக்கொண்டு வரக்கடவராகவும், இந்தப்படி சம்ம
66. தித்து காசி அன்னதானக்கட்டளைக்கு விசையரெ
67. குனாதாராய தொண்டைமானார் தாம்பிரசாதனம் பண்
68. ணிக் குடுத்தோம்
69. யிந்தத் தற்மத்துக்
70. கு அகிதம் பண்ணினபேர்கள் காசியிலே கெங்கைக்கரை
71. யிலே கோடி காறாம்பசுவைக் கொன்ற தோஷத்
72. திலே போவாராகவும், யிந்தசாதனம் பழனிய
73. ப்ப வாத்தியார் எழுத்து உ ஸ்வதத்தாம் பரதத்தா
74. ம் வாயோ உறரேது சி வசுந்தராம் ஷஷ்டி வர்ஷ சகஸ்ர
75. ாநி விஷ்ட்டாயாம் ஸாயதே கிரிமி :

# 7. ஈரவயல் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | காசி மடம், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் (1789–1807) |
| காலம் | : | 25–7–1790 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 29 செ.மீ X 22.5 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

இச் செப்பேட்டின் கைப்பிடியின் மையத்தில் சிறு துளையும் இருபுறமும் சந்திர சூரியர்களும் வரையப்பட்டுள்ளனர். செப்பேடு தொடங்கும்முன் முதலில் காளை வாகனத்தில் சிவலிங்க வடிவில் காசி விசுவநாதரும் அடுத்து நடுநாயகமாக உயர்ந்த பீடத்தில் விசாலாட்சியும் மூன்றாவதாக அலங்கரிக்கப்பெற்ற திரிசூலமும் வரையப்பட்டுள்ளன; சிவலிங்கம் முகலிங்கமாக அமைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. திரிசூலத்தின் இடையிலும் மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. முதல் பக்க இடையில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

பிற்காலச் செப்பேட்டில் பொதுவாகக் காணப்படும் மெய்க் கீர்த்திப் பகுதிகளுக்குப் பின்னர் விசயநகர அரசர்கள் சிலர் பெயர்களும் மதுரை நாயக்க அரசர் அனைவரது பெயர்களும் கூறப்பட்டுள்ளன.

விசய ரகுநாதராயத் தொண்டைமானாரவர்கள், தம் பெரியப்பா மகன் ராய ரகுநாதத் தொண்டைமானார் (1769–1789) இறந்தபின் அரசரானவர். இவருடைய தந்தை திருமலைத் தொண்டைமானார் 1789–இல் நோய்வாய்ப்பட்டிருந்ததால் மூத்த மகனான இவர் பதவி ஏற்றார். இவர் பதவி ஏற்றபின் 5 ஆண்டுகள் உயிர்வாழ்ந்து இவர் தந்தை 1794 இல் காலமானார். இவர் தாயார் பெயர் பெருந்தேவி ஆயி என்பதாகும்.

25-7-1790 அன்று விசய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் காசியில் அன்னதானக் கட்டளைக்காகத் தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சீடரான காசிவாசி சிதம்பரனாத தம்பிரானவர்கள் வசம் கோனாட்டு ஈரவயலைச் சர்வ மானியமாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது. காலக் குறிப்பின்படி 25-7-1790 அன்று பவுர்ணமி தொடங்கியதெனத் தெரிகிறது.

நிலம் அளிக்கப்பட்ட ஈரவயல் வாழைக்குறிச்சி எல்லைக்குட்பட்டது என்றும் அது நன்செய் நிலப்பகுதி என்றும் கூறப்பட்டுள்ளது. அதைச் சேர்ந்த 30 ஏர்ப் புன்செய் நிலமும் கொடையாக அளிக்கப்பட்டது. ஈரவயலுக்குத் தனியாக எல்லை கூறாமல் வாழைக்குறிச்சி எல்லைக்குட்பட்டது என்று மட்டும் கூறப்பட்டுள்ளது.

இந்தச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரகுநாத வாத்தியார் எழுதியுள்ளார். இறுதியில் பிறர் செய்த தானத்தைக் காப்பது பற்றிய இரண்டு வடமொழிச் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள ஈரவயலும் அதைச் சேர்ந்த முப்பது ஏர்ப் புன்செய் நிலமும் போக வாழைக்குறிச்சியின் மற்றுப் பகுதிகள் 21-3-1763 இல் காசியில் அன்னதான தர்மத்துக்காக விசய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் ஏற்கனவே கொடையாக அளிக்கப்பட்ட செய்தி காசிமடத்தின் மற்றொரு
செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது (எண் 6).

# மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள விபாட
2. ன், பாஷைக்கு தப்புவராய கண்டன், மூவராய கண்டன், கண்டநா
3. டு கொண்டு கொண்டநாடு குடாதான், பரிமேல் நகுலன், கரிமே லுதை

4. யன், வில்லால் விசையன், சொல்லால்த் தருமன், வாளுக்கு வீம
5. ன், அளகுக்கு அனங்கன், அறிவுக்கு அகஸ்த்தியன். கொடைக்குக் க
6. ற்ணன், பூலோக புரந்தரன், புஷ்ப கபேரி பட்ச பாஞ்சால தேசன் சா
7. தகமான உத்தண்ட தோறத் தண்ட சண்டமாருத மண்டலேசுபரன்.
8. அஷ்ட்டதிக்கு மார்க்க மனோபயங்கரன், துஷ்ட்ட நிக்கிறக சிஷ்ட்ட பரி
9. பாலனன், பிறிதிக்கினையான், பரசுராமன், படைகண்டு தத்தளிப்
10. பார் கண்டன், பாண்டி மண்டல ஸ்தாபனாசாரியன், சோளமண்ட
11. லம் பிறதிஷ்டாபனாசாரியன், தொண்டமண்டலச் சண்டப் பிரச
12. ண்டன், சேரர் சோழ பாண்டிய வல்லாழ பயங்கரன், பூறுவ
13. தெட்சண பட்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி, எம்மண்டலமுங்
14. கொண்டு யீழமுந் திறை கொண்டு யாள்ப்பாணமும் அழித்து கெ
15. ச வேட்டை கண்டருளிய் ராசாதிராசன், ராசபரமேசுபரன்,
16. ராசமாத்தாண்டன், ராசகெம்பீரவ
17. ன், ராசாக்கள் தம்பிரா
18. ன். ராசநரேந்திரன், மன்
19. னரில்மன்னன், மன்னர்கெம்பீரன், சாடிக்காரற் கண்டன், சாமத்
20. துரோகியள் முண்டன், கட்டாரிச் சாளுவன், கலங்காத கண்டன்,
21. கும்மட்டி ராமன், சம்மட்டி நாறாயணன், ஒட்டியர்தள விபாடன், ஒட்
22. டியர் மோகந் தவிழ்த்தான், துலுக்கர்தள விபாடன், துலுக்கர் மோ
23. கந் தவிள்த்தான், மறுமன்னியர் சுந்தரன், மன்னிய ராட்டுந் தவிழ்
24. த்தான். அசுபதி, கெசபதி, நரபதி, நவகோடி நாறாயணன், ஸ்ரீவீரப்
25. பிறதாபனாகிய அரிஅரதேவ மகாராயர், புசங்க ராயர், மல்லிகாற்
26. சுனதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், புறபுடதேவ ம
27. காராயர், நரசிங்கதேவ மகாராயர், நரசருடையதேவ மகாராயர்
28. கிஷ்டிணதேவ மகாராயர், சதாசிவராயர், ராம ராயர், திருமலை
29. தேவ மகாராயர், சீர்ரெங்க ராயர், வேங்கிடபதிதேவ மகாராயர், சி
30. க்க ராயர், ஆனைகொந்தி வேங்கிடபதிதேவ மகாராயர், ஸ்ரீரெங்கதே

31. வ மகாராயர் காரியத்துக்குக் கர்த்தரான கச்சி விசுவனாத நாய
32. க்கர், கிஷ்டிணப்ப நாயக்கர், வீரப்ப னாயக்கர், குமார கிஷ்
டிணப்ப நா
33. யக்கர், கஷ்த்தூரி ரெங்கப்ப நாயக்கர், முத்துக் கிஷ்டிணப்ப நாயக்
34. கர், முத்துவீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர்,
முத்துவீரப்ப நாயக்
35. கர், சொக்கநாத நாயக்கர், ரெங்க கிஷ்டிண முத்துவீரப்ப நா
36. யக்கர், ஸ்ரீவிசையரெங்க கிஷ்டிண முத்துவீரச் சொக்கனா
37. த நாயக்கரய்யரவர்கள் பிறிதிவி ராச்சியம்பண்ணி அருள

## இரண்டாம் பக்கம்

38. ாநின்ற சாலிவாகன சகாற்த்தம் 1712 கலியுக சகா
39. ற்த்தம் 4891 இதின்மேல்ச் செல்லாநின்ற சாதாருண வருஷம்
40. ஆடி மீ 13 உ ஆதித்த வாரமும் பூறுவ பட்சமும் சதுற்த்தெசியும்
41. உத்திராட நட்செத்திரமும் விஷ்க்கம்பநாம யோகமும் பாலவா
42. கரணமுங் கவுடின சுபதினத்தில் ராசராச வளநாடு ராசேந்திர
43. சோள வளநாடு பன்றிசூள் நாடு அன்ம்பில் தெற்குலூா ரிலிருக்கு
44. ங் காணியுடைய அரையமக்களில் யிந்திர குல வங்கிஷன், தெ
45. ன்கோடி ஆதிபன், வடகரைப்புலி வாகைமாலைப் புயனான ஸ்ரீ
46. மது திருமலைத் தொண்டைமானார் பவுத்திரன்,
திருமலைபய்ய ராய
47. தொண்டைமானார் புத்திரன், விசைய ரெகுனாத ராய தொண்டை
48. மானாரவர்கள் காசியில் அன்னதானக் கட்டளைக்கி
தருமபுரஞ் சி
49. வஞான சம்பந்த தேசிகர் சீஷரான காசிவாசி சிதம்பரனா
50. த தம்பிரானவர்கள் பாரிசமாகக் காசித் தற்மத்துக்கு தாம்
51. பூர சாதனப் பட்டையங் குடுத்தபடி கோனாட்டில் யீரவாயல்
52. தாராபூறுவமாக சறுவமானியமாக தாம்பூர சாதனப் பட்டை
53. யம் கொடுத்தபடி, யீரவாயலுக்கு எல்லையாவது, வாளைக்குறிச்
54. சி பரிநான்கெல்லைக் குள்ப்பட்ட நிலத்தில் யீரவாயல் நஞ்சையு
55. ம் அதைச் சேர்ந்த முப்பதுஏர்ப் புஞ்சையும் திட்டுத்திடல் நத்தம்
56. படுகை தோப்புத்தொரவு மாவடை மரவடை
சொற்னாதாயம் வகைய
57. றுப்பு யிடங்கை வலங்கை பலசுவுந்திரம் யிதுமுதலான வெப்பேர்

58. ப்பட்ட வரியும் கீள்நோக்கிய கிணறு மேல்நோக்கிய விருட்சம் சில த
59. ரு பாஷாணம் நிதி நிட்சேபம் சறுவமானியமாக
தாராபூறுவமாகத் தா
60. ம்பிர சாதனப் பட்டையங் குடுத்தபடியினாலே
சந்திராதித்தருள்ளவ
61. ரைக்கும் யெங்கள் புத்திர புவுத்திர பாரம்பரையமாக தங்கள்
சீஷ பார
62. ம்பரையமாக அனுபவித்துக் கொண்டு தற்மத்தை
உத்திரகோத்திரமா
63. க நடத்திவிச்சுக்கொண்டு சுகத்திலேயிருக்கக் கடவராகவும்,
யிந்தத் தறு
64. மத்துக்கு வாக்குச் சகாயம், சரீர சகாயம் , அற்த்த சகாயம்
பண்ணின
65. பேர்கள் கெங்கா தீரத்திலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்டை பண்ணி
66. ன பலனை அடைவார்கள். யிந்தத் தற்மத்துக்கு அகிதம் பண்ணின
67. பேர்கள் கெங்கைக் கரையிலே கோடி காராம்பசுவைக் கொன்ற
68. தோஷத்திலே போவாராகவும், இந்தச் சாதனமெழுதின நன்மை
69. பளனியப்ப வாத்தியார் குமாரன் ரெகுனாத வாத்தியார்
ஙெட்டெளுத்து.
70. ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பா
71. லநம் பரதத்தாப ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம்
72. பவேது:ஸ்வதத்தாம் பரதத்தாம் வாயோஹரே
73. து வசுந்தரம் சஷ்டி வர்ஷ சகஸ்ராணி விஸ்டா
74. யாம் ஜாயதே க்ருமி :

## 8. திருவிடைமருதூர் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை<br>தஞ்சாவூர் மாவட்டம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராயத் தொண்டைமானார்<br>(1789–1807) |
| காலம் | : | 29–7–1793 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 31 செ.மீ X 23 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு முக்கால் வட்டப்பகுதி போன்ற கைப்பிடியையும் சிறுதுளையையும் உடையது. கைப்பிடியினுள் இருபுறங்களில் முத்தலைச் சூலம் இரண்டும் இடையில் பீடத்தின் மேல் அழகிய நந்தியும் உள்ளன. நந்தியின் மேல் பகுதியில் அழகிய விதானம் போன்ற அமைப்பு மூன்று கோடுகளில் வரையப்படுள்ளது. விதானத்தின் உச்சியில் ஒரு கலசம் வைக்கப்பட்டுள்ளது. அதனை விமானத்தின் உச்சியாகவும் கருதலாம். முதல் பக்கம் இடையில் ஸ்ரீ ராமஜெயம் என்று பெரிய தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

29-7-1793 அன்று திருமலைத் தொண்டைமானார் பேரனும் திருமலைப்பராயத் தொண்டைமானார் மகனும் ஆகிய விசையரகுநாத ராயத் தொண்டைமானார் அவர்கள் காவேரிக்குத் தென்திசையில் உள்ளதும் கைலாசத்திற்குச் சமமானதும் மணல் எல்லாம் இலிங்கமாகவும் சலமெல்லாம் கங்கையாகவும் மனிதர்கள் எல்லாம் முனிவர்கள், விண்ணவர்களாக இருப்பதும் சோழன், பாண்டியன் பிரமகத்தி தீர்த்த தலமும் தம்மைத்தாம் அர்ச்சனை பண்ணப்பட்டதும் மத்தியார்ச்சுனம் என வழங்கப்படுவதுமாகிய திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமிக்கு திருவனந்தல், உஷக்காலக் கட்டளைப் பூசைக்குச் சூரியனார்கோயில் அதிவர்ன ஆசிரமமான சிவாக்கிரயோகிகள் சீடரான நீலகண்டத் தம்பிரான்வசம் பல ஊர்ப் பகுதிகளைக் கொடையாகக் கொடுத்ததை இச் செப்பேடு கூறுகிறது.

மருதம்பட்டம் (இதன் பழம்பெயர் பட்டத்திக்காடு), பட்டத்திக்குளம், வாச்சான்குளம், மின்னாங்குளம் இவைகட்குட்பட்ட நன்செய் நிலங்கள், இதைச் சேர்ந்த தொண்டைமான் புன்செய் நிலம் (இவைகளின் எல்லைகளில் மஞ்சிற்குளம் நீர்நிலை, பிரமி வயல், இருங்குளம், பாம்பன் வயல், தேவதானம், இருங்குளம் வடக்குக் கடைக்கோம்பு, வாரிகால், குமரவாணக்கன் புன்செய், கண்டியன் புன்செய், மஞ்சிவிடுதி, மஞ்சிவிடுதி சும்பாரம் புஞ்சை, குசவன் புஞ்சை, கச்சிரான் புஞ்சை, வேப்பல், பட்டத்திக்குளம், முத்தன்பட்டி புன்செய், மின்னாங்குளம் நீர்நிலை, வடக்குக் கடக்கோம்பு, பிரமிக்குளம் புன்செய், மஞ்சிற்காடு வேர்பாடிக் கொல்லை மேல்கரு, கோட்டி புன்செய், தொண்டைமான்

ஊரணி, பெரிய உடையான் குளம், பாம்பனோடை, இருங்குளங்குளம் வாரிகால் ஆகியன கூறப்படுகின்றன) ஆகியவை கொடையாக அளிக்கப்பட்டன. நான்கு ஊர்கள் இவற்றில் அடங்கியிருந்தன. இவ்வூர்கள் கறம்பக்குடிப் பகுதியில் உள்ளன.

இறுதியில் பிறர் செய்த கொடைகளைக் காப்பதால் ஏற்படும் புண்ணியத்தைக் குறிக்கும் மூன்று வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. இந்தச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரகுநாத வாத்தியார் எழுதியதாகக் குறிப்பொன்று இறுதியில் உள்ளது.

## மூலம்

### முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராய விபாடன், பா
2. ஷைக்குத் தப்புவாராயர் கண்டன், மூவராயர் கண்டன், கண்டர் க
3. ண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்ட நாடு கொ
4. ண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முடைய
5. குலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசா
6. திராசன், ராசமாத்தாண்டன், ராசகெம்பீரன், ராசாக்கள் தம்பிரான்
7. கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்
8. னியர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்
9. டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், ம
10. றுமன்னியர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, ஒட்டியர்தள வி
11. பாடன், ஒட்டியர்மோகந் தவிழ்த்தான், துலுக்கர்தள விபாடன், து
12. லுக்கர்மோகந் தவிழ்த்தான், படைகண்டு தத்தளிப்பார்கள் மிண்டன்

13. பஞ்ச பாணாவதாரன், தற்காற்குத் தக்கன், தற்க விநோதன்,
14. தண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், பூறுவ தெ
15. ட்சண பச்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி, அசுபதி கெ
16. சபதி தனபதி நரபதி நரவேட்டை கண்டருளிய மல்லிக
17. ார்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராய
18. ர், ஆனைகுந்திதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மக
19. ாராயர், கிஷ்ணதேவ மகாராயர், நரசிங்கதேவ மகா
20. ராயர், வெங்கிடதேவ மகாராயர், அரிகரதேவ மகாரா
21. யர், ராமதேவ மகாராயர், சீரெங்கதேவ மகாராயர், பி
22. றிதிவி ராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாக
23. ன சகார்த்தம் 1715 கலியுக சகார்த்தம் 489
24. 4 யிதன்மேல்ச் செல்லாநின்ற பிறமாதீட்ச வருஷம் ஆடி மீ 17 உ
25. சோம வாரமும் கிஷ்ணப
26. ட்சமும் சத்தமியும் அ
27. சுபசி நட்செத்திரமும் சூலநாம யோகமும் பத்திர வாகறணமுங்
28. கூடின சுபதினத்தில் ராசராச வளநாடு ராசேந்திர சோழ
29. வளநாடு பன்றிசூழ் நாடு அன்பில் தெற்குலூரிலிருக்கு
30. ங் காணியுடைய அரையன் மக்களில் யிந்திரகுல வ
31. ங்கிஷன், அன்பில் னாடன், தென்கோடி யாதிபன், வடக
32. ரைப் புலி, வாலைமாலை புயனான ஸ்ரீமது திருமலைத்
33. தொண்டைமானார் பௌத்திரன், ஸ்ரீமது திருமலையப்ப
34. ராய தொண்டைமானார் புத்திரன், ஸ்ரீமது விசைய ரெகுனா
35. த ராய தொண்டைமானார் அவர்கள் காவேரிக்கு தெஷ்ச
36. ண பாரிசமாயிருக்கிற கயிலாசத்துக்கு சமானமாயி
37. ருக்கிற மணலெல்லாம் லிங்கம் செலமெல்லாங் கெ
38. ங்கை மனுவெல்லா முனிவர் விண்ணவராயிரு

## இரண்டாம் பக்கம்

39. க்கப்பட்ட சோழபாண்டியன் பிறும்ம அத்தி
40. மோசமான தம்மைத்தாம் அற்சனை பண்ண
41. ப்பட்ட மத்தியாற்சன மகாலிங்க சுவாமிக்கு தி
42. ருவனந்தல் உஷக்காலக் கட்டளைப் பூசைக்கு சூரிய
43. னார்கோவில் அதிவற்ன்னா ஆசிறமம்மான சிவாக்கிற
44. யோகிகள் சீஷரான நீலகண்ட தம்பிரான் அவர்கள்

45. பாரிசமாக தொண்டைமானாரவர்கள் கட்டளைக்கி தாம்புர சாதன
46. பட்டையாங் குடுத்தபடி கீழ்ச்சீமையில் வீரக்குடி னாடு கறுக்கா
47. க்குறிச்சி மகாணந் தெற்குத்தெருச் சேற்கையான பட்டத்திக் க
48. ாட்டுக்கு பிறிதிநாமமான மருதம்பட்டம் பட்டத்திக்குளம் வாச்சான்
49. குள மின்னங்குளம் யிதுக்குள்பட்ட நஞ்சையு மிதிற்சேர்ந்த தொ
50. ண்டமான் புஞ்சையுள்பட புஞ்சைற்குங் கீழ்பாற் கெல்லையாவது
51. மஞ்சிற்குளம் நீர்நிலைற்கு பரமி வயலுக்கு மேற்கு,
தென்பாற் கெல்லையா
52. வது யிருங்குளான் பாம்பன் வயலுக்குந் தேவதானத்துற்கும்
யிருங்கு
53. ளன்குளம் வடக்குக் கடைக்கோம்பு வாரிகாலுக்கும் வடக்கு,
மேற்பாற்
54. கெல்லையாவது குமர வாணக்கன் புஞ்சைற்குங்
கண்டியன் புஞ்சைற்
55. கு மஞ்சி விடுதி எல்லைற்குங் கிழக்கு, வடபாற்
கெல்லையாவது மஞ்சி விடு
56. தி கூம்பாரம்புஞ்சை குசவன்புஞ்சை கச்சிராான்புஞ்சை மேல்படி
57. வேப்பலுற்கும் பட்டத்திகுளம் எதுவாய் மேலைவாகைக்கு
முத்தன்பட்டி பு
58. ஞ்சைக்கு மின்னாங்குளம் நீர்நிலைக்கும் வடக்குக்
கடக்கோம்புக்குந்
59. தெற்கு, யிதிற்சேர்ந்த பிரமிக்குளம் நஞ்சை புஞ்சைக்குங்
கீழ்பாற் கெல்
60. லையாவது மஞ்சிறகாடு வேப்படிக்கொல்லை
மேற்குகருவற்குங் கோ
61. ட்டிபுஞ்சைற்குந் தொண்டைமானூ ரணிற்கு மேற்கு,
தென்பாற்கெல்லையா
62. வது பெரிய உடையான் குளத்துக்கரைற்கும்
பாம்பனோடைக்கும் வடற்
63. கு. மேல்பாற்கெல்லையாவது யிருங்குளான்குளம் வாரிகாலுக்குங்
64. கிழற்கு, வடபாற்கெல்லையாவது வாத்தலைற்கு தெற்கு,
யிந்தப்பரிநான்
65. கெல்லைற்குள்பட்ட ஏந்தல னாலுற்கும் நஞ்சை புஞ்சை
திட்டுத்திடல்

66. நத்தம் படுகை மாவடை மரவடை வெட்டி சொற்னாதாயம் வகையறுப்பு
67. சீட்டு யாவிரை புல்லுவரி யிடங்கை வலங்கைவரி ஊழிய பாழிய
68. ம் ஆளமஞ்சி எபேர்ப்பட்ட வரியும் செல தரு பாஷாணம் நிதி நிட்சேபம்
69. உள்பட சறுவமானியமாகத் தாராபூறுவமாகத் தாம்புர சாதனப் பட்டை
70. டயங் கொடுத்தபடியினாலே சந்திராதித்தர் வரைற்கும் எங்கள் புத்திர
71. பௌத்திர பாரம்பரையமாக தங்கள் சீஷ பாரம்பரையமாக உஷ
72. க்காலக் கட்டளை தற்ம்மத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்
73. டு சுகத்திலேயிருக்கக் கடவாராகவும், யிந்த தற்மத்துற்கு வாக்
74. குச் சகாயஞ் சரீர சகாயம் அற்த்த சகாயம் பண்ணின பேர்க
75. ள் காசியிலே கெங்கா தீரத்திலே கோடி சிவலிங்கப் பிறதிஷ்ட்டை
76. பண்ணின பலனையடைவார்கள். இந்த தற்மத்துற்கு அகிதம் ப
77. ண்ணின பேர்கள் கெங்கைக் கரையிலே கோடி காராம் பசுவைக்
78. கொன்ற தோஷத்திலே போவாராகவும், தாநபாலந யோர்மத்யே த
79. ாநாச் சிரயோநுபாலநம் தாநாத் ஸ்வர்க்க் மவாப்நோதி பாலநாத் அச்சுதம்
80. பதம்:ஏகைவ பகநீலோகே சர்வேசா மேவ பூபுஜாம் நகோஜ்ய
81. ா ந கரக் ராஹ்யா லிப்ரதத்தா வசுந்தரா: ஸ்வதத்தாத்வி குணம் பு
82. ண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தா பஹாரேண ஸவதத்தம் நிஷ்ப
83. லம் பவேது: யிந்தச் சாசனம் எளுதினது பழனியப்ப வா
84. த்தியார் மகன் ரெகுநாத வாத்தியார் கையி எளுத்து.

# 9. புதுக்கோட்டைச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789–1807) |
| காலம் | : | 14–2–1794 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 31 செ.மீ X 21.5 செ.மீ |


## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு இரு துளைகளையுடைய சிறு கைப்பிடியை உடையது. வலக்கையில் கமண்டலமும் இடக்கையில் குடையும் உடைய வாமனர் உருவம் சிறிய அளவில் வரையப்பட்டுள்ளது. இச் செப்பேட்டில் கண்ட கொடை ஒரு சந்திர கிரகண நாள் அன்று அளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்பச் சந்திரனை ஒரு பாம்பு விழுங்க வருவதுபோல வரைகோட்டு ஓவியம் கைப்பிடியில் வரையப்பட்டுள்ளது. கைப்பிடியையும் செப்பேட்டுச் செய்தியையும் பிரிக்க இடையில் ஒரு கோடு வரையப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள குறைச் செப்பேட்டில் இதுவும் ஒன்று. வழக்கமான மெய்க் கீர்த்திப் பகுதிக்குப் பின் காலக்குறிப்பும் புதுக்கோட்டைத் தொண்டைமானாரது பொதுவான சிறப்பு மட்டும் எழுதப்பட்டுள்ளது.

அடுத்து ஸ்ரீமது என எழுதிப் பெயர் பகுதியும் கீழ்வரும் பிற பகுதிகளும்; பொறிக்கப்படவில்லை. முதல் பக்கத்தின் இடையிலேயே செப்பேடு நின்று விடுகிறது. காலக்குறிப்பை வைத்து இங்கு அரசன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

முதல் பக்கத்தின் கீழ்ப் பகுதியில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.



9 புதுக்கோட்டைச் செப்பேடு

# மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன், அரியராய
2. விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மூ
3. வராயர் கண்டன் கண்டர் கண்டன் கண்டை
4. யப்பிறதாபன் கட்டாரிச் சாளுவன் கண்டனாடு
5. கொண்டு கொண்டனாடு குடாதான் ஒருப
6. ரி கொண்டு திரள்பரி வெட்டு முடையகுலோத்து
7. ங்கன் எம்மண்டலங்கொண்டு யீழமுந் திசை
8. றகொண்ட ராசாதிராசன் ராசமாற்த்தாண்ட
9. ன் ராசாக்கள் தம்பிரான் கோட்டத்து மன்னி
10. யர் கண்டன் சொரிமன்னியர் சூரியன், கெ
11. டிமன்னியர் காலாந்தகன், தொண்டமன்
12. டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப்
13. பிறதிட்டாபனாசாரியன், பாண்டி மண்டலத்துப்
14. பற்மனாசாரியன், மறுமன்னியர் கோடாரி, குறும
15. ன்னியர் கோளரி, ஒட்டியர்தள விபாடன் ஒட்டிய
16. ர் மோகந் தவிழ்த்தான், படை கண்டு
17. தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்சபாணாவதா
19. ரன் தற்காற்குத் தற்கன், தற்கவினோதன், தண்டுவா
20. ர் மிண்டன், சண்டப் பிறசண்டன் பூறுவ தெட்சண பச்சிம
21. உத்திர சத்த சமுத்திராதிபதி அசுபதி கெசபதி ந
22. ர வேட்டை கண்டருளிய மல்லிகாற்சுனதேவ ம
23. காராயர், பிறபுடதேவ மகாராயர், யானைகுந்தி
24. தேவ மகாராயர், ராமதேவ மகாராயர், கிஷ்ண
25. தேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், சீ
26. ரங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம் பண்
27. ணியருளாநின்ற சாலிவாகன சகாத்தம்
28. 1715 கலியுக சகாப்தம் 4894 இதின்
29. மேல்ச் செல்லாநின்ற பிறமாதீச்ச வருஷம் மாசி மாதம்

30. ௨ சுக்கில பட்சமும் வெள்ளிக்கிழமையும் பௌரணா
31. மாவாஸ்யையும் ஆயில்ய நக்ஷத்ரமும் சோபநநாம யோகமும்
32. பத்ரவாகரணமும் சுஷின சுபதினத்தில் சந்த்ர கிரஹண
புண்ய காலத்தி
33. ல் ராசராசவளனாடு ராசேந்திரசோழவளனாடு பன்றிசூழ்னாடு அ
34. ம்பில் தெற்க்
35. கிலூரிலி
36. ருக்குங் க
37. ாணியுடைய ராசர்மக்களில் ஶ்ரீமது

# 10. கூடலூர்ச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | காசிமடம், திருப்பனந்தாள், தஞ்சை மாவட்டம் |
| அரசர் | : | விசைய ரகுநாதராய தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 2–5–1796 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 31 செ.மீ X 18.5 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டில் முக்கால் வட்டவடிவில் அமைக்கப்பட்ட கைப்பிடியின் இடையில் சிறு துளை ஒன்று உள்ளது. கைப்பிடியின் முன்பக்கத்தில் துளையின் மேல்பகுதியில் பிள்ளையார் சுழியும் அதன் இருபுறங்களில் சூரியனும் சந்திரனும் வரைகோட்டு ஓவியமாக வரையப்பட்டுள்ளனர். முதல் பக்க நடுவில் ஶ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

வழக்கமான மெய்க் கீர்த்திப் பகுதிக்குப் பின்னர் விசயநகர அரசர்கள் சிலர் பெயரும் மதுரை நாயக்க அரசர்கள் பெயரும் எழுதப்பட்டுள்ளன.

மதுரை நாயக்க அரசரில் முதல் மன்னர் விசயநகர அரசரின் காரியத்துக்குக் கர்த்தர் என்றும் கச்சி விசுவநாத நாயக்கர் என்றும் எழுதியிருப்பதால் சாசனம் எழுதியவரின் வரலாற்றறிவு புலப்படுகிறது.

2-5-1796 அன்று திருமலைத் தொண்டைமானார் பேரனும் திருமலையப்பராயத் தொண்டைமானார் மகனுமான விசைய ரகுநாதராயத் தொண்டைமானார் அவர்கள் தருமபுரம் ஆதீனம் சிவஞான சம்பந்த தேசிக சுவாமிகள் சீடர் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் சடையப்பத் தம்பிரான் அவர்கள் மூலமாகக் கோனாட்டுப் பகுதியில் உள்ள சுவடலூர் என்னும் ஊரைக் காசித் தர்மத்துக்குக் கொடையாக அளித்த விவரம் இச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. கோனாட்டின் உள்நாடு 64 நாடுகளில் சுவடலூர் நாடு ஒன்றாகும்.

சுவடலூரின் எல்லைகளாக ரரராபுரம் தன்மணிக்குளம், சித்தூர், சாணியோடை, தென்னாட்டம்பட்டி, கீரங்குடிப்பட்டி, பனையூர் ஆகியவை கூறப்பட்டுள்ளன. ரரராபுரம் என்பது இராசராசபுரம் ஆகும். இவ்வூர்கள் திருமயம் வட்டத்தில் உள்ளன.

நான்கெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், திட்டு, திடல், நத்தம், படுகை, தோப்பு, துரவு, மரவடை, சொர்னாதாயம், வகையறுப்பு, இடங்கை, வலங்கை, பல சுவந்திரம் இது முதலான எல்லா வரிகளும் கொடையாக அளிக்கப்பட்டன.

ஏற்கனவே கூடலூரில் அளிக்கப்பெற்றிருந்த தேவதாயம், பிர்மதாயம், உம்பளம் தவிட்டுப் பண்டாரம், கவிராயர் கொடைகள் நீக்கப்பெற்ற பின்னரே இச் சாசனம் எழுதித் தரப்பட்டுள்ளது.

கொடையைக் காப்போர், அழிப்போர் முறையே அடையும் நன்மை தீமைக் குறிப்புகளுக்குப் பின்னர்த் தானத்தைக் காப்பது தொடர்பான மூன்று வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

இந்தச் சாசனம் எழுதியவர் பழனியப்ப வாத்தியார் மகன் ரெகுநாத வாத்தியார் என்று இறுதியில் பொறிக்கப்பட்டுள்ளது.

# மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள விபாட
2. ன் பாஷைக்கு தப்புவராய கண்டன், மூவராயர் கண்
3. டன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான்,
4. பரிமேல் நகுலன், கரிமே லுதையன், வில்லால் விசைய
5. ன், சொல்லால் தருமன், வாளுக்கு வீமன், அழகுக் கனங்க
6. ன், அறிவுக் ககத்தியன், குடைக்குக் கற்னன், பூலோக பு
7. ரந்தரன், புட்கபேரி பட்ச பாஞ்சாலதேசன், சாதகமா
8. ன உத்தண்ட தொரத்தண்ட சண்டமாருத மண்டலேசுப
9. ரன், அஷ்டதிக்கும் ராசமனோபயங்கரன், துஷ்ட நிக்கிறக
10. சிஷ்ட்ட பரிபாலனன், பிறிதிக்கினையான், பரசுரா
11. மன், படைகண்டு தத்தளிப்பார் கண்டன், பாண்டிமண்ட
12. ல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்ட்டாபனா
13. சாரியன், தொண்டமண்டல சண்டப் பிறசண்டன்,
14. சேரர் சோழ பாண்டிய வல்லாள பயங்கரன், பூறு
15. வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, எம்ம
16. ண்டலங் கொண்டு யீழமுந் திறைகொண்டு யாழ்ப்
17. பாணமும் அழித்து கெசவேட்டை கண்டருளிய ரா
18. சாதிராசன், ராசபரமேசுபரன், ராசமாற்த்தாண்
19. டன், ராசகண்டீரவன், ராசாக்கள்தம்பிரான், ரா
20. சநரேந்திரன், மன்னரில் மன்னன், மன்னர் கெ.
21. ம்பீரன், சாடிக்காறர் கண்டன், சாமத்துரோகி
22. யன் முண்டன், கட்டாரிச் சாளுவன், கலங்காத க
23. ண்டன், கும்மட்டி ராமன், சம்மட்டி நாறாயணன்,
24. ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவிழ்
25. த்தான், துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந்
26. தவிழ்த்தான், மறுமன்னியர் சுந்தரன், மன்னிய
27. ராட்டந் தவிழ்த்தான், அசுபதி கெசபதி தனபதி நர
28. பதி நவகோடி நாறாயணன், ஸ்ரீவீரப் பிரதாபனா

29. கிய அரிஅரதேவ மகாராயர், புசங்கராயர், மல்லி
30. கார்ச்சுனதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ மக
31. ாராயர், பிறபுடதேவ மகாராயர், நரசிங்கதே
32. வ மகாராயர், நரசாருடையதேவ மகாராயர்,
33. கிஷ்ணதேவ மகாராயர், திருமலைதேவ மகாரா
34. யர், வேங்கிடபதிதேவ மகாராயர், சிக்கதேவ ம
35. காராயர், ஆனைகொந்திதேவ மகாராயர், ஶ்ரீரெ
36. ங்கதேவ மகாராயர் காரியத்துக்குக் கற்த்தரான க
37. ச்சி விசுவனாத னாயக்கர், கிஷ்ணப்ப னாயக்கர், வீரப்
38. ப னாயக்கர், கஸ்தூரி ரெங்கப்ப னாயக்கர், முத்துகிஷ்ண
39. ப்ப னாயக்கர், முத்துவீரப்ப னாயக்கர், திருமலை னாயக்க
40. ர், முத்துவீரப்ப னாயக்கர். சொக்கனாத னாயக்கர், ரெங்ககி
41. ஷ்ண முத்துவீரப்ப னாயக்கர், ஶ்ரீவிசையரெங்ககிஷ்
42. ண முத்துவீர சொக்கனாத னாயக்கரைய்யர் அவர்க
43. ள் பிறிதிவி ராச்சியம்பண்ணி அருளாநின்ற சாலிவ
44. ாகன சகார்த்தம் 1718 கலியுக சகார்த்தம் 4
45. 897 யிதின்மேல் செலாநின்ற நள வருஷம் சித்திரை
46. மீ 23 உ திங்கள்கிளமையும் அமரபட்சமும் திச
47. மியும் சதைய நட்செத்திரமும் அயிந்திரநாம யோ

## இரண்டாம் பக்கம்

48. கமும் வணிக வாகறணமுங் கூடிய சுபதினத்தில்
49. ராசராச வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்
50. றிகூழ்நாடு அன்பில் தெற்குலூ ரிலிருக்குங் காணியு
51. டைய அரசர் மக்களில் யிந்திரகுல வங்கிஷன் அன்பி
52. ல் னாடன் தென்கோடியாதிபன் வடகரைப் புலி வாலை
53. க மாலை புயனான ஶ்ரீமது திருமலைத் தொண்டைமா
54. னார் பௌத்திரன் திருமலையப்ப ராய தொண்டைமா
55. னார் புத்திரன் விசைய ரெகுனாதராய தொண்டைமா
56. னார் அவர்கள் காசியில் அன்னதானக் கட்டளைக்கி
57. தருமபுரம் சிவஞான சம்பந்தர் தேசிகர் சீஷரான காசி
58. வாசி சடையப்ப தம்பிரான் அவர்கள் பாரிசமாக கா
59. சித் தற்மத்துக்கு தாம்புர சாதன பட்டையங் கொடு
60. த்தபடி கோனாட்டில் கவுடூரு தாராபூருவமாக சறு

61. வ மானியமாகத் தாம்பர சாதன பட்டையங் கொடு
62. த்தபடி சவடலூருக் கெல்லையாவது கீள்பாற்கெல்
63. லை ராராபுரந் தன்மனிக் குளத்துக்கு மேற்கு, வடபா
64. ற் கெல்லையாவது சித்தூர் சாணியோடைக்கு தெற்கு,
65. மேல்பாற்கெல்லையாவது தென்னாட்டாம்பட்டி கீரங்
66. குடிப்பட்டிக்குக் கிளக்கு, தென்பாற் கெல்லையாவது
67. பனையூர் எல்லைக்கு வடக்கு யிந்தப் பரினான் கெல்லை
68. க்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுகை
69. க தோப்புத் துரவு மாவடை மரவடை சொற்ன்னாதாய
70. ம் வகையறுப்பு யிடங்கை வலங்கை பல சுவந்திரம் யி
71. து முதலான எப்பேர்ப்பட்ட வரியும் யிதில் தேவதாயம்
72. பிற்ம்மதாயம், உம்பளம், தவிட்டுப் பண்டாரம், கவிராயர்
73. நீங்கலாக யிதுக்குப் பிறாக்கு அந்தபடி யிறைவரி சுவந்திர முள்
74. ளதும் கீழ்நோக்கிய கிணறு மேல் நோக்கிய விருட்சம் செல
75. தரு பாஷாணம் நிதி நிட்சேபம் சறுவமானியமாக தாம்பு
76. ர சாதனப் பட்டையங் கொடுத்தபடியினாலே சந்திராதி
77. த்தாள் உள்ளவரைக்கும் எங்கள் புத்திர பவுத்திர பார
78. ம்பரையமாக தங்கள் சீஷ பாரம்பரையமாக அனுபவி
79. த்துக்கொண்டு தற்ம்மத்தை உத்திர கோத்திரமாக நடத்தி
80. விச்சுக் கொண்டு சுகத்திலே யிருக்கக் கடவாராகவும்
81. யிந்த தற்மத்துக்கு வாக்குச் சகாயம் சரீர சகாயம் அ
82. ற்த்த சகாயம் பண்ணின பேர்கள் காசியிலே கெ
83. கங்கா தீரத்திலேகோடி சிவலிங்கப் பிறதிஷ்ட்டை
84. பண்ணின பலனை அடைவார்கள். யிந்த தற்ம்ம
85. த்துக்கு அகிதம் பண்ணினவர்கள் காசியிலே கெங்கை
86. கக் கரையிலே கோ காராம்பசுவைக் கொன்ற தே
87. ாஷத்திலே போவாராகவும், தாந பாலந யோர்மத்ே
88. ய தாநா ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்
89. நோதி பாலநாதச்சுதம் பதம் : ஏகைவ பகிநீ லோகே
90. க சர்வேசா மேவ பூபுஜாம் ந கரக் ரா
91. ஹ்யா விப்ர தத்தா வசுந்தராம் : ஸ்வதத்தாத்வி குணம் பு
92. ண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரேண
93. ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் : யிந்த சாதனம் எழுதின
94. நன்மை பழனியப்ப வாத்தியார் புத்திரன் ரெகு
95. னாத வாத்தியார்.

# 11. அடப்பன் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு I

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை. |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 9–6–1797 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 41 செ.மீ X 28 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

இச் செப்பேடு பல வரைகோடுகளால் அழகுவட்டப்பெற்ற மேல் பகுதியில் துளையையுடைய கைப்பிடியுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேல் பகுதியில் துளைக்கு இரு பக்கங்களிலும் இரு மலர்கள் வரையப்பட்டுள்ளன. அதன்கீழ்ச் சந்திர சூரியர்கள் வரையப்பட்டுள்ளனர். கைப்பிடியின் அடிப்பகுதியில் அமைக்கப்பட்ட பீடம் ஒன்றில் விஷ்ணுவின் ஐந்தாம் அவதாரமான வாமனாவதார உருவம் நின்ற நிலையில் வரையப்பட்டுள்ளது. வாமனரின் வலக்கையில் கமண்டலமும் இடக்கையில் அழகிய குடையும் உள்ளன. பாதம் வரை வேட்டி அணிந்துள்ள வாமனரின் தலையின் பின்புறம் குடுமியும் மார்பில் முப்புரி நூலும் உள்ளது. கைகளில் வாகுவலயம், கடகம் ஆகியவை உள்ளன.

கைப்பிடியின் பின்பக்கம் நடுநாயகமாக ஒரு தெப்பக்குளமும் அதனுள் நான்கு மலர்க்கொடிகளும் உள்ளன. குளத்தின் கீழ்ப்பகுதியில் அழகிய செடி ஒன்றும் அதன் அடிப்பகுதியில் இருபுறமும் இரு அன்னப்பறவைகளும் உள்ளன. செடியின் இருபக்கங்களிலும் இரு குருவிகள் உள்ளன. குளத்தின் இருபுறங்களில் இரு கிளிகளும், இரு பசுக்களும் உள்ளன. ஏறக்குறைய 9 செ.மீ சதுர அளவினுள் இத்துணை வரைகோட்டு ஓவியங்களையும் மிகமிக அழகிய முறையில் வரைந்த வரைகோட்டு ஓவியனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கொடைதரும் நில எல்லைகளில் வாமன முத்திரைக் கற்கள் நடுவதைப் பல கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் கூறுகின்றன. மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்ட வாமனாவதார வரைகோட்டு ஓவியங்களைக் குறிப்பாக நிலக்கொடைச் செப்பேடுகளில் வரைந்திருப்பது பொருத்தமானதேயாகும்.

திருமலைராய தொண்டைமானார் பேரனும் திருமலைப்புராய தொண்டைமானார் மகனும் ஆகிய ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பன்கூத்தப்பன் பெயரில் திருக்கோகர்ணத்துக்கு மேற்கு கவிலை வளநாட்டில் சேதுமார்க்கத்தில் கட்டியா குளத்திற்கு மேற்கு மாம்பட்டிக்குத் தென்கிழக்கு சிறுகுட்டியாவயல் குளத்துக்கு வடகிழக்கு பிரகதாம்பாள் சமுத்திர அக்கிரகாரத்துக்குத் கிழக்கு ஆகிய எல்லைகளின் நடுவில் என்றென்றும் நிலைக்க அன்னதான தா்மச்சத்திர மண்டபம் ஒன்றைக் கல்லிலே கட்டி அதற்கு வேண்டும் கொடைகளை ஒரு பௌர்ணமியன்று விட்டதை இச் செப்பேடு கூறுகிறது. இச் செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

அடப்பன் கூத்தப்பன் மரணத்திற்குப்பின் அவன்பால் அன்பு கொண்ட அரசர் அவன் நினைவாக இந்தச் சத்திரத்தை ஏற்படுத்தியிருக்கலாம். கட்டியா வயல், ஒல்லியூர்க்கூற்றம், கோனாடு பிறமலை சூழ்ந்த பொன்னமராவதி நாட்டு வடபத்துக் கொவ்வனூர், மெய்க்கினிப்பட்டி ஆகிய ஊர்ப்பகுதிகள் அடப்பன் கூத்தப்பன் சத்திரத்துக்குத் தொண்டைமானாரால் கொடையாக அளிக்கப்பட்டன. ஒல்லியூர் என்பது சங்க இலக்கியம் கூறும் ஒல்லையூர் ஆகும்.

கட்டியாவயலின் எல்லைகளாக நசிரான்குளம், கவண்டன் வயல், காளிகோட்டை வடக்குக் கொத்தளம், கவிநாட்டுக்குளம் தண்ணீர்ப்படி ஈச்சங்காடு, சிறுகுட்டியாவயல், புரைகரைவயல், பெரியகுட்டியாகுளம் கீழ்க்கடைக் கோம்பு, இலுப்பைத் தோப்பு மேலைக்கரு, தெப்பக்குளம் வடக்குக்கரை மதகு, சத்திரம், பெரிய கொல்லை, மலைக்குன்று,

கீர்த்தாவயல், கட்டியாகுளம் தண்ணீர்ப்புடி அறுதி, குண்ணவயல், மேலைக்கரு தென்புறம் வயல்பரப்பு அறுதி, நசிறாங்குளம் குளவாய் ஆகியவைகளும் மெய்க்கினிப்பட்டிக்கு எல்லைகளாகச் செவ்வலூர் மின்னக்காத்தான் மேடு, செவ்வலூர்க் கோனாடன் புன்செய், சுந்தரம் பாப்பான் புன்செய், கொவ்வனூர்க் கண்மாய் ஆகியவைகளும் கூறப்படுகின்றன. இப் பெயர்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன.

இவை தவிர அன்னவாசல், மேட்டுப்பட்டி, கீரனூர், திருமெய்யம், செவ்வலூர் ஆகிய ஊர்களின் மகமைகளும் அளிக்கப்பட்டன. இடங்கை, வலங்கைக் குடிகள் குடிக்குக் கால் பணமும் வாணியர் உள்ளிட்டார் பல்லவன் படியில் 230 படி எண்ணெய் கொடுக்க வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. பல்லவராயர் மரபினர் புதுக்கோட்டைத் தொண்டைமானார் மரபிற்குமுன் புதுக்கோட்டைப் பகுதியை ஆட்சி புரிந்தனர். சேதுபதிகள் துணையுடன் அவர்களை அழித்தே தொண்டைமானார் மரபினர் புதுக்கோட்டையில் ஆட்சியில் அமர்ந்தனர். பல்லவன்படி பல்லவராயர் காலத்திய அளவையாகலாம்.

2204 1/8 சேர் எடையுள்ள 70 பாத்திரங்கள் சத்திரத்திற்கு வழங்கப்பட்டன. அத்துடன் 100 பசுமாடுகளும் 200 ஆடுகளும் அளிக்கப்பட்டன. இப் பசுமாடுகளும் ஆடுகளும் பழங் கல்வெட்டுக்களில் சாவாமூவாப்பசு, சாவா மூவாப்பேராடுகள் என்று கூறப்படும்.

தானங்களைப் பற்றிய சுலோகங்களுக்குப்பின் செப்பேட்டின் இறுதியில் பழனியப்ப வாத்தியார் மகன் ரகுநாத வாத்தியார் இச்செப்பேட்டுச் செய்தியை எழுதிய விபரம் குறிக்கப்பட்டுள்ளது.

இச் செப்பேடு புதுக்கோட்டை தொண்டைமான் அரசியல் வரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்தது ஆகும். தொண்டைமானுக்கும் ஆற்காடு நவாப்புக்கும் நிலவிய நல்லுறவை இச் செப்பேடு விளக்குகிறது.

தொண்டைமான் ராஜாபகதூர் என்றும், மன்சப்தார் என்றும் குறிக்கப்படுகிறார். இவை அக் கால அரசியலில் சிறப்புமிக்க பட்டங்களாகும். 1795 ல் தொண்டமானுக்கு ராஜாபகதூர் என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப்பட்டது. பகதூர் என்றால் பெருமைக்குரிய வீரர் என்று பொருள். இது ராஜா, மகாராஜா போன்ற பட்டங்களை விட உயரிய மதிப்பு உடையது ஆகும். இதன்பின் தொண்டைமானை புதுக்கோட்டை ராஜா என்று ஆற்காடு நவாபும் ஆங்கிலேயரும் அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது. 1796 ல் மன்சப்தார் என்றும் ராணுவப் பட்டம் வழங்கப்பட்டது. இதன்படி 1500 குதிரைகள் கொண்ட படையை வைத்துக் கொள்ளும் ராணுவ மரியாதை தொண்டைமானுக்கு கிடைத்தது. மன்சப்தார் என்பது மொகலாய மன்னர்களால் சிற்றரசர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு ராணுவ மரியாதைப் பட்டமாகும். மொகலாயரின் தென்னக பிரதிநிதியாக ஆற்காட்டிலிருந்து ஆட்சி செய்த நவாபு மொகலாய அரசு வழக்கப்படி தனது மேலாண்மைக்குக் கட்டுப்பட்ட தொண்டைமானுக்கு இச்சிறப்புப் பட்டத்தினை வழங்கினார். இதன் மூலம் தொண்டைமானின் அரசியல் செல்வாக்கு உயர்ந்தது. இருப்பினும், மன்சப்தார் அந்தஸ்து பெற அக் கால அரசியல் நடைமுறைப்படி மேலாண்மை வகிக்கும் மன்னருக்கு நஸார் (காணிக்கை) செலுத்த வேண்டும். தொண்டைமானுக்கு ஆற்காடு நவாபு மன்சப்தார் பட்டம் அளித்தமைக்காக 25000 பகோடா (பகோடா என்பது 8 கிராம் கொண்ட தங்க காசு) நஸார் (காணிக்கை) செலுத்தியுள்ளார் என வரலாறு கூறுகிறது.

இச் செப்பேடு குறிப்பிடும் சத்திரமும் அடுத்த செப்பேடு (12) குறிப்பிடும் சத்திரமும் ஒன்றே என கள ஆய்வில் தெரிய வந்தது. புதுக்கோட்டை அன்னவாசல் சாலையில் இன்னும் நல்ல நிலையில் உள்ளது இந்த சத்திரம். இதில் காணப்படும் சிலை அடப்பன் கூத்தப்பனுடையதாக இருக்கலாம். இவ்விடம் தற்போது அடப்பன்காரன்சத்திரம் என்று மருவி வழங்குகிறது. அக் காலத்தில் இராமேஸ்வரம் செல்லும் பெருவழித்தடத்தில் இருந்த ஊராகும் இது.


அடப்பக்காரன் என்பதற்கு நேரடி பொருள் கொண்டு மன்னருக்கு வெற்றிலை பாக்கு சேவகராக இருந்தவர் கூத்தப்பன் என்று பொருள்பட வழக்கிலிருந்து வருகிறது. ஆனால், கூத்தப்பன் வகித்த சேவை அடப்பம் என வழங்கப்பட்டது. செப்பேடு குறிப்பிடும் அடப்பம் கூத்தப்பன் மன்னருக்கு ஒரு அந்தரங்க செயலாளர் / தளபதி போன்று செயல்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் வெற்றிலை பாக்கு சேவகர் ஒருவருக்கு இத்தகையதொரு பெரிய மதிப்பினை மன்னர் வழங்கி இருக்க வாய்ப்பில்லை. அடப்பம் பணியில் இருந்தவர்கள் பலர் அரசுகளில் செல்வாக்கு உடையவர்களாகவும் படை நடத்தி செல்பவர்களாகவும் விளங்கியதை வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன. அடப்பம் கூத்தப்பன் பெயரால் தொண்டைமான் மன்னர் மேலும் பல கொடைகளை வழங்கி இருக்கிறார். எனவே, சத்திரம் உள்ள குக்கிராமம், அடப்பன்காரன்சத்திரம் என்று அழைக்கப்படுவதைத் தவிர்த்து அடப்பம் கூத்தப்பன் சத்திரம் என சரியான பெயரில் அழைப்பது வரலாற்றிக்கு செய்யும் சிறப்பாக அமையும்.

## மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள விபாடன், பா
2. ஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன், கண்
3. டர் கண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன்,
4. கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி செ
5. காண்டு திரள்பரி வெட்டு முடையகுலோத்துங்கன், எம்மண்
6. டலங்கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசாதிராசன். ரா
7. சகெம்பீரன், ராசநாறன குலதிலகன், ராசகண்ஊரவன்.
8. ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரி
9. மன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்ட
10. மண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டல பிறதிஷ்ட்டாப
11. னாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், மறுமன்னி
12. யர் கோடாரி, துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோகந் தவி




11 அடப்பன் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு I முதல் பக்கம்

13. ழ்த்தான், அரியதள வியாடன், அரியர்மோகந் தவிழ்த்தான். தொ
14. ட்டியர் தளவியாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்கா
15. ற்குத் தற்கன், தற்க விநோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிற
16. சண்டன், சகல குணாபிராமன், துங்காபிராமன், துர்க ரேபந்த
17. ன், சொல்லுக் கரிசந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுல
18. ன், குடைக்கு கற்னனன், பொறுமைக்கு தற்ம்மர், பூற்வ தெட்சண
19. பட்சிம உத்திர ஸப்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தளபதி நரப
20. தி நரவேட்டை கண்டருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பிரபு
21. டதேவமகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், ராமதேவ மகார
22. யர். கிஷ்ட்டிணதேவ மகாராயர், விருப்பாட்சி தேவ மகாராயர்
23. ஸ்ரீரெங்கதேவ மகாராயர். பிறிதிவி ராச்சியம்பண்ணி யருளாநி
24. ன்ற சாலிவாகன சகார்த்தம் 1719 கலியுக சகார்த்
25. தம் 4898 யிதன்மேல்ச் செலாநின்ற பிங்கள வருஷம்
26. வைய்யாசி மீ 30உ வெள்ளிக்கிழமையும் பௌர்நமாவா
27. ஸ்யயும் கேட்டை நட்செத்திரமும் ஸாத்திநாம யோகமும் பவ
28. கரணமும் யிதுகள் சுவுடின ஸோமோபராக புண்ணிய கா
29. லத்திலே ராசராச வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்றி
30. சூழ்நாடு அன்பில் தெற்குலூ ரிலிருக்குங் காணியுடைய அரை
31. யன்மக்களின் காசிப கோ
32. காத்திரத்தில் விள
33. ங்கும் ஸ்ரீமது திரு
34. மலைராய தொண்
35. டைமானார் பௌத்ரந் திருமலைய்ய ராய தொண்டைமானார் பு
36. த்ரந் ரா ராசா விசையரெகுனாதராய பாதர் தொண்டைமானா
37. ரவர்களுக்கு மன்சுபா நடந்த கானாட்டில் செங்கமலம்பிள்ளை
38. மகன் அடப்பங் சுவத்தப்பன் பேருக்கு திருக்கோகருண ஸ்தலத்து
39. க்கு மேற்கு கபிலை வளநாட்டில் சேதுமார்க்கத்திலே கட்டி
40. யாகுளத்துக்கு மேற்கு மாம்பட்டிக்குத் தென்கிழக்கு சிறுகுட்டியா
41. வயல்குளத்துக்கு வடகிழக்கு பிரகதாம்பாள்சமுத்திரம் அக்கிறாக
42. ரத்துக்கு கிழக்கு மத்தியத்திலே புண்ணியபூமியிலே ஸாசு
43. வதிக அன்னதான தற்ம்மத்துக்கு சந்திரங் கல்மண்டபந் தெற்ப்ப
44. க்குள முண்டுண்ணிவிச்சபடியினாலே யிந்த தற்ம்மத்துக்க
45. ட்டியாவயல் நஞ்சை புஞ்சைக்கு எல்லையாவது, கீழ்பார்க்கெ

46. ல்லையாவது நசிறான் குளத்துக்குக் கிழக்கு, கவண்டன் வயலு
47. க்கு மேற்க்கு, தென்பார்க்கெல்லையாவது காளிகோட்டை வ
48. டக்கு, கொத்தளம் யிங்குவிட்டு மேற்க்கு, கவினாட்டுக்குளம் தண்
49. ணீர்ப்புடி யீச்சங்காடு யிதின் மேற்க்கு, சிறுகுட்டியா வயல்


## இரண்டாம் பக்கம்

50. புறைகரை வயல், மேல்பாற்க் கெல்லையாவது பெரியகுட்டியாகு
51. ளங் கீள்க்கடக்கோம்பு யிதின்விட்டு வடபுறம் யிலுப்பை தோ
52. ப்பு மேலைக்கரு கிளக்கு தெற்ப்பக்குளம் வடக்குக்கரை மதவுக்குக் கி
53. ழக்கு, வடபாற்க்கெல்லையாவது சத்திரத்துக்கு வடக்கு பெரியகொ
54. ல்லை வடக்கு மலைக்குண்ணு யிங்குவிட்டுக் கிழக்கு கீர்த்தா வய
55. ல் கட்டியாகுளந் தண்ணீர்ப்புடி அறுதி யிங்குவிட்டுக் கிழக்கு
56. குண்ணவயல் மேலைக்கரு தென் றம் வயல் வரப்பு அறுதி ந
57. சிறங்குளங் குளவாய் உள்பட யிந்தப் பரிநான்கெல்லைக்குள்
58. ப்பட்ட நத்தம் படுகை தோப்புத்துறவு மாவடை மரவடையும்
59. ஒல்லியூர் கூத்தங் கோனாடு பிறமலை சூழ்ந்த பொன்னமராப
60. தி னாட்டு வடபத்து கொவ்வனூருக் கெல்லையாவது கீழ்பாற்
61. க்கெல்லை வாழைக்குறிச்சியெல்லைக்கி மேற்க்கு , தென்பாற்க்
62. கெல்லையாவது செவ்வலூர்க் கோனாடன் புஞ்சைக்கி வடக்கு, மே
63. மல்பாற் கெல்லையாவது சுந்திரம் யெல்லைக்கிக் கிழக்கு, வட
64. பாற்க்கெல்லையாவது அரசுமலை யெல்லைக்கி தெற்குகரு யிந்த
65. ப் பரிநான் கெல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத்திடல்
66. தோப்புத் துறவு மாவடை மரவடையும் மெய்க்கினிப்பட்டிக்
67. கெல்லையாவது, கீழ்பாற்கெல்லை செவ்வலூர் மின்னக்காத்தா
68. ன்மேட்டுக்கு மேற்க்கு, தென்பாற்கெல்லையாவது செவ்வலூர்
69. கோனாடன்புஞ்சைக்கு வடக்கு, மேல்பாற்க்கெல்லையாவது சு
70. ந்தரம் பாப்பான்புஞ்சைக்கு கிழக்கு வடபாற்க் கெல்லையாவ
71. து கொவ்வனூர்க் கம்மாயிக்கு தெற்கு ஆ (க) ச் சூழ்ந்த பரிநான்கெல்
72. லைக் குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுகை
73. தோப்புத் துறவு மாவடை மரவடை சொற்ன்னாதாயம் வ
74. கையறுப்பு யிடங்கை வலங்கைவரி பலசுவந்திரம் யி
75. துமுதலான யெய்பேர்ப்பட்ட வரியும் கீழ்நோக்கிய கிண




**11 அடப்பன் கூத்தப்பன் சத்திரச் செப்பேடு I இரண்டாம் பக்கம்**

76. று மேல்நோக்கிய விருட்சம் செலதரு பாஷாணம் நிதி நி
77. ட்சேபம் சறுவமானியமாகவும் யிந்த தற்ம்மத்துக்காக
78. உண்டு படுத்தின அண்ணவாசல் மகமையும் மேட்டுப்பட்டிம
79. கமையும் கீரனூர்மகமையும் திருமையஞ்
செவ்வலூர்மகமையும் யிட
80. ங்கை வலங்கைகுடி 1ற்கு பணம் 1/4 பணம் வீதமும்
வாணியத் துள்ளி
81. ட்டார் மகமை எண்ணை பல்லவன்பாடி 230 தற்ம்மத்து
82. க்கு குடுத்த பாத்திரம் உருப்படி, 70ற்கு சேர் 2204
அரைக்கால், பசுமா
83. டு 100 ஆடு 200 இந்தப்படிக்கு கல்லூங் காவேரியும் புல்லு
84. ம் பூமியும் யுள்ளாறு மட்டுக்கும் தாம்புர ஸாதனப்பட்டையுந் தார
85. ா பூறுவமாகக் கொடுத்தபடியினாலே கோகருணேசுபரரும் பிற
86. கதாம்பாளும் நாகனாதேசுபரரும் பெரியனாயகி அம்மனும் குடுமி
87. னாதேசுபரரும் அகிலாண்டேசுபரியும் வியாக்கிறபுரியீசுபர
88. ரும் பிறகதம்பாளும் யிவர்கள் சாட்சியாக யிந்த தற்ம்மத்தை
89. சந்திர சூரியாள் யுள்ள மட்டும் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வ
90. ரச்சொல்லிக் கட்டளையிட்டோம். யிந்த தற்ம்மத்துக்கு வாக்குச்சகா
91. யம் சரீரசகாயம் அற்த்தசகாயம் பண்ணினபேர்கள்
அசுவமேதயாக ப
92. லமும், காசியிலே கெங்காஸ்நாந பலமும், ராமேசுபரத்திலே
கோடி சிவ
93. லிங்கப் பிறதிஷ்ட்டை பண்ணுன பலனை அடையக்கடவோராகவும்
94. யிந்த தற்ம்மத்துக்கு யாதாவொருவர் விகாதம்
பண்ணுகுறார்களோ அவ
95. ர்கள் காசியிலே கெங்கைக்கரையிலே காராம்பசுவைக்
கொன்ன தோஷ
96. த்திலே போகக் கடவோராகவும். தாந பாலந யோர்மத்யே தாநா
ஸ்ரயோநு
97. பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம்
பதம் : ஏகைவ
98. பஹிநீ லோகே ஸர்வேஷா மேவ பூபுஜாம் நஹோரஜ்யா
நகரக் ராக்யா வி
99. ப்ர தத்தா வஸுந்தரா : ஸ்வதத்தாத்வி குணம் புண்யம்
பரதத்தாநு பாலநம் பரதத்தாப
100. ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது : யிந்தத் தாம்புர
சாதனம் பழணியப்
101. ப வாத்தியார் குமாரன் ரெகுனாத வாத்தியார் கையி எழுத்து



அடப்பன் கூத்தப்பன் சிற்பம்



அடப்பன் கூத்தப்பன் சத்திரம்

# 12. அடப்ப. கூத்தப்பன் சத்திரச் செப்பேடு II

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம்,<br>புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர்<br>தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 3–11–1797 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 39 செ.மீ X 22.5 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு மேல் பகுதியில் துளையையுடைய வரைகோட்டு ஓவியம் எதுவுமில்லாத கைப்பிடியை உடையது. கைப்பிடியையும் செப்பேட்டுச் செய்திகளையும் பிரிக்கும் வண்ணம் நீண்ட கோடு ஒன்று வரையப்பட்டுள்ளது. ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட்டுள்ள இச் செப்பேடு முற்றுப்பெறவில்லை. ஸ்ரீ ராமஜெயம் என்ற சொல் தெலுங்கு எழுத்தில் பெரிதாக முதல் பக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. இச் செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுத் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

3–11–1797 அன்று புதுக்கோட்டை மன்னர் ராசா விசைய ரகுநாத பாதர் தொண்டைமானார் அவர்கள் தன் ஆட்சிக்குட்பட்ட கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பன் கூத்தப்பன் பெயரில் பௌர்ணமி கூடிய நாளில் ஏற்படுத்திய அன்னதானச் சத்திரம் பற்றிய விபரம் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.

அன்னதானச் சத்திரம் கபிலை வளநாட்டில் திருக்கோகர்ணத் தலத்துக்கு மேற்கும் திருவேங்கவாசல் தலத்திற்குத் தெற்கும் செல்லிகுடி அய்யனார் கோயிலுக்கு கிழக்கும் கவநாட்டில் கலிங்குக்கு வடக்கும் ஆகிய எல்லையில் சேதுமார்க்கத்தில் புண்ணிய பூமியான பிரகதாம்பாள்புரம் பிரகதாம்பாள் பிரதியர்த்தமாக அமைக்கப்பட்டது. என்றென்றும் அங்கு அன்னதானம் நடந்துவர ஏற்பாடு செய்யப்பட்டது. செப்பேட்டின் பிற்பகுதி இல்லை. புதுக்கோட்டை மன்னர்களின் குறைச் செப்பேட்டில் இதுவும் ஒன்று.


முன் செப்பேடு குறிப்பிடும் சத்திரமும் இந்தச் செப்பேடு குறிப்பிடும் சத்திரமும் ஒன்றே ஆகும். இந்தச் செப்பேட்டின்மூலம் மேற்படி சத்திரத்திற்கு வேறு ஒரு கொடை அளிக்கத் திட்டமிடப்பட்டுச் செப்பேடு வெட்டி இருக்கலாம். ஆனால் முற்றுப் பெறாமல் நின்று விட்டது.

# மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேசுபரன், அரியராயதள வி
2. பாடன், பாஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவரா
3. யர் கண்டன், கண்டர் கண்டன், கண்டயப் பிறதாபன், க
4. ட்டாரிச் சாளுவன், கண்டனாடு கொண்டு கொண்டனாடு கெ
5. ாடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முலையகு
6. லோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு ஈழமுந்தி கை
7. ற கொண்ட ராசாதிராசன், சாசகெம்பீரன், ராசமனோ பய
8. ங்கரன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் க
9. ண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் கால
10. ந்தகன், தொண்டமண்டல ஸ்த்தாபனாசாரியன், சோழ
11. மண்டல ப்ரதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்
12. து பத்மனாசாரியன், மறுமன்னியர் கோடாரி, குறுமன்
13. னியர் கோளரி, துலுக்கர்தள விபாடன், துலுக்கர்மோ
14. கந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர்
15. மோகந் தவிழ்த்தான், அரியதள விபாடன் அரியர்மோகந்
16. தவிழ்த்தான், தற்க்காற்கு தற்க்கன், தற்க்க வினோதன், த
17. ண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன், சகல குணாபி
18. ராமன், துங்காபி ராமன், துர்க ரேபுந்தன், சொல்லுக் கரிச்ச
19. ந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடைக்குக் க
20. ற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம
21. உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தளபதி நரபதி
22. நரவேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுனதேவ மகா
23. ராயர், பிறபுடதேவ மகாராயர், யானைகுந்திதேவ மகா
24. ராயர், விருப்பாட்சிதேவ மகாராயர், ராமதேவ மகாரா
25. யர், கிஷ்ட்டிணதேவ மகாராயர், சீரெங்கதேவ மக
26. ராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற
27. சாலிவாகன சுசார்த்தம் 1719 கலியுக சகார்த்
28. தம் 4898 யிதன்மேல் செல்லா நின்ற பிங்க
29. ள வருஷம் அற்ப்பிசி மீ 21உ சுக்கில பட்சஞ் சதுற்த்தெசி சுக்



12 அடப்பன் சுவத்தப்பன் சத்திரச் செப்பேடு II

30. கிரவாரம் அசுபதி நட்செத்திரம் சித்திநாமயோகம் கவுல
31. வாகறணம் சுவடின புண்ணிய காலத்திலே ராச
32. ராச வளநாடு ராசேந்திரசோழ வளநாடு பன்றிசூழ்நா
33. டு அன்பில் தெற்குலூலிருக்குங் காணியுடைய அரச
34. ர் மக்களில் ஸ்ரீ
35. மது திருமலை
36. ராய தொண்
37. டைமானார் பெ
38. ளத்ரந் திருமலையப்ப ராய தொண்டைமானார் புத்ரந் ராச
39. ஸ்ரீ ராசா விசைய ரெகுனாத ராய பாதர் தொண்டைமானா
40. ரவர்களுக்கு மன்சுபா நடந்த கானாட்டில் செங்கமலம்
41. பிள்ளை மகன் அடப்பங் கூத்தப்பன் பேருக்கு அன்ன
42. தானத்துக்கு சத்திராங் கட்டிவிக்கச் சொல்லி கட்டளை யி
43. ட்டது. கபிலை வளநாட்டில் திருக்கோகருண ஸ்தலத்துக்
44. கு மேற்கு திருவோங்க வாசல் ஸ்தலத்துக்கு தெற்கு செல்லிகு
45. டி அய்யனார் கோயிலுக்கு க்கிழக்கு கவனாட்டில் கலிங்
46. கிக்கி வடக்கு சேது மார்க்கத்தில்ப் புண்ணிய பூமியான
47. பிரஹதம்பாள்புரம் பிரஹதம்பாள் பிறிதியற்த்தம
48. ாக சாசுவதிக அன்னதான தற்ம்மத்துக்கு சத்திராங் கல்
49. மண்டபமாக கட்டிவிச்சு இந்த தற்ம்மத்துக்கு கபிலை வ......
50. ..................................

## 13. வெண்ணைமுத்துப்பட்டிக் கல்வெட்டு

**இருக்கும் இடம் :** புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம் வெண்ணை முத்துப்பட்டிக் கிராமத்தில் நடப்பட்டுள்ள ஒரு பெரிய குத்துக்கல்லின் நான்கு புறங்களிலும் இக் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு புதுக்கோட்டை கல்வெட்டுத் தொகுதியில் 763-ஆம் கல்வெட்டாக அச்சாகியுள்ளது.

**அரசர்** : ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807)

**காலம்** : 20-11-1798

## அமைப்பும் செய்தியும்

இது கல்வெட்டாயினும், தொண்டைமானாரின் செப்பேட்டு நகல் என்ற குறிப்பு கல்வெட்டிலேயே வருவதால் செப்பேடுகளில் ஒன்றாகக் கருதி இங்குப் பதிப்பிக்கப்படுகிறது. இக் கல்வெட்டில் 15, 16 வரிகளுக்கு நடுவே ஶ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கு எழுத்துக்களில் பிற செப்பேடுகளைப் போலவே பொறிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி (திருசிரபுரம்)யில் எழுந்தருளியுள்ள தாயுமான சுவாமியார், சுகுந்த குந்தளாம்பிகை ஆகியோரின் சாயரெட்சைக் கட்டளை, அபிஷேக நைவேத்தியம், உச்சிக்கால நைவேத்திய பிராமண போஜனம், சிவ சகஸ்ரநாம அர்ச்சனை, லலிதா சகஸ்ரநாம அர்ச்சனை, அகண்ட தீபம், பாயசம், சம்பா நெய்வேத்தியம் ஆகியவைகளை நாள்தோறும் நடத்துவதற்காகத் தருமபுரம் சிவஞான சம்பந்த தேசிகர் சந்ததியான மவுனத்தம்பிரான் அவர்கள் வரம் கோனாட்டில் இடையாட்டி, கோனாட்டுச் சேர்க்கையில் கோங்கலம், செங்கை நாட்டுப் புலியூர்ச் சேர்க்கை வெண்ணைமங்கலம், கோனாபட்டியில் புஞ்சைக்காடு ஆகிய இடங்களில் 16 அடிக்கோலால் அளந்து 27800 குழி நிலம் கொடையாக அளிக்கப்பட்டது.

பாதிகாவல் கிராமங்கள் சில அளிக்கப்பட்டன.

| | |
|---|---|
| வடமுகமாத்தூர் | 16 பொன், |
| நாகமங்கலம் | 7 பொன், |
| கொட்டப்பட்டி | 6 பொன் நன்செயில் 1 செய், |
| மேல்க்குடி | 8 பொன் 2 பணம், |
| ஆதம்பட்டி | 35 பணம், |
| பொத்தம்பட்டி | 40 பணம் |

ஆகியவை பாதிகாவல் கிராமங்களிலிருந்து அளிக்கப்பட்ட கொடையாகும்.

நான்கு இடங்களில் அளிக்கப்பட்ட இடங்களுக்கு மிக விரிவாக எல்லைகள் கூறப்பட்டுள்ளன. எல்லைகளில் தேங்காய் தின்னிப்பட்டி, செட்டிப்பட்டி, சீவல்பட்டி, சீராளப்பட்டி, விராலூர், காளப்பநல்லூர், கதவனூர், கனையூர், மாத்தூர், அழுந்தூர், இறங்குடி, குளத்தூர், ஊமச்சிகுளி ஊரணி, கண்ணங்குடி, நாட்டாவழி, தேனரிப்பட்டி, பழைய கொளுப்பட்டி நத்தம்,விசலிகோயில், கிளவிகுளம், ஒசுவங்காட்டுக்கரை ஆகிய ஊர்களும் இடங்களும் குறிக்கப்படுகின்றன. சிலையிலும் செம்பிலும் செய்து கொள்க என்பதற்குச் சிறந்த சான்றாக இப் பட்டயக் கல்வெட்டு விளங்குகிறது.

# மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமந் மஹாமண்டலேசுபரன், அரியரா
2. யதள விபாடன், பாஷைக்குத் தப்புவரா
3. யர கண்டன், மூவராயிர கண்டன், கண்டர்
4. கண்டன், கண்டைபப்பிறதாபன், கட்டாரி
5. ச்சாளுவன், கண்டநாடுகொண்டு கொ
6. ண்டநாடு, கொடாதான், ஒருபரி கொ
7. ண்டு திரள்பரி வெட்டுமுபைய குலோத்
8. துங்கன், எம்மண்டலங் கொண்டு
9. ஈழமுந்திறைகொண்ட ராசாதிராசன், ரா
10. சகெம்பீரன், ராசநாறன குலதிலக
11. ன், ராசாக்கள் தம்பிரான் கோட்டத்
12. து மன்னியர் கண்டன் சொரிமன்னி
13. யர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தக
14. ன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரி
15. யன், சோழ மண்டல
16. பிரதிஷ்டாபனாசாரிய
17. ன், பாண்டிமண்டலத்து பதுமனாசாரியன்,
18. மறுமன்னியர் கோடாரி, குறுமன்னி
19. யர் கோளரி, துலுக்கர்தள விபாடன்,
20. துலுக்கர்மோகந் தவிள்தான், அ
21. ரியதள விபாடன், அரியர்மோகந்
22. தவிள்த்தான், ஒட்டியர்தள விபாட
23. ன், ஒட்டியர்மோகந் தவிள்த்தான், தெ
24. ாட்டியர் தள விபாடன், தொட்டியர்மோக
25. ந் தவிள்த்தான், தற்காற்குத் தற்கன், தற்
26. க்க வினோதன், தண்டுவார் மி
27. ண்டன், சகலகுணாபிராமன், து
28. ங்காபிராமன் துர்க ரேபந்தன்

29. சொல்லுக் கரிசந்திரன், வில்லு
30. க்கு விசையன், பரிக்கு நகுலன்,
31. குடைக்குக் கற்னன், பொறு
32. மைக்கு தற்ம்மர், பூறுவ தெக்ஷ
33. ண பட்சிம உத்தர ஸத்த சமுத்த
34. ராதிபதி, அசுபதி கெசபதி தன
35. பதி நரபதி நரவேட்டை கண்ட
36. ருளிய மல்லிகாற்சனதேவ ம
37. காராயர், பிறபுடதேவ மகாரா
38. யர், ராமதேவ மகாராயர், கிஷ்
39. ண தேவ மகாராயர். விருப்பா
40. ஷ்சிதேவ மகாராயர், ஆனைகு
41. ந்திதேவ மகாராயர், திருமலை
42. தேவ மகாராயர், ஸ்ரீரங்கரெங்
43. கதேவம காராயர் பிறிதிவி
44. ராச்சியம் பண்ணியருளாநின்ற
45. சாலிவாகன சகாற்த்தம் 17
46. 21 கலியுக சகாற்த்தம் 4
47. 899 யிதன் மேல்ச் செல்
48. லாநின்ற காலயுத்தி வருஷம் காற்
49. த்திகை மீம் 8உ மங்களவா
50. ரமும் பூறுவபட்சமும் துவாதெ
51. சியும் அசுபதி நட்செத்திரமும்
52. விதிபாதம்நாம யோகமும் பா
53. ல வாகரணமுங்சுவடின சுப
54. தினத்தில் யிந்திரகுல வங்கி
55. ஷன் தென்கோடி யாதிபன்
56. வடகரைப்புலி, வாகைமா
57. லைப் புயனான காசிப கோ
58. த்திரத்தில் விளங்கும் ஸ்ரீமது
59. திருமலைராயத் தொண்டமா
60. னார் பௌத்ரந் திருமலைய்ப ராய
61. தொண்டமானார் புத்ரந் ஸ்ரீ ராசா

62. விசைய ரகுனாத ராய பாதர்
63. தொண்டமானாரவர்கள் திரு
64. சிரபுரந் தாயுமானசுவாமி
65. யாருக்கும் அம்மன் சுகந்தகொ
66. ந்தளாம்பாளுக்கும் சாயரெட்
67. சைக்கட்டளை அபிஷேக நை
68. வேத்தியத்துக்கும் உச்சிக்கா
69. ல நைவேத்திய பிராமண
70. போசனத்துக்கும் சிவ சகஸ்
71. த்திரநாம அற்சனைக்கும் ஸ்ரீ
72. தா சகஸ்த்ரனாம அர்ச்சனைக்கு
73. ம் அகண்ட தீபத்துக்கும் பாய
74. சம் சம்பா நெய்வேத்தியத்து
75. க்குமாக யிந்தப்பிறகாரத்து
76. க்கு நித்தியப்படிக் கட்டளையாக
77. நடப்பிவிச்சுக்கொண்டு வர சொல்லி

## இரண்டாம் பக்கம்

78. தருமபுரஞ் சிவஞானசம்ப
79. ந்த தேசிகர் சந்ததியான
80. மவுனத் தம்பிரானவர்கள்
81. பாரிசமாக தாம்பிர சாத
82. ன பட்டையந் தாராபூறு
83. வமாகப் பண்ணிக் கொடு
84. த்தபடி, கோனாட்டில் யிடைய
85. பட்டி யெல்லையாவது தே
86. ங்காய்தின்னிப்பட்டி குட்
87. டியான் சோலைப் புஞ்சை
88. க்குக்கிளக்கு, செட்டிப்பட்டி யெ
89. ல்லை கருப்பிடி குளத்துக்குக் கி
90. ளக்குச் சீவல்ப்பட்டி யெல்லை
91. பாலைமேட்டுக்குக் கிளக்கு, வி
92. ருதாபட்டி பசுமேய்க்கிப்பட்டி

93. பட்டியான்குளத் துள்வாய்க்
94. குக் கிளக்குக் சீறாளப்பட்டி யெல்
95. லை திருவகவண்டன் மாந்தே
96. ாப்புக்குத் தெற்கு, விராலூார் எ
97. ல்லை தேசிகாலைக்கு மேற்கு,
98. காளப்பனல்லூ ரெல்லைத் தே
99. ரான் புளியமேட்டுக்கு மேற்குக் க
100. தவனூ ரெல்லை பள்ளிகொ
101. ண்டான் புஞ்சை புளியமரத்து
102. க்கு வடக்கு, சுனையூரெல்லை
103. கோமுட்டிச்சி காலைக்கு வடக்
104. கு ஆகப்பெருனான்கெல்லைக்
105. குள்பட்ட நஞ்சை புஞ்சையும்
106. யிதுவும் கோனாட்டுச் சேற்கை
107. யில் கோமங்கலத்துக் கெல்
108. லையாவது ஊருக்குக் கிளக்
109. குக் கீள்பார்க்கெல்லையாவ
110. து மாத்தூர் எல்லை சுனிய
111. ன் மேடுகாட்டுக்கு மேற்கு இதன்
112. தெற்கு அளுந்தூர் எல்லை மே
113. ல்ப்படி பறயனூறணி முன்
114. வாயில்ப் பாறைக்காட்டுக்
115. கு மேற்கு இதன் தெற்கு அளுந்தூர்
116. கொம்பளகி மேடு காட்டுக்கு மே
117. ற்கு தென்பார்க்கெல்லையாவது
118. யிறங்குடி எல்லை மேல்படி க
119. ன்னிமார் கோவில் மறியல்
120. க்காட்டுக்கு வடக்கு, இதன் மே
121. ற்குக் குளத்தூர் எல்லை வளியா
122. னகாட்டுக்கு வடகிழக்கு, மேல்
123. பார்க்கெல்லையாவது குளத்தூ
124. ர் பக்கிரிசாயபு குளத்து நஞ்சை
125. சக்குக் கிழக்கு இதன் வடக்குக்
126. குளத்தூர் கீள்ப்பட்டி மந்தை

127. ஆலமரத்தக்கு மேல்ப்பாடியூர்
128. வேலிக்குங் கிழக்கு இதன் வட
129. க்கு குளத்தூர் பெரியகுளத்து
130. க்கீழ்வயல் நஞ்சைக்குத் தெ
131. ன்கிழக்கு வடபார்க்கெல்லை
132. யாவது, குளத்தூர் நஞ்சை வயல்
133. க்களிவு கிராய்வளிக்குந் தெற்கு
134. இதன் கிளக்கு மாத்தூர் எல்லை
135. மேல்படி பெரியகுளத்து முன்
136. வாய் புங்கங்காட்டுக்கு தெற்கு
137. ஆகப்பெருநாங்கெல்லைக்குள்ப
138. ட்ட நஞ்சை புஞ்சையுமிதுவும்
139. செங்கைநாட்டுப் புலியூர்ச்சேற்
140. கை வெண்ணமங்கலத்துக்கெ
141. ல்லையாவது மேல்படி வயலுக்
142. கெல்லையாவது கீள்பார்க்கெல்லை
143. ஊமச்சிக்குளியூரணி மேல்கரை
144. க்கு மேற்கு தென்பார்க்கெல்
145. லையாவது கண்ணாங்குடி வயலு
146. க்கு வடக்கு மேல்பார்க்கெல்
147. லை நாட்டாவழிக் களறங்காட்டுக்
148. குக் கிளக்கு வடபாற்கெல்லை தேன
149. ரிப்பட்டியெல்லை வேப்பாடிவாரிக்
150. குத்தெற்கு யிந்தப் பரிநான்கெல்
151. லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சையு
152. ம் யிதுவுங் கொளுப்பட்டிப் புஞ்சை
153. சக்காட்டுக்கெல்லை பழையகொ
154. ளுப்பட்டி நத்தத்து ஊறணிக்
155. கிக் கிழக்கு விசலிகோவில்ப்
156. புஞ்சைக்கு வடக்கு கிளவிகுள
157. த்துக் கீள்க்கரைக்கு மேற்கு
158. கண்ணாங்குடிக் கரையாடி பு
159. ஞ்சை ஒசுவல் கட்டுக்கரைக்
160. குத் தெற்கு யிந்த பரிநான்கெல்

161. லைக் குள்ப்பட்ட புஞ்சையில் கிள
162. விகுளவாய்ப் பஞ்சாப்பன்பு
163. ஞ்சை நீங்கலாகப் பதினாறடி

## மூன்றாம் பக்கம்

164. க்கோலால்
165. குழி 27800
166. ஆக கிறாமமூறு
167. க்குள்ப்பட்ட நஞ்
168. சை புஞ்சை திட்
169. டுத்திடல் நத்த
170. ம் படிகை தோப்
171. புத் துறவு மாவி
172. டை மரவிடை
173. சொர்ணாதாயம்
174. வகையுறுப்பு இட
175. ங்கை வலங்கை
176. பலசுவுந்திரம்
177. யாவினை விசேஷ
178. வகை யிது முத
179. லான எப்பேர்
180. ப்பட்ட வரியுங்கீ
181. ள்நோக்கிய கிண
182. று மேல்நோக்கி
183. ய விருட்சஞ் செல
184. தரு பாழாண நிதி
185. நிட்சேபமும் பா
186. திகாவல் இடை
187. யாட்டு கோமங்
188. கலத்துக்குள்
189. ள பணமும் வட
190. முக மாத்துரப்
191. பாதிகாவல்ப்

192. பதினாறு பொன்
193. நாகமங்கலம்
194. ஏழு பொன் கெ
195. ாட்டப்பாட்டியி
196. ல் ஆறு பொன்
197. றும் , நஞ்சையி
198. லொரு செய்பு
199. மேல்க்குடி யே
200. ழுபொன் மிட
201. ங்குப்பட்டி எட்டு
202. ப்பொன்றும்
203. ஏரெண்டு பண
204. மும், ஆதம்பட்டி
205. முப்பத்தஞ்சு ப
206. ணமும் பொத்
207. தப்பட்டு நாற்ப
208. த்துபணமு மி
209. ந்தப் பாதி காவ
210. ல் கிறாமங்களி
211. ல் பெய்பேர்ப்ப
212. ட்ட குத்தங்களி
213. ருந்தாலும் தாங்
214. களே தீத்து வா
215. ங்கிக்கொள்ளு
216. கிறது. யிந்தப்
217. படிக்கி தாம்பி
218. ரசாதனபட்ட
219. யாங்கொடுத்த
220. படியினாலே
221. சந்திராதித்தர்
222. உள்ளவரைக்கு
223. ங்கல்லுங்காவே
224. ரியும் புல்லு
225. ம் பூமியுமுள்ள

226. வரைக்கும் எங்
227. கள் புத்திர பவுத்
228. திர பரம்பரை
229. யாகவும் தங்க
230. ள் சந்ததி பாரம்
231. பரையமாகவு
232. மிந்தச் சிவதற்
233. மத்தை உத்திரசே
234. காத்திரமாக ந
235. டப்பிவிச்சுக் ெ
236. காண்டு சுகத்தி
237. லேயிருக்கக் க
238. டவார்களாக
239. வும். யிந்த தற்ம
240. த்துக்கு வாக்கு
241. சகாயம் சரீ
242. ர சகாயம் அற்
243. த்த சகாயம் ப
244. ண்ணின பேர்
245. கள் காசியிலே
246. கெங்கைக் கரை
247. ரயிலே கோடி
248. சிவலிங்கப் பி
249. றதிட்டை பண்
250. ணின பலனைய
251. டைவார்களாக
252. வுமிந்த தற்மத்
253. துக்குங் கிறாமங்
254. களுக்கும் பாதிக
255. ரவலுக்கும் அகுதம்
256. பண்ணின பேர்
257. கள் கெங்கைக்க
258. ரையில் கோடி

259. காராம்பசுவை
260. க் கொன்ற தோ
261. ஷத்திலே போ
262. வார்களாகவும்.

## நான்காம் பக்கம்

263. யிந்த தற்ம க
264. ாரியத்துக்
265. கு போக்கு வ
266. ரத்து ஸ்தா
267. னாபத்திய
268. ம் பண்ணு
269. குறவற்கு ச
270. ம்பளம் வ
271. ருஷம் ஒண்
272. ணுக்கு நா
273. ற்பத்து ரெண்
274. டு பொண்ணு
275. ம் யிந்தக்
276. கட்டளைப்
277. பணத்தில்
278. குடுத்து வரு
279. வார்களா
280. கவும். நவ
281. ராத்திரி தி
282. ருவா
283. திரை சி
284. வராத்தி டை
285. ரக்கட்டளை
286. யும் நடப்பி
287. விச்சு வரு
288. வார்களா
289. கவும். யிந்
290. த ஸாசன

291. ம் எழுதின
292. நன்மை ப
293. முணியப்ப
294. வாத்தியார்
295. குமாரன்வெ
296. குனாத வாத்தி
297. யார் கையி
298. எழுத்து உ.

# 14. அம்மணி சத்திரச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 8–5–1799 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 46 செ.மீ X 30.5 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

இச் செப்பேடு அழகான வேலைப்பாடுடன் கூடிய பெரிய கைப்பிடியை உடையது (14.5 செ.மீ உயரம் 12 செ.மீ அகலம்). கைப்பிடியின் உச்சியில் துளை உள்ளது. கைப்பிடியின் கீழ்ப்பகுதி கோயில் பலிபீடம் போல்அழகான வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளது. அப் பீடத்தின் மேல் பகுதியில் வாமனர் அடி எடுத்து வைப்பது போன்று வரைகோட்டு ஓவியம் வரையப்பட்டுள்ளது. வாமனரின் வலக்கையில் கமண்டலமும், இடக்கையில் குடையும் உள்ளது. இடையில் சிறு துண்டும் கோவணமும் அணிந்து வாமனர் காணப்படுகிறார். முப்புரி நூலும் உடலில் திகழுகிறது.

செப்பேட்டின் பின்பக்கம் கைப்பிடிப் பகுதியில் நான்கு பக்கமும் படிகள் அமைந்த ஒரு தெப்பக்குளம் வரையப்பட்டுள்ளது. அத் தெப்பக்குளத்தின் கீழ்ப் பகுதியில் நீர் வேட்கையால் நிமிர்ந்து பார்க்கும் ஒரு பசு வரையப்பட்டுள்ளது. அத் தெப்பக்குளம் பற்றிய குறிப்பு இச் செப்பேட்டிலும் வருகிறது.

இச் செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

பொதுவாகப் பிற்காலச் செப்பேட்டில் காணும் அரசர் புகழ் மொழிகளுக்குப்பின் விசயநகர அரசர் சிலரின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. அப் பெயர்கள் முன்பு ஆட்சி புரிந்தவர்கள் என்ற பொருளில்தான் குறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு ஆண்டறிக்கையில் சீரங்கராயர் ஆட்சிக் காலத்தில் இச் செப்பேடுக் கொடை அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது பொருந்தாது. இச் செப்பேட்டின் காலம் 8–5–1799 ஆகும். அப்போது இப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து விட்டனர்.

ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமான் அவர்கள் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1789 – 1807) தொண்டைமானார் அவர்கள் தமையனார் அவர்களின் மனைவியார் அம்மணி ஆயி அவர்கள் கானாட்டில் சேது மார்க்கத்தில் சுவேத நதிக்குத் தெற்கு கிராயன்குளத்துக்கு மேற்கு அருமேளம்பாலுடையார் கோயிலுக்கு வடக்கு ஒணாங்குடி அக்கிரகாரத்துக்குக் கிழக்கு பிரான்மலைக்கு வடகிழக்கு இந்த எல்லைகளின் மத்தியில் அன்னதான தர்மத்துக்குக் கல்மண்டபமாக ஒரு சத்திரம் கட்டிய செய்தியை இச் செப்பேடு கூறுகிறது.

இச் செப்பேட்டில் காணும் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானின் தமையனார் (பெரியப்பாவின் மகன்) ராயரகுநாத தொண்டைமானார் (கி.பி.1769–1789) அவர்களே இச் சத்திரம் கட்டிய அம்மணி ஆயி அவர்களின் கணவர் ஆவர். அம்மணி அம்மாள் என்று எழுதி அம்மாள் என்பது ஆயி என்று திருத்தப்பட்டது போல் தோன்றுகிறது.

கீழ்வரும் பட்டியல் இவர்கள் உறவை விளக்கும்.

திருமலைராய தொண்டைமானார் – நல்லாயி ஆயி
(மறைவு 1729) (பன்றிகொண்டார் குடும்பம்)

விசைய ரகுநாதராய தொண்டைமானார் (1730 – 1769)
ராய ரகுநாத – அம்மணி ஆயி தொண்டைமானார் (1769 – 1789)

திருமலை தொண்டைமானார் – பெரும்தேவி ஆயி (மறைவு 1789)
விசையரகுநாத தொண்டைமானார் (1789 – 1807) – பிருகந்நாயகி ஆயி

ராய ரகுநாத தொண்டைமானார் குடும்பத்தைப் புதுக்கோட்டையில் மேல அரண்மனை என்று வழங்குவர். தம் கணவர் இறந்து 10 ஆண்டுகட்குப் பின் இந்தச் சத்திரத்தை அம்மணி ஆயி கட்டினார். இன்றும் அவர் பெயரால் இச் சத்திரம் அம்மணி சத்திரம் என்று வழங்கப் பெறுகிறது. (அரிமளத்திற்கு அருகில் உள்ளது) இப் பெயரில் சத்திரத்தின் அருகில் ஒரு ஊரே ஏற்பட்டுவிட்டது.

இச் சத்திரத்திற்காக அம்மணி ஆயி மிரட்டுநிலை மகாணச் சேர்க்கையில் புதுக்குளம் பிறகரைவயல் நன்செய், புன்செய் இவைகளைக் கொடையாக அளித்தார். கொடையாக அளிக்கப்பட்ட நிலங்களுக்கு அணைஞ்சிக்குளம், அக் குளக் கால்வாய், ரொக்க குத்தகை மறியல் புன்செய், குளம் பிறகரை, பிறகரை புளியடி மறமடக்கி அமரம் புன்செய், இவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்சல் குளம் ஒன்று ஆகியவை கூறப்படுகின்றன. இவ் வகையில் 10000 குழி கொடையாக அளிக்கப்பட்டது.

இவை தவிர அருமேளம் (அரிமழம்) சேர்க்கையில் சிராயன் வயலும் கொடையாகக் கொடுக்கப்பட்டது. அந் நிலத்துக்குக் கொக்காசனவயல், வத்திசெல்லி வீட்டுத்திடல், விளக்கு மூக்குத்தளை, கொக்காசனக் குளம், பிறகரைக் கச்சல்க்கொல்லை, சிராயன்குளம், கொக்காசனக் குளம் வடகடைக்கோம்பு, வேப்படிப் புஞ்சையில்

கீழ்க்கடைத் தாக்கு, சேத்துக்குளம் வாத்தலை நீர்ப்பிடி ஆகியவை எல்லைகளாகக் கூறப்படுகின்றன. இவ் வகையில் 1101 3/4 குழி அளிக்கப்பட்டது. மொத்தம் நன்செய், புன்செய் 10101 3/4 குழி அளிக்கப்பட்டது. இவற்றுடன் தெப்பகுளம் தோட்டமும் ஆலங்குடிச் சேர்க்கை அருமேளம் (அரிமழும்) சுங்கமும், வாணியன் செக்குக் குத்தகை எண்ணெய் 70 படியும் தர்மத்துக்குக் கொடுக்கப்பட்டது.

சத்திரத்திற்குக் தேவையான கீழ்க்கண்ட பாத்திரங்களும் அம்மணி ஆயி அவர்களால் கொடையாக கொடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பித்தளைச் செப்புக்குடம் | : | 2 |
| தபிலை | : | 2 |
| சின்னத்தபிலை | : | 2 |
| செம்பு | : | 3 |
| போகணி | : | 2 |
| சறுவ சட்டி | : | 2 |
| கறண்டி | : | 2 |
| கொப்பறை | : | 1 |
| பெரிய வெங்கலப்பானை | : | 1 |
| பித்தளைத் தாம்பாளம் | : | 2 |
| கமலம் | : | 1 |
| குத்துவிளக்கு | : | 1 |
| ஆக உருப்படி மொத்தம் | | 21 |

இவை தவிரப் பசுமாடு நாற்பதும், ஆடுகள் அறுபதும் கொடையாக அளிக்கப்பட்டன.

மேலைக் கோட்டையில் அணைவயல், கோணவயல் ஆகியவற்றில் 9400 குழி நன்செயும், ஊரணி வயலில் 1383 அரையே அரைக்கால் குழி நன்செயும் ஆக மொத்தம் 10783 அரையே அரைக்கால் குழி நன்செயும் புன்செயில் 100-ம் அளிக்கப்பட்டன.

ஆயிபட்டியில் தேதரவடி புன்செய்

ஆமணக்கன் புன்செய்

கோணப் புன்செய்
ஒச்சன் புன்செய்
கழுதை கட்டிப் புன்செய்

ஆகிய 6 தாக்குகள் 2000 குழியும்,

ஊரணிக்குத் தெற்கு புளக்கடைப் புன்செய்
அரண்மனை வெட்டிக்காட்டுப் புன்செய்
மதுரைமூலை பறையன் புன்செய்
வேப்படி புன்செய்
கருங்காலிப் புன்செயும் ஆக மொத்தம்11

தாக்குகள் புன்செய் நிலங்களும் அம்மணி ஆயி அவர்கள் தம்மால் கட்டிய சத்திரத்திற்கு வழங்கினார்.


இச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரெகுனாத வாத்தியார் எழுதினார் என்ற குறிப்பு செப்பேட்டின் இறுதியில் காணப்படுகிறது.

## மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள
விபாடன், பாஷைக்கு த
2. ப்புவராயர் கண்டன், மூவராயிர கண்டன், கண்டர்
கண்டன் கண்டை
3. யப் பிறதாபன் கட்டாரிச் சாளுவன் கண்ட நாடு கொண்டு
கொண்டநாடு கொ
4. டாதான் ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு
முடையகுலோத்துங்கன், எம்மண்
5. டலங்கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசாதிராசன்,
ராசபரமேசுபரன், ரா
6. சமாற்த்தாண்டன், ராசகண்டீரவன், ராசநாறனகுல திலகன்
ராசாக்கள் த
7. ம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னியர்
சூரியன், கெடி




**14 அம்மணி சத்திரச் செப்பேடு முதல் பக்கம்**

8. மன்னியர் காலாந்தகன் தொண்டமண்டல
ஸ்தாபனாசாரியன், சோழமண்
9. டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து
பத்மனாசாரியன், மறும
10. ன்னியர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, குலுக்கர்தள
விபாடன், துலுக்கர்
11. மோகந் தவிழ்த்தான், அரியதள விபாடன், அரியர்மோகந்
தவிழ்த்தான், தொ
12. ட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான்,
தற்க்காற்குத் தற்
13. க்கன் தற்க்கவினோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்
பிறசண்டன், ஸ
14. கல குணாபிராமன், துங்காபிராமன், துர்க ரேபந்தன், சொல்லுக்
15. கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடைக்கு
16. க் கற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம
17. உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரபதி,ந
18. ரவேட்டை கண்டருளிய மல்லிகாற்ச்சுனதேவ மகாராயர், பி
19. றபுடதேவ மகாராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், ராமதே
20. வ மகாராயர், கிஷ்ட்டிணதேவ மகாராயர், விருப்பாட்சிதேவ
21. மகாராயர். நரசிங்கதேவ மகாராயர், அரிகர தேவ
மகாராயர், புசங்
22. கதேவ மகாராயர், திருமலைதேவ மகாராயர்,
ஸ்ரீரெங்கதேவ மகா
23. ராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற சாலிவாஹந
24. சகாப்தம் 1721 கலியுக சகாப்தம் 4900 யிதன்மேல்
25. செல்லாநின்ற சித்திராத்தி வருஷம் சித்திரை மீ 29 தீ சுக்லபக்ஷ
26. மும் புதவாரமும் திரிதியையும் ம்ருக சீர்ஷ நக்ஷத்திரமும் ஸ்ௌகர்ம்
27. மநாம யோகமும் பிரஜவாகரணமும் கூடின அக்ஷயத்திரிதிய பு
28. ண்யகாலத்திலே ராசராசவளநாடு ராசேந்திரசோழ வளநா
29. டு பன்றிசூள்நாடு, அன்பில் தெற்குலூரிலிக்குங் காணியுடை
30. ய அரசர்மக்களில் யிந்திரகுல வங்கிஷன் அன்பில்னாடன் தென்கே
31. காடியாதிபன் வடகரைப்புலி வாகைமாலை புயனான ஸ்ரீமது திரு
32. மலை ராய தொண்டைமானார் பௌத்ரந் திருமலையப்ப ராய தொ
33. ண்டைமானார் புத்ரந், ராசஸ்ரீ விசைய ரெகுனாத ராய பா

34. தர் தொண்டைமானாரவ
35. ர்கள் தலையனார் தர்ம்மப
36. த்நி அம்மணி ஆயி அவர்கள் பண்ணின தற்மம், கானா
37. ட்டில் சேதுமார்க்கத்திலே சுவேதநதிக்கு தெற்கு சிராயன்
38. குளத்துக்கு மேற்கு அருமேளம்பாலுடையார் கோவிலுக்கு
39. வடக்கு ஓணாங்குடி அக்கிறாகாரத்துக்குக் கிழக்கு, பெராமலை
40. க்கு வடகிழக்கு மத்தியத்திலே புண்ணிய பூமியிலே சாசுவதி
41. க அன்னதான தற்ம்மத்துக்கு சத்திரங் கல்மண்டபமாககட்டி
42. விச்சு இந்த தற்ம்மத்துக்கு மிரட்டுநிலை மகாணஞ் சேர்க்கை
43. புதுக்குளம் பிறகரைவயல் நஞ்சை புஞ்சைக்கு எல்லையாவது
44. கீழ்பாற்கெல்லை அணஞ்சிக்குளம் தாஞ்சிமான் முக்சுவட்டுக்கல்
45. லுக்கு மேற்கு, தென்பாற் கெல்லை அணஞ்சிக்குளம் கால்வாய்
46. க்கு வடக்கு, மேல்பாற்கெல்லையாவது ரொக்ககுத்தகை மறியல்
47. ப் புஞ்சைக்குக் கிழக்கு, வடபாற்கெல்லையாவது குளம் பிறகரை
48. ரக்குத் தெற்க்கு யீசானிய மூலை பிறகரை புளியடி மறமடக்கி
49. அமரம்புஞ்சைக்கு தெற்க்கு ஆக நான்கெல்லைக் குள்ப்பட்ட நஞ்
50. சை புஞ்சை குழி 10000 யிந்த நிலத்துக்கு தண்ணீர்ப் பாச்சல் குளம்
51. ஒண்ணு, யிதுவும் அருமேளம் சேற்க்கை சிராயன் வயலுக்கெல்
52. லையாவது கீழ்பாற்கெல்லை கொக்காசனவயல் வாத்தி செல்லி
53. வீட்டுத் திடலுக்கும் விளக்குமுக்குத்தலைக்கு மேற்கு தென்பாற்கெ

## இரண்டாம் பக்கம்

54. கல்லையாவது கொக்காசன குளம் பிறகரைக் கச்சல்க் கொ
55. ல்லைக்கு வடக்கு மேல்பாற் கெல்லையாவது சிராயன் குளம்
56. தென்கடையில் கொக்காசன குளம் வடகடைக்கோம்பு வே
57. ப்படிப் புஞ்சையில் கீள்க்கடைய்தாற்கு ஒண்ணுக்கு புஞ்சை
58. குழி 1101 3/4 வடபாற்கெல்லையாவது சேத்துக்குளம் வாத்தலை
59. நீர்ப்பிடிக்கு தெற்கு ஆக நான்கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சை பு
60. ஞ்சை குழி 10101 3/4 யிந்த நான்கெல்லைக்குள்பட்ட
நஞ்சை புஞ்சை
61. திட்டுத் திடல் தோப்புத் துறவு நத்தம் படுகையும் சத்திரத்துக்குள்ப்
62. பட்ட புஞ்சையும் தெற்ப்பக்குளந் தோட்டமும் யிந்த தற்ம்மத்துக்கு
63. உண்டு பண்ணின ஆலங்குடிச் சேற்கை அருமேளம் சுங்கமும் வ
64. ாணியன் செக்குக் குத்தகை எண்ணை படி 70 தற்ம்மத்துக்குக்



14 அம்மணி சத்திரச் செப்பேடு இரண்டாம் பக்கம்

65. குடுத்த பாத்திரம் பித்தளை செப்புக்குடம் ரெண்டு தபிலை ரெண்

66. டு வெங்கலப்பானை ஒண்ணு பித்தளைதாம்பாளம் ரெண்டு சறு

67. வசட்டி ரெண்டு கறண்டி ரெண்டு கொப்பரை ஒண்ணு வெரி

68. ய வெங்கலப்பானை ஒண்ணு பித்தளைதாம்பாளம் ரெண்டு க

69. மலம் ஒண்ணு குத்துவிளக்கு ஒண்ணு ஆக உருப்படி 21ற்கு படி

70. பசுமாடு நாற்பது ஆடு அறுவது சொற்ன்னாதாயம் வகையறுப்

71. பு யிடங்கை வலங்கைவரி பலசுவந்திரம் யிதுமுதலான யெப்பெய

72. ர்ப்பட்ட வரியும் கீழ்நோக்கிய கிணறு மேல்நோக்கிய விருட்ச

73. ம் ஜல தரு பாஷாணம் நிதி நிக்ஷேபம் ஸர்வமாந்யமாக தார

74. ா பூர்வமாக தாம்மிர சாஸநப் பட்டையங் கொடுத்தபடியினா

75. லே கோகருணேசுவரரும் பிரகதாம்பாளும், நிம்பவந யீசுவரரும்

76. பிரகதம்பாளும் திருவிடையாரும் திருவிருந்த ணாயகியும்
ஆத்மநாே

77. தசவரரும் சிவயோக ணாயகியும் ஸாக்ஷியாக யிந்த
தர்ம்மம் சந்தி

78. ராதித்யற்வரைக்கும் யெங்கள் புத்ரபௌத்ர பாரம்பரைக்கும்

79. தர்ம்மத்தை உத்திர கோத்திரமாக நடப்பிவிச்சுக் கொண்டு வ

80. ரச்சொல்லி குடுத்தோம் யிந்த தர்ம்மத்துக்கு
வாக்குஸ்ஸஹாயம்

81. சரீரசகாயம் அர்த்தஸஹாயம் பண்ணிநபேருகள் காசியில்

82. கங்கா தீரத்திலே கோடி சிவலிங்க பிரதிஷ்ட்டை பண்ணிந ப

83. லநை அடையக்கடவோறாகவும், யிந்த தற்ம்மத்துக்கு அகிதம் ப

84. ண்ணின பெயர்கள் கோடி காராம்பசுவைக் கொன்ற தோஷ

85. த்திலே போகக்கடவாராகவும், தாந பாலந யோர்ம்மத்யே தாநா

86. ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத

87. ச்சுதம் பதம் : ஏகைவ பஹிநீ லோகே ஸர்வேஷா மேவ

88. பூபுஜாம் நஹோராஜ்யா நகரக் ராஹ்யா வீப்ர தத்தா வஸுந்தர

89. ா: ஸ்வதத்தாத்வி குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப

90. ஹாரேண ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது :
மேலைக்கோட்டையில் அ

91. ணைவயல் கோணவயலில் நஞ்சை குளி 9400 யிதுவும்

92. உவரணிவயலில் நஞ்சை குளி 1383 அரையே அரைக்கால்
ஆக நஞ்சை

93. குளி 10783 அரையே அரைக்கால், யிதுவும், புஞ்சையில்
100 ஆயிபட்டியி
94. ல் தேதரவடி புஞ்சை தாற்கு 1. யிதின்வடக்கு ஆமணக்கன்
புஞ்சை தாற்
95. கு 1, யிதின் வடக்கு கோணபுஞ்சை தாற்கு 1, யிதன் வடக்கு
ஓச்சன் புஞ்ை
96. ச தாற்கு1, யிதின்கிழக்கு கழுதைகட்டி புஞ்சை தாற்கு 1
யிதின்தெற்கு கட்டுக்
97. கரை புஞ்சையில் மேல்பிறத்தில் குளி 2000ற்கு தாற்கு1,
யிதின்தெற்கு ஊறணி
98. க்கு தெக்கு புளக்கடை புஞ்சை தாற்கு 1 யிதின்கிழக்கு அரமனை
வெட்டிக்காட்டு
99. புஞ்சை தாற்கு 1, யிதின் தெற்கு மதுரைமூலை பறையன் புஞ்சை
தாற்கு 1, யிதி
100. ன் கிளக்கு வேப்படிபுஞ்சை தாற்கு 1 யிதின் வடகிழக்கு
கருங்காலிபுஞ்ை
101. ச தாற்கு 1, ஆக புஞ்சை தாற்கு 11 யிந்த தாம்பர சாஸநப்பட்
டையம் எ
102. ழுதின நன்மை பழணிப்ப வாத்தியார் மகன் ரெகுனாத
வாத்தியார் கையி எ
103. ழுத்து.

## 15. காசிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | காசிமடம், திருப்பனந்தாள்,<br>தஞ்சாவூர் மாவட்டம் |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாத பாதர்<br>தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 1–12–1800 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 36.5 செ.மீ X 21.5 செ.மீ |

### அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டில் துளையுடன் கூடிய கைப்பிடியில் செப்பேட்டின் கொடைக்கேற்பக் காசி விசுவநாதரும் விசாலாட்சியும் முன்பக்கம்

அழகாக வரையப்பட்டுள்ளனர். விசுவநாதர் முகலிங்கம் போன்ற அமைப்பில் மாலையுடன் அலங்கார வடிவில் காட்சியளிக்கிறார். இடப்புறம் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் விசாலாட்சி காட்சியளிக்கின்றார். இருவருக்கும் பின்னர் பிரபை பொதுவாகக் காட்சியளிக்கிறது. கோடு ஒன்று இடையில் விசுவநாதரையும் விசாலாட்சியையும் பிரிக்கிறது.

கைப்பிடியின் பின்புறத்தில் காசித் தலத்தின் சிறப்புத் தெய்வம் கால பைரவர் தம் வாகனமான நாயுடன் இரண்டு திருக்கரங்களோடு நின்ற நிலையில் வரைகோட்டு உருவில் உள்ளார். வலக்கையில் செண்டு ஒன்றை ஏந்தியுள்ளார். பைரவருக்கு முன் தண்டு ஒன்று காட்சியளிக்கிறது.

செப்போட்டின் முதல் பக்கம் இடையில் பெரிய எழுத்துக்களில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. பிற்காலச் செப்பேடுகளில் காணப்படும் அரசர்களுக்குரிய பொதுவான புகழ்மொழிகள் பல உள்ளனவேயன்றித் தொண்டைமானார் மரபுக்குரிய சிறப்பு அடைமொழிகள் எதுவுமில்லை. ராசா விசைய ரெகுநாத பாதர் தொண்டைமானார் அவர்கள் (1789–1807) 1–12–1800 அன்று செங்கமலம்பிள்ளை மகன் அடப்பங் கூத்தப்பன் பெயரில் சைவர்களுக்கு முத்திநகரமாகத் திகழும் பெரும் தலம் காசியில் செய்த சில கொடைகளை இச் செப்பேடு விளக்குகிறது.

அவர் காசியில் அடப்பங் கூத்தப்பன் பெயரில் செய்த அறச்செயல்கள்

(1) காசியில் கங்காதீரக் கரையில் சோமேசுரக் கட்டத்தில் தர்மசாலை சத்திரம் ருபாய் 1250 செலவில் கட்டப்பட்டது.

(2) காசி விசுவநாதர் விசாலாட்சியம்மன் அபிஷேகம் நைவேதனம் வில்வார்ச்சனை திருவிளக்குக் கட்டளைகள் நாள்தோறும் 1 1/4 பணம் செலவில் நடத்தப்பட்டது.

(3) நாள்தோறும் ஆறுபேருக்கு அன்னதான தர்மம் நடைபெற்றுவர மூலப்பொருளாக ருபாய் 625 அளிக்கப்பட்டது.

(4) சோமேசுரக் கட்டத்தில் கட்டப்பட்ட சத்திரத்துக்கு கொவ்வனூருக்கு உள்க்கடையான சுவத்தனூரில் பாந்தலைவயல் புதுவயல் நன்செய் புன்செய் விடப்பட்டது.

இவையனைத்தும் தருமபுரம் திருஞானசம்பந்த தேசிகர் சீடரான காசிவாசி சடையப்பத் தம்பிரான் அவர்கள்வசம் அளிக்கப்பட்டது.

கொடையாக அளிக்கப்பட்ட நிலங்களுக்கு எல்லையாக வாழைக்குறிச்சி புலவன் புன்செய், வாமன முத்திரைக்கல், புணங்கி புன்செய் அனாதிகளர், பொன்னமராபதி பாதை, பூவாலைக்குடி, பள்ளன் ஊறணி, மாணிக்க நாச்சியார் ஊறணி ஆகியன கூறப்பட்டுள்ளன.

கொடையைக் காப்போர் அடையும் புண்ணியமும் தீங்கு செய்வோர் அடையும் பாவங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தானத்தைக் காப்பது பற்றிய இரு வடமொழிச் சுலோகங்கள் இறுதியில் பொறிக்கப்பட்டுள்ளன.

இச் சாசனத்தைப் பழனியப்ப வாத்தியார் மகன் ரெகுனாத வாத்தியார் என்பவர் எழுதியதாகக் கூறப்பட்டுள்ளது.

## மூலம்

### முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயத
2. ள விபாடன், பாஷைக்கு தப்புவராயர் கண்டன்,
3. மூவராயர் கண்டன், கண்டர் கண்டன், கண்ன
4. டயப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநா
5. டு கொண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி செ
6. காண்டு திரள்பரிவெட்டு முடைய குலோத்துங்கன்,
7. எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறைகொண்ட ரா
8. சாதிராசன், ராசபரமேசுபரன், ராசகெம்பீரன், ரா
9. சநாறன குலதிலகன், ராசகண்டரவன், ராசாக்க

10. ள் தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரி
11. மன்னியர் சூரியன், கெடி மன்னியர் காலாந்தகன்,
12. தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்
13. டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டி மண்ட
14. லத்து பத்மனாசாரியன், மறுமன்னியர் கோடாரி, கு
15. றுமன்னியர் கோவாரி, துலுக்கர்தள விபாடன், துலு
16. க்கர்மோகந் தவிழ்த்தான், அரியதள விபாடன், அரிய
17. ர் மோகந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தொ
18. ட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்க்காற்கு தற்க்கன், தற்
19. க்க வினோதன், தண்டுவார் மிண்டன், சண்(ட)ப்பிறசண்ட
20 ன், ஸகல குணாபிராமன், துங்காபிராமன், துர்(க) ரேப
21. ந்தன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன்,
22. பரிக்கு நகுலன், குடைக்குக் கற்ன்னன், பொறுமைக்
23. கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திரா
24. திபதி அசுபதி கெசபதி தனபதி நரபதி, நரவேட்டை கண்
25. டருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பிறபுடதே
26. வமகாராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், ராமதே
27. வ மகாராயர், கிஷ்ட்டிணதேவ மகாராயர் விருப்பா
28. ட்சிதேவ மகாராயர், ஸ்ரீ ரெங்கதேவ மகாராயர் பிற
29. திவி ராச்
30. சியம் ப
31. ண்ணிய
32. ருளாநின்ற சாலிவாகன சகாற்த்தம் 1722
33. கலியுக சகாப்த்தம் 4901 இதன்மேல் செலாநின்
34. ற ரவுத்திரி வருஷம் காற்த்திகை மீ 19 உ திங்கள்க் கிழ
35. மையும் பௌநமாவாஸ்யையும் ரோகணி நட்செத்தி
36. ரமும் சித்தனாம யோகமும் பவகறணமும் யிதுக
37. ள் சுபதின புண்ய காலத்திலே ராசராச வளநாடு ர
38. ாசேந்திரசோழ வளநாடு பன்றிசூழ்நாடு அன்பில்
39. தெற்குலூரிலிருக்குங் காணியுடைய அரசர்மக்க
40. ளில் காசிப கோத்திரத்தில் விளங்கும் ஸ்ரீமது திருமலை
41. ராய தொண்டைமானார் பௌத்ரன் திருமலையப்பரா
42. ய தொண்டைமானார் புத்ரர் ராசஸ்ரீ ராசா விசை
43. ய ரெகுனாத பாதர் தொண்டைமானார் அவர்களு
44. க்கு மன்சுபா நடந்த கானாட்டில் செங்கமலம்பிள்ளை

## இரண்டாம் பக்கம்

45. மகன் அடப்பங் கூத்தப்பன் பேருக்கு காசியில் கெங்கா
46. தீரக் கரையில் சோமேசுர கட்டத்தில் தற்ம்ம சாலை ச
47. த்திரங் கட்ட ரூபாயி 1250 குடுத்து கட்டிவைச்சு
48. காசியில் விசுவேசுரர் விசாலாட்சியம்மன் அபிே
49. ஷகம் நைவேதனம் வில்வாற்ச்சனை திருவிளக்கு
50. நித்தப்படி ஒண்ணேகால்ப் பணம் நடந்துவரவும் அ
51. ன்னதான தற்ம்மத்துக்கு நித்தப்படி ஆறுபேருக்கு
52. நடந்து வரவு முதல் ரூபாயி 625 கொடுத்து ச
53. த்திரக் கிறாமங் கொவ்வனூருக்கு உள்க்கடையா
54. ன கூத்தனூரில் பாந்தலைவயல் புதுவயல் நஞ்சை
55. புஞ்சையும் விட்டு தருமபுரந் திருஞானசம்பந்த ே
56. தசிகஃ சீஷரான காசிவாசி சடையப்ப தம்பிரானவ
57. ர்கள் பாரிசமாக தாராபூறுவமாக தாம்பிர ஸாத
58. ணப் பட்டையங் கொடுத்தபடி கூத்தனூர் பாந்தலை
59. வயல் புதுவயலுக் கெல்லையாவது கீழ்பாற்கெ
60. ல்லை வாழைக்குறிச்சி புலவன் புஞ்சை மேலக் கரு
61. வில் வாமன முத்திரைக்கல்லுக்கு மேற்கு, தென்பாற்
62. கெல்லை முனாங்கி புஞ்சை அனாதிகளர் பொன்ன(ம) ராப
63. தி பாதைக்குவடக்கு, மேல்பாற்கெல்லை பூவாலைக்
64. குடி பள்ளன் ஊறணி சனிமூலை வாமனமுத்திை
65. ர கல்லுக்குக் கிழக்கு, வடபாற்கெல்லை மாணிக்க னாச்
66. சியார் ஊறணி பாதியில் படுபாறையில் வாமனமுத்தி
67. ரை உருவுக்கு தெற்க்கு ஆகப் பரினான்கெல்லைக் குள்பட்
68. ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படுகை தோப்புத் து
69. றவு மாவடை மரவடை நிதி நிட்க்ஷேபங் கீழ்னோக்கிய
70. கிணறு மேல்நோக்கிய விருட்சஞ் செல தரு பாஷா
71. ணம் சொற்ன்னாதாயம் வகையறுப்பு பலசுவுந்திரம்
72. வலங்கை இடங்கை எப்பேர்ப்பட்ட வரியும் தாராபூ
73. றுவமாக தாம்புர ஸாஸனப்பட்டையங் கொடுத்தப
74. டியினாலே சந்திராதித்தாளுள்ளவரைக்கு எங்கள் பு
75. த்ர பௌத்ர பாரம்பரையமாக தங்கள் ஸ்ரீஷ பா
76. ரம்பரையமாக தற்ம்மத்தை உத்திரகோத்திரமாக ஆச

77. சந்திரார்க்கஸ்தாயியாக பரிபாலனம் பண்ணிக் கொண்
78. டு வருவார்களாகவும், இந்தத் தற்ம்மத்துக்கு வாக்கு ஸ
79. காயம் சரீர ஸகாயம் அற்த்த ஸகாயம் பண்ணின
80. பேர்கள் காசியிலே கெங்கா தீரத்தில் கோடி சிவலிங்
81. கப் பிறதிஷ்ட்டை பண்ணின பலனையடைவார்களாக
82. வும், யிந்தத் தற்ம்மத்துக்கு யாதாமொருத்தர் அகிதம் பண்ணினபே
83. ர்கள் காசியிலே கெங்கா தீரக்கரையில் கோடி காராம்பசு
84. வைக் கொன்ற தோஷத்திலே போவாராகவும், ஸ்வதத்தாத்வி
85. குணம் புண்யம் பரதத்தாநு பாலநம் பரதத்தாப ஹாரே
86. ன ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேத் : தானபாலன யோர்மத்யே தானா
87. ஸ்ரயோநு பாலநம் தானாத் ஸ்வர்க்கமவாப்நோதி பாலநாத
88. ச்சுதம் பதம் : யிந்த தாம்புர சாதனம் பழணியப்ப வாத்தி
89. யார் குமாரன் ரெகுனாத வாத்தியார் கையி எழுத்து உ

## 16. திருக்கோகர்ணம் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம்,<br>புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர்<br>தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 29–1–1803 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 41 செ.மீ X 26 செ.மீ |

### அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு உச்சிப் பகுதியில் துளையையுடைய பெரிய கைப்பிடியை உடையது. கைப்பிடியில் வரைகோட்டு ஓவியம் எதுவுமில்லை. முதல் பக்க நடுப் பகுதியில் ஸ்ரீராமஜெயம் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. முற்றுப்பெறாத தொண்டைமான் செப்பேடுகளில் இதுவும் ஒன்று.

29–1–1803 அன்று புதுக்கோட்டை மன்னர் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் செங்கமலம்பிள்ளை

மகன் அடப்பங்கூத்தப்பன் பெயரில் திருக்கோகர்ணம் கோகர்ணேசுவரருக்கும் பிரகதம்பாளுக்கும் விழா, பூசைக் கட்டளை, அபிடேகம், நெய்வேத்தியம், அர்ச்சனை, குளித்தளிகை, சித்திரைத் திருவிழா ஐந்தாம் திருநாள் மண்டகப்படி இவைகளுக்காகக் கபிலைவளநாட்டில் நாங்கவர் ஏந்தல் மூலங்குளத்தில் பல பகுதிகளைக் கொடையாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

கொடை அளிக்கப்பட்ட பகுதிகளை எல்லைகளாகக் குண்டாறு கணக்கன்பட்டி அணை, கணக்கன்பட்டி அக்கிரகாரப் புளக்கடைக் கொல்லை, வாய்க்கால், கணக்கன்குளம் வடகரைப் பிறவாகால், நாங்குக் குளவாயில் தண்ணீர்ப்பிடி, கீரி காலாடி சீவிதஅறுதி, சிறுனாங்குளம், தெற்குக் கடக்கோம்பு, சிறுனாங்கு வயல் ஓடை, ஆத்தோடிப்பள்ளம், பிச்சன் அணை, ஆறு, சந்திரன் வயக்கல் அணை, குண்டாறு நத்தம் பண்ணையில் வயிராவி உம்பளம், நெட்டி வேலைக்காரன் உம்பளம், தட்டான்தளை, நத்தம்பண்ணை ஊறணி வடகரை, ராசபாதை, கோயில் தென்னந்தோப்பு, மடப்புறிகால், வரப்பிடாரி செய், தெற்குத்தளை, நாட்டார் உம்பளம், சிறுவயக்கல் வட வரப்பு, சாத்தான் வயக்கல் தெற்குவரப்பு, பட்டார் வயக்கல், கடப்பஞ்செய் ஓடை, கேப்பை அரக்கிவெட்டிச்செய், தீத்திவயக்கல், சந்திர புஷ்கரணி ஊரணி ஆகியன எல்லைகளாகக் கூறப்பட்டுள்ளன.

இப் பகுதியில் வரும் பல வருவாயுடன் திருவப்பூர் மகமை, புதுக்கோட்டை மகமை, ஆலங்குடி வழிச்சாரி உள்பட மகமை, தெற்காட்டூர் உள்பட விராச்சிலை மகமை, புல்வயல் மகமை ஆகியவையும் கொடையாக அளிக்கப்பட்டன.


இச் செப்பேட்டிற்கு 30 வரியளவு மட்டும் பொறிக்கப்பட்டுள்ள மற்றொரு குறைச் செப்பேட்டு நகலும் உள்ளது. இவ்விரு செப்பேடுகளையும் மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

# மூலம்

## முதல் பக்கம்


### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுபரன், அரியராயதள விபாடன்
2. பாஷைக்குத் தப்புவராயர் கண்டன், மூவராயிர கண்டன், கண்டர்
3. கண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநாடு ெ
4. காண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரிகொண்டு திரள்பரி வெட்டு
5. ம் உபையகுலோத்துங்கன், எம்மண்டலங்கொண்டு யீழமுந் திறைெ
6. காண்ட ராசாதிராசன், ராசபரமேசுவரன், ராசமாற்த்தாண்டன், ரா
7. ச நாறண குலதிலகன், ராசகண்டூரவன், ராசாக்கள் தம்பிரான், கே
8. ாட்டத்துமன்னியர் கண்டன், சொரி மன்னியர் சூரியன், கெடிமன்னி
9. யர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்ட
10. லப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரிய
11. ன், படைகண்டு தத்தளிப்பார்கள் கண்டன், பஞ்சபாணாவதாரன், தற்க்
12. காற்கு தற்க்கன், தற்க்க விநோதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பி
13. றசண்டன், ஸகல குணாபிராமன், துங்காபிராமன், துர்க ரேபுந்தன்,
14. சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடை
15. க்குக் கற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்த
16. ர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி நரபதி, நரவேட்டை கண்
17. டருளிய மல்லிகாற்சுனதேவ மகாராயர், பி(ர) புடதேவ மகாராயர், ராமதே
18. வ மகாராயர், கிருஷ்ணதேவ மகாராயர், விருபாட்சிதேவ மகாராயர், திரு
19. மலைதேவ மகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், ஸ்ரீரெங்கதேவ ம



16 திருக்கோகர்ணம் செப்பேடு முதல் பக்கம்

20. காராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணி யருளாநின்ற சாலிவாஹந ச
21. கார்த்தம் 1724 கலியுக சகார்த்தம் 4903 யிதன்மேல்
22. செல்லாநின்ற துந்துபி வருஷம் தையி மீ 18உ அசுபதி நட்சத்திரமும் ஸ்தி
23. ர வாரமும் சுக்குல பக்ஷ சத்தமியும் ஸாத்திநாம யோகமும் கெறசவ
24. ாகறணமுங் கூடின மனுவாதிரத சத்தமி புண்ணிய காலத்திலே
25. ாாசராச வளநாடு ராசேந்திர சோழவளநாடு பன்றிசூழ்நாடு அன்
26. பில் தெற்குலூ ரிலிக்குங் காணியுடைய அரசர்மக்களில் காஸ்யப
27. கோத்ரத்தில் விளங்கும் ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பௌ
28. த்ரந் திருமலையப்பராய தொண்டைமானார் புத்ரந் ராசஸ்ரீ ராசா வி
29. சைய ரெகுனாதராய பாதர் தொண்டைமானாரவர்களுக்கு மன்சுப
30. ா நடந்த கானாட்டில் செங்கமலம் பிள்ளை மகன் அடப்பங் கூத்தப்பன்
31. பேருக்கு திருக்கோகருணம் கோகர்ணேஸ்வர ஸ்வாமிக்கும் அம்மன்
32. பிரஹதம்பாளுக்கு
33. ம் விளா பூசைக் கட்ட
34. ளைக்கும் அபிஷேக
35. நெய்வேத்திய அற்
36. ச்சனைக்கும் குளித்த
37. ளிகைக்கும் சித்திரைத்திருவிளா அஞ்சாந் திருநாள் மண்டகப் படிக்கும்
38. கபிலை வளநாட்டில் நான்கூர் ஏந்தல் மூலங்குளப் பிறமாணப்படி
39. க்கு கீள்பிற மேபாற்க்கெல்லை தெற்கு வடற்கு ஓடிய குண்டாறு கண
40. க்கன்பட்டி அணைக்கு மேற்கு தென்பிறம் வடபாற்கெல்லை கணக்க
41. ன்பட்டி அக்கிறகாரப் புளக்கடைக்கொல்லைக்கி வடக்கு வாய்க்கா
42. லுக்கு வடக்கு கணக்கன்குளம் வடகரை பிறவாகாலுக்கு வடக்கு மே
43. மல்பிறம் கீழ்பாற்கெல்லை நாங்குக் குளவாயில் தண்ணீர்ப்பிடி
44. கீரி காலாடி சீவிதஅறிதிக்கி வடபிறஞ் சிறுனாங்குளந் தெற்குக் க
45. டக்கோம்புக்கு தெற்கு சிறுனாங்குவயல் ஓடைக்கி தெற்கு ஆத்தே
46. தாடிபள்ளத்துக்கு தெற்கு பிச்சன்அணை ஆத்துக்கு தெற்கு யிந்த நா



16. திருக்கோகர்ணம் செப்பேடு இரண்டாம் பக்கம்

47. ன்கெல்லைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் தோப்புத் துற
48. வு மாவடை மரவடையும் நத்தம் பண்ணைக்கு வடக்குக் கீழ்புறம் மேல்
49. பாற்கெல்லை சந்திரன்வயக்கல் அணைக்கு தெற்கு குண்டாறு தெற்
50. கு வடக்கு ஓடிய ஆத்துக்கு மேற்கு வடபாற்கெல்லை தென்புறம் நத்தம்
51. பண்ணையில் வயிராவிஉம்பளம் நெட்டி வேலைகாறன் உம்பள
52. ம் தட்டாடன்தனை நத்தம் பண்ணைஊறணி வடகரை ராசபாதை
53. க்கு மேற்கு கோவில்தென்னந்தோப்பு மடப்புறி கால் வடக்கு வ
54. ரப்பு பிடாரிசெய் தெற்கு தலைக்கு வடக்கு வரப்பு நாட்டார் உம்பளம் சிறு
55. வயக்கல் வடவரப்பு சாத்தன் வயக்கல் தெற்கு வரப்பு பட்டார் வயக்க
56. லுக்கு வடக்கு வரப்பு யிது வடக்கு மேல்பிறங் கீழ்பாற்கெல்லை கட

## இரண்டாம் பக்கம்

57. ப்பஞ்செய் ஓடை கீள்வரப்புக்குக் கிழக்கு கேப்பை அரைக்கி வெட்டி
58. ச்செய் மேல்வரப்புக்குக் கிழக்கு கீழ்தீத்தி வயக்கலுக்கு தெற்கு சந்திர
59. புஷ்க்கரணி ஊறணிக்கி கிழக்கு வடபிறந் தென்பாற் கெல்லை குண்
60. டாத்துக்கு தெற்கு ஆக நான்கெல்லைக்குள்ப்பாட்ட நஞ்சை புஞ்சைக் குழி
61. 10000 யிதில்ச்சேர்ந்த நஞ்சை புஞ்சையும் திட்டுத் திடல் தோப்புத் துற
62. வு நத்தம் படுகை மாவடை மரவடை சொற்ன்னாதாயம் வகையுறுப்பு யி
63. டங்கை வலங்கைவரி பலசுவந்திரம் யிதுமுதலான எப்பேர்ப்பட்ட வ
64. ரியும் கீழ்நோக்கிய கிணறும் மேல்நோக்கிய விருட்சம் ஷெல தரு பாஷ
65. ாணம் நிதி நிட்சேபம் சறுவ மான்னியமாகவும் யிந்த தற்ம்மத்துக்கா
66. க உண்டு பண்ணின திருகப்பூர்மகமையும் புதுக்கோட்டைமகமையும்
67. ஆலங்குடிவழிச்சாரி உள்பட மகமையும் தேற்க்காட்டூர் உள்பட விரா
68. சிலை மகமையும் புல்வாயல் மகமையும் யிந்தப்படிக்குக்.........
69. ..................................

# 17. மலையூர் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 17–8–1803 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 27 செ.மீ X 19 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

இச் செப்பேடு பரந்த அடிப்பகுதியை உடைய கைப்பிடியின் மேல் பகுதியில் துளையுடன் கூடியது. வலக்கையில் கமண்டலமும் இடக்கையில் குடையும் ஏந்திக் கோவணமும் முப்புரி நூலும் கொண்டு நடக்கும் கோலத்தில் வாமனாவதார உருவம் சிறியதாக அழகிய முறையில் வரைகோட்டு ஓவியமாக வரையப்பட்டுள்ளது. முதல் பக்கம் இடையில் ஸ்ரீ ராமஜெயம் எனத் தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டுச் செய்தியை ரகுநாத வாத்தியார் மகன் பழனியப்ப வாத்தியார் எழுதியுள்ள குறிப்பு இறுதியில் காணப்படுகிறது.

ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் கௌண்டின்ய கோத்திரம் ஆபஸ்தம்ப சூத்திரம் யஜுச் சகாத்யாயியான வெங்கடேசய்யங்கார் பேரனும் சேஷாத்ரி அய்யங்கார் மகனும் ஆன தஞ்சாவூர் குப்பனய்யங்காருக்கு வாராப்பூர் நாட்டைச் சேர்ந்த மலையூருக்கு இராமச்சந்திரபுரம் என்று பெயர் மாற்றிச் சர்வமானியமாக 17–8–1803 அன்று அளித்தார் என்ற செய்தி இச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. அமாவாசை நாளன்று இக் கொடை அளிக்கப்பட்டுள்ளது.

மலையூரின் எல்லைகளாகக் கீழ்வயல் தெக்குக் கருவாத்தலை, குடிக்காடு, வாத்தலை, குடிக்காட்டுத் திடல், சிங்கப்புலி வாழைத்தோட்டம், வடக்குக் கரு, வளவித்திடல் ஆவான தம்பிரான் வெட்டிக்காட்டுக் களர்ப்பள்ளம், நகிலானோடை வடக்குத்தாணி, நவ்வல், அரியாண்டி கொடிக்கால்செய் வடக்குவிப்பு, குளகமாத்தி, தேர் மடை, தன்று கரை,

அரியாண்டி வாழைவயல், செக்கடிப் புன்செய், வேப்படிப் புன்செய், புழுக்கடைப் புன்செய், மேல்வாரி, மல்லிகைக் குன்று, பறைய குளம், பஞ்சாங்கம் வரதய்யங்கார் பட்டவிருத்திப் புன்செய், மறவளவு, தட்டான்வெளிப் புன்செய் வடக்குக் கரு, கல்லுத்தோண்டி வடக்குக் கரு, செட்டி ஊரணி, முனியன்கோயில், கொசவன் கூளை, பெருந்துறையான் கட்டையால், பீச்சிப் புன்செய் மேல்கரு, பெருந்துறையான் மேல்கரு, மண்ணுக்கிடாயிவெட்டி வடக்குக்கரு, பொன் விளைஞ்சான் புன்செய் வடக்குக்கரு, மலையூர்க்குளம், அரியாண்டிக்குளம் தண்ணீர்ப்பிடி, வாமன முத்திரைக்கல் ஆகியன கூறப்பட்டுள்ளன.

இக் கொடையைக் காப்பவர்களுக்குக் கிடைக்கும் புண்ணியமும் அழிப்பவர்கள் அடையும் பாவமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.


இறுதிப் பகுதியில் தானத்தைக் காப்பது தொடர்பான இரு வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

## மூலம்

## முதல் பக்கம்


### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மஹாமண்டலேசுபரன், அரியராயதள வி
2. பாடன், பாஷைக்கு தப்புவராயர் கண்டன், மூ
3. வராயர் கண்டன், கண்டர் கண்டன், கண்டைய
4. ப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டனாடு கொ
5. ண்டுகொண்டனாடு கொடாதான், ஒருபரி கொண்டு
6. திரள்பரி வெட்டு முபையகுலோத்துங்கன், எம்மண்
7. டலங் கொண்டு யீழமுந் திறைகொண்ட ராசாதிரா
8. சன், ராசபரமேசுபரன், ராசகெம்பீரன், ராசநாறாய
9. குலதிலகன், ராசகண்டரேவன், ராசாக்கள் தம்பிரா
10. ன். கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னிய
11. சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டமண்
12. டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்ட்ட
13. ாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரிய



17 மலையூர் செப்பேடு முதல் பக்கம்

14. ன், மறுமன்னியர் குடாரி, குறுமன்னியர் கோளரி, து
15. லுக்கர்தள வியாடன், துலுக்கர்மோகந் தவிழ்த்தான்,
16. அரியதள வியாடன், அரியர்மோகந் தவிழ்த்தான், தொ
17. ட்டியர்தள வியாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான்
18. தற்காற்கு தற்கண், தற்க விநோதன், தண்டுவார் மிண்ட
19. ன், சண்டப் பிறசண்டன், ஸகல குணாபிராமன், துங்க
20. ாபிராமன், துர்க ரேபந்தன், சொல்லுக் கரிச்சந்திரன், வி
21. ல்லுக்கு விசையன், பரிக்கு நகுலன், குடைக்குக் கற்னன்,
22. பொறுமைக்கு தற்ம்மர் பூறுவ தெட்சண பச்சிம உ
23. த்தர ஸத்த ஸமுத்திராதிபதி அசுபதி கெசபதி தனப
24. தி நரபதி நரவேட்டை கண்டருளிய மல்லிகொச்சு
25. னதேவ மகாராயர் பிறபுடதேவ மகாராயர் ராமே
26. தவ மகாராயர் கிஷ்ட்டிணதேவ மகாராயர் விருப்ப
27. ாட்சிதேவ
28. மகாராய
29. ர் ஆனகுந்தி
30. தவ மகாராயர் ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறிதி
31. விராச்சியம் பண்ணியருளாநின்ற சாலிவாஹ
32. ந சகாப்தம் 1725 கல்யப்தம் 4904 யிதின்
33. மேல்ச் செல்லாநிண்ட[1] ருத்திரோத்காரி வருஷம் ஆவணி
34. மீ 3உ கிற்ஷ்ணபக்ஷமும் புதவாரமும் அமாவாசை
35. ஸையும் மகநக்ஷத்ரமும் பரிகனாம யோகமும் நாகவா
36. கறணமும் சுடின புண்யதினத்தில் கோகற்ண க்ஷே
37. த்ரத்தில் ராசராச வளநாடு ராசேந்திரசோழ வளநாடு ப
38. ண்டி சூழ்நாடு அன்பில் தெற்குலூரிலிருக்கும் காணி
39. யுடைய அரயற் மக்களில் காஸ்யப கோத்ரத்தில் விளங்
40. கும் ஸ்ரீமது திருமலைராய தொண்டமானாற் பௌத்ரந் தி
41. ருமலையப்ப ராய தொண்டமானாற் புத்ரந் ராசஸ்ரீராசா
42. விசைய ரெகுனாத ராய பாதற் தொண்டமானாற் அவற்
43. கள் கௌண்டிந்ய கோத்ரம் ஆபஸ்தம்ப ஸூத்ரம் யஜுச்ச
44. ாகாத்யாயியான வெங்கடேசய்யங்கா(ர்) பௌத்ர
45. ந் சேஷாத்ரி அய்யாங்காற் புத்ரந் தஞ்ச நகரத்திலிருக்கும்



17 மலையூர் செப்பேடு இரண்டாம் பக்கம்

## இரண்டாம் பக்கம்

46. குப்பனய்யங்காருக்கு வாராப்பூர் நாட்டில் சேந்த ம
47. ளையுருக்கு ப்றதினாமமான ராமச்சந்திரபுரத்தை ஸ
48. ஹிரண்யோதக தாராபூர்வமாக சர்வமாந்யமாக தானம்
49. பண்ணி தாம்பிரசாஸனம் பண்ணிகுடுத்தபடியினா
50. லே யிதுக்கு எல்லை கீள்வயல் தெற்குக் கருவாத்தலை
51. க்கும் குடிக்காட்டு வடக்கு வாத்தலைக்கும் குடிக்காட்
52. டுத் திடலுக்கும் சிங்கப்புலி வாளைத்தோட்டம் வடக்
53. க்கு கருவுக்கு வளவித் திடலுக்கும் ஆவான தம்பிர (ா) ன்
54. வெட்டிக்காட்டுக் களற்பள்ளத்துக்கும் நகிலானோடை
55. வடக்குத் தாணிக்கும் நவ்வலக்கும் அரியாண்டி கொ
56. டிக்கால்ச்செயி வடக்கு வரப்புக்கும் மாவடிச்
57. செயி மாவுக்கும் நாவிதன் ஓடைக்கும் பொங்கல்ச்
58. செயி வடக்கு வரப்பு குளக மாத்திக்கும் யிதுகளுக்கெ
59. ல்லாம் தெற்க்கு தேற்மடை வடக்கு தன்றுகரைக்கி கி
60. ளக்கு அரியாண்டி வாளைவயலுக்கும் மேற்படியூர் செக்க
61. டி புஞ்சைக்கும் கிளக்கு வேப்படி புஞ்சை புளக்கடைப்
62. புஞ்சை மேல்வரிக்கும் மல்லிகை குன்றுக்கும் பல
63. றய குளத்து மேல்க்கரைக்கும் பங்சாங்கம் வறதய்ய
64. ங்காற் பட்டவிற்த்தி புஞ்சைக்கு மறவளவுக்கும் பெரி
65. ய பிஞ்சை கீள்ப்பங்குக்கும் யிதுகளுக்கெல்லாம் மே
66. ற்க்கு தட்டான் வெளி புஞ்சை வடக்குக்கருவுக்கும் க
67. ல்லுத் தோண்டி வடக்குக் கருவுக்கும் செட்டி ஊறணி
68. க்கு முனியன் கோவிலுக்கு ஒருங்கைக்கு கொசவன் கூ
69. ளைக்கு பெருந்துறையான் கட்டையாலுக்கும் யிதுகளு
70. க்கெல்லாம் வடக்கு பீச்சி பிஞ்சை மேல்க்கருவுக்கு
71. பெருந்துறையான் மேல்க்கரைக்கும் மேற்க்கு மண்ணு
72. க் கிடாய வெட்டி வடக்குகருவுக்கு பொன்விளஞ்ச
73. ான் பிஞ்சை வடக்குகருவுக்கு வடக்கு மளையூர்க்கு
74. ளம் அரியாண்டிக் குளம் தண்ணிப் பிடியல் உள்பட
75. வாமன முத்திரைக் கல்லுக்கு உள்ப்பட்ட நாங்கெல்லையும்
76. நஞ்சை புஞ்சை திட்டு திடல் தோப்புத் துரவு மாவடை ம
77. ரவடை யெய்பேற்ப்பட்ட சகல சமுதாயமும் உள்பட நி
78. தி நிக்ஷேப செல தரு பாஷாணாக்ஷிண்யாகெம்மியா ஸி

79. த்த ஸாத்ய மென்னப்பட்ட அஷ்டபோக தேச ஸ்வாம்யங்களும்
80. உள்பட ஸறுவ மானியமாக தானம் பண்ணினபடியினாலே
81. தானாதி வினிமய விக்ரயங்களுக்க யோக்கியமாக
ஆசந்திரார்க்க ஸ்த
82. ாயியாக புத்ர பௌத்ர பாரம்பரியமாக சர்வ மான்னியமாக
தாமே ஆண்
83. டு அனுபவித்துகொள்ளக் கடவராகவும், யிந்தப்படி சம்மதிச்சு
ராமசந்
84. திரபுரத்தை குப்பனய்யங்காருக்கு சர்வமானியமாக தான சாஸன
85. ம் பண்ணிகுடுத்தோம், ராசஶ்ரீ திருமலைய்ப ராய
தொண்டமானாற்
86. புத்ரனான ஶ்ரீ ராசா விசைய ரெகுனாத ராய பாதற்
தொண்டமானாற் அ
87. வர்கள் பண்ணின தற்மத்துக்கு யாதாமொருதர் விகாதம் பண்ணு
88. குறாற்களோ அவர்கள் பிரஹஸ்வாபஹார தோஷத்துக்கு
உள்ப்பட்ட
89. பேற்களாகப் போகக்கடவாராகவும், தாந பாலந யோர்மத்யே
தாநா
90. த் ஸ்ரயோநு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத்
91. அச்சுதம் பதம் : ஏகைவ பஹிநீ லோகே ஸர்வேஷா மேவ பூபுஜ
92. ாம் நகோஜ்யா நகரக் ரஹ்யா வித்ர தத்தா வஸுந்தரா : யிந்தச் சாத
93. ன எழிதிநன்மைக்கி ரெகுனாத வாத்தியார் குமாரன் பழனியப்ப வா
94. த்தியாற் கைய் எழுத்து உ .

## 18. சுப்பிரமணியன் சத்திரம் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 28–11–1803 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 37 செ.மீ X 27.5 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்


இச் செப்பேடு முனையில் துளையையுடைய பெரிய கைப்பிடியைப் பெற்றுள்ளது. வரைகோட்டு ஓவியங்கள் எதுவும் இல்லை. ஒருபக்கம் மட்டுமே எழுதப்பட்டுள்ள இச் செப்பேடு முற்றுப்பெறாமல் உள்ளது. முதல் பக்க நடுவில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. கோடு வரைந்து அதன்மீது நேராக எழுதப்பட்ட அடையாளம் இறுதிப் பகுதியில் நன்கு தெரிகிறது. இச் செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

28-11-1803 அன்று புதுக்கோட்டை மன்னர் ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமான் அவர்கள் தம் சுபாவுக்கு அடங்கிய கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பம் சுப்பிரமணியன் பெயரில் சிறுவாகைநாட்டில் கீரனூருக்குத் தெற்கு, தெப்பக்குளத்துத் தெற்குக் கரையில் இருக்கும் விக்னேசுபரன் கோயிலுக்கு மேற்கு, குளத்தூர் வரதராசப் பெருமாள் கோயிலுக்கும் மங்களாம்பா சமுத்திரம் அக்கிரகாரத்துக்கும் வடக்கு, சேனங்குடி அய்யனார் கோயிலுக்குக் கிழக்கு இதன் மத்தியில் சேது மார்க்கத்திலே அன்னதானச் சத்திரமும் தெப்பக்குளமும் என்றென்றும் நிலைத்திருக்கும்படி ஏற்பாடு செய்த விபரத்தை இச் செப்பேடு கூறுகிறது. சத்திரத்தின் நடைமுறைக்கு அளித்த கொடை குறித்த செய்தி இல்லை.

## மூலம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்பரன், அரியராயதள விபாடன், பா
2. ஷைக்கு தப்புவராயர்கண்டன், மூவராயிர கண்டன், கண்டர் கண்ட
3. ன் கண்டைபப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநாடு கெ
4. ாண்டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெ
5. வட்டு முடைபயகுலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந்திறை



**18 சுப்பிரமணியன் சத்திரச் செப்பேடு**

6. கொண்ட ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசகெம்பீரன், ராசநா
7. ரண குலதிலகன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து
8. மன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் கால
9. ரந்தகன் தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிற
10. திஷ்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், மறுமன்னி
11. யர் கோடாரி, குறுமன்னியர் கோளரி, துலுக்கர்தள விபாடன், துலுக்கர்
12. மோகம் தவிழ்த்தான், அரியதள விபாடன், அரியர் மோகந் தவிழ்த்தான், ஒ
13. தாட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்காற்கு
14. தற்க்கன், தற்க்க வினோதன், தண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்ட
15. ன், ஸகல குணாபிராமன், தூங்காபி ராமன், தூர்க ரேபந்தன், சொல்லு
16. க்கரிச்சந்திரன், வில்லுக்கு விஜையன், பரிக்கு நகுலன், குடைக்கு கற்
17. ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்தர ஸ
18. த்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி, தனபதி நரபதி, நரவேட்டை கண்டரு
19. ளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர், யானை
20. குந்திதேவ மகாராயர், ராமதேவ மகாராயர், நரசிங்கதேவ மகாராயர்,
21. அரிகரதேவ மகாராயர், புசங்கதேவ மகாராயர், திருமலைதேவ மகா
22. ராயர். ஸ்ரீ ரெங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணி யரு
23. ளாநின்ற சாலிவாகந சகார்த்தம் 1725 கலியுக சகார்
24. ப்தம் 4904 யிதன்மேல் செல்லாநின்ற ருதிரோற்க்காரி வருஷம்
25. கார்த்திகை மீ 15 உ ஸோமவாரமும் பௌணமாவாசையும் ரோக
26. ணி நட்செத்திரமும் சிவநாம
27. யோகமும் பத்ரவாகரண
28. மும் கவுடின சுபதினத்தி

29. ல் ராஜராஜ வளநாடு, ராசே
30. ந்திர சோழவளநாடு, பன்றிசூழ்நாடு அன்பில் தெற்குலூரிலிருக்குங் க
31. ாணியுடைய அரசர் மக்களில் காஸ்யப கோத்திரத்தில் விளங்கும் யிந்தி
32. ரகுல வங்கிஷன் அன்பில்னாடன். தென்கோடியாதிபன் வடகரைப்புலி
33. வாகைமாலை புயனான ஶ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பௌத்ரந்
34. திருமலையப்பராய தொண்டைமானார் புத்ரந் ராஜஶ்ரீராஜ விஜை
35. சய ரெகுனாத ராய பாதர் தொண்டைமானாரவர்களுக்கு மன்சுபா நட
36. ந்த கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பஞ் சுப்பிரமணிய
37. ன் பேருக்கு சிறுவாக ளாட்டில் கீறனூரு ஸ்தலத்துக்கு தெற்க்கு தெப்பக்கு
38. ளத்து தெற்க்குகறையில் இருக்கிர விக்கினேசுவரன் கோவிலுக்கு மே
39. ற்க்கு குளத்தூரு வரதராஜபெருமாள் கோவிலுக்கு வடக்கு மங்களாம்பா
40. ஸமுத்திரம் அக்கிறகாறத்துக்கு வடக்கு சேனங்குடி அய்யனாற் கோவிலு
41. க்கு கிழக்கு யிதின்மத்தியிலே சேது மாக்கற்த்திலே யிப்படிக்கொற்ற
42. புண்ணிய பூமியிலே சாசுவதிக அன்னதான தறும்மத்துக்கு சத்திரம்
43. கல்மண்டபம் தெப்பக்குளமும் உண்டு பண்ணிவிச்ச படியனாலே யி
44. ந்த தறும்மத்துக்கு....................

# 19. கீரனூர் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 22–7–1804 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 38 செ.மீ X 28 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு உச்சியில் துளையையுடைய பெரிய (8 செ.மீ உயரம்) கைப்பிடியை உடையது. வரைகோட்டு ஓவியங்கள் எதுவும் இல்லை. புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள தொண்டைமான் குறைச் செப்பேடுகளில் இதுவும் ஒன்று. முதல் பக்கம் மட்டும் முக்கால் அளவுக்கு எழுதப்பட்டுள்ளது. இடையில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கு எழுத்துக்களில் பெரிய அளவில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேடு மைய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் படி எடுக்கப்பட்டுள்ளது.


22-7-1804 அன்று சந்திர கிரகண நாளில் புதுக்கோட்டை அரசர் ராசா விசையரகுநாதராய பாதர் தொண்டைமானார் அவர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட கானாட்டில் செங்கமலம்பிள்ளை மகன் அடப்பம் சுப்பிரமணியன் பெயரில் கீரனூரின் ஒரு பகுதியில் மங்களாம்பா சமுத்திரம் என்ற பெயரில் அக்கிரகாரம் ஒன்றை ஏற்படுத்திக் கற்றறிந்த பல கோத்திரம் சூத்ரத்தைச் சேர்ந்த அந்தணர்களுக்குக் கொடையாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

அக்கிரகாரத்துக்கு எல்லை என்பதுவரை மட்டுமே உள்ளது. எல்லை விபரம் கூறும் பகுதியும் அதற்கு மேற்பட்ட பகுதிகளும் செப்பேட்டில் பொறிக்கப்படவில்லை.

## மூலம்

### ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராய தள விபாடன், பா
2. ஷைக்கு தப்புவராயர் கண்டன். மூவாராயிர கண்டன், கண்டர் கண்
3. டன், கண்டையப் பிறதாபன், கட்டாரிச் சாளுவன், கண்டநாடு கொண்
4. டு கொண்டநாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி
   வெட்டு முனை
5. பய குலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறை கொ
6. ண்ட ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசகெம்பீரன்,
   ராசனாறணை குல



19 கீரனூர் செப்பேடு

7. திலகன், ராசகண்டரேவன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து மன்னிய
8. ர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், செ
9. தாண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சோழ மண்டலப் பிறதிஷ்டாபனாசா
10. ரியன், பாண்டிமண்டலத்து பத்மனாசாரியன், மருமன்னியர் கோடாரி, கு
11. றுமன்னியர் கோளரி, துலுக்கர் தள விபாடன், துலுக்கர் மோகந் தவிழ்
12. த்தான், அரிய தள விபாடன், அரியர் மோகந் தவிழ்த்தான். தொட்டியர் தள
13. விபாடன், தொட்டியர் மோகந் தவிழ்த்தான், தற்க்காற்கு தற்க்கன், தற்க்
14. க விநோதன், தண்டுவார் மிண்டன், கண்டய பிறசண்டன், ஸகல குணா
15. பி ராமன், துங்காபி ராமன், துர்க ரேபுந்தன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லு
16. க்கு விஜையன், பரிக்கு நகுலன், குடைக்கு கற்ன்னன், பொறுமைக்கு தற்ம்மர், பூ
17. றுவ தெட்சண பச்சிம உத்திர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி கெசபதி தனபதி ந
18. ரபதி, நரவேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதே
19. வ மகாராயர், யானைகுந்திதேவ மகாராயர், ராமதேவ மகாராயர், நரசிங்கதேவ
20. மகாராயர், அரிகரதேவ மகாராயர், புசங்கதேவ மகாராயர், திருமலை தேவ மக
21. ாராயர், ஸ்ரீரெங்கதேவ மகாராயர் பிறிதிவி ராச்சியம் பண்ணியருளா நின்

22. ற சாலீவாஹந சகாப்தம் 1726 கலியுக சகாப்தம் 4905
23. யிதன்மேல் செல்லாநின்ற ரத்தாட்சி வருஷம் ஆடி மீ 9 உ
ராசராச வளனாடு
24. ராசேந்திரசோழ வளனாடு பன்றிசூள் நாடு அன்ம்பில்
தெற்குலூரிலிருக்
25. குங்காணி உடைய
26. அரயர் மக்களில்
27. காஷ்யப கோத்ரத்
28. தில் விளங்கும் யி
29. ந்திர குல வங்கிஷ
30. ன் அன்ம்பில்னாடன் தென்கோடி யாதிபன் வடகரைப் புலி வாகை
மாலை
31. புயனான ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பௌத்ரந்
திருமலையப்
32. பராய தொண்டைமானார் புத்ரந் ராஜ ஸ்ரீராஜா விஜய ரெகுனாத
ராய பா
33. தர் தொண்டைமானாரவர்களுக்கு மன்சுபா நடந்த கானாட்டில்
செங்கமல
34. ம் பிள்ளை மகன் அடப்பம் சுப்பிரமணியன் பேருக்கு
நாயித்திகிளமையும் உ
35. த்திராட னக்ஷதிரமும் விஷ்கம்பனாம யோகமும்
பத்ரவாகறணமும் யி
36. துகள் க்ஷடின ஸோமோவராஹ புண்ணிய காலத்தில் கீரநூருக்கு பி
37. றதி நாமமான மங்களாம்பா ஸமுத்ரம் அக்ரஹாரம் பண்ணி ஸஹி
38. ரண்யோதக தாராபூருவமாக னானா கோத்ரத்து னானா ஸுத்ரத்து
ப்ராஹ்ம
39. ணாளுக்கு ஸர்வமாந்யமாக தானம் பண்ணி தாம்பிர சாஸனமும்
பண்
40. ணிகுடுத்தபடியினாலே யிந்த அக்ரஹாரத்துக்கு எல்லை..........

# 20. முதலிப்பட்டிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | தருமபுர ஆதீனம், தருமபுரம், |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 - 1807) |
| காலம் | : | 3-2-1805 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 34 செ.மீ X 26 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு வளைந்த கைப்பிடியையும் அதன் நடுவே துளையையும் உடையது. செப்பேட்டின் முதல் பக்கம் பாதி அளவுக்குத் திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோயில்) தொடர்பான பல வரைகோட்டு உருவங்கள் வரையப்பட்டுள்ளன.

செப்பேட்டின் நடுநாயகமாக முத்துக்குமாரசுவாமி (தலமுருகன்) மயில் வாகனத்துடன் நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் உள்ளார். அவரின் இருபுறமும் வள்ளி, தெய்வானை உள்ளனர். முத்துக்குமாரசுவாமியின் முன்வலக்கை வேலேந்தியுள்ளது. பின்னிருகரங்களில் முத்தலைச் சூலமும், பாசமும் உள்ளன. பின்பு பிரபை காணப்படுகிறது. மலர் வேலைப்பாடுகளும் மண்டபம், தூண்கள், விதானம் ஆகியவற்றின் அழகான காட்சியும் நன்கு காட்டப்பட்டுள்ளது.

வலப்பக்கம் பெரிய அளவில் சிவலிங்கம் வரையப்பட்டுள்ளது. இலிங்கத்தின் பீடமும் ஆவுடையாரும் நன்கு அழகூட்டப்பட்டுள்ளன. இலிங்கத்திற்கு அழகிய மலர்மாலைகள் சாத்தப்பட்டுள்ளன. இலிங்கத்தின்மேல் நாகாபரணம் விளங்குகிறது. மேல் விதானம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இடப்பக்கம் நான்கு திருக்கரங்களுடன் அம்மன் தையல்நாயகி நின்றருளும் திருக்கோலம் உள்ளது. அம்மனின் இரு திருக்கரங்களில் சங்கு சக்கரம் உள்ளது. சிவலிங்கத்திற்கு மேல்பகுதி அழகூட்டப் பட்டிருப்பதுபோல அம்மனுக்கு மேலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று தெய்வீகத் திருக்கோலங்களும் தனித் தனி சந்நிதிகளில் இருப்பனவாகக் காட்டப்பட்டுள்ளன. இடையிடையே போதிகைகளுடன் அழகிய தூண்கள் உள்ளன.

மேலே உள்ள மூன்று சந்நிதிகள் போலக் கீழ்ப்பகுதியில் அழகான நான்கு சந்நிதிகள் உள்ளன. முதலில் விநாயகப் பெருமான் நின்றநிலையில் உள்ளார். அடுத்து வில்லுடனும் அம்பராத் தூணியுடனும் இராமரும் இலட்சுமணரும் உள்ளனர். இருவரும் சிவபெருமானையும் முத்துக்குமார சுவாமியையும் வணங்கும் நிலையில் உள்ளனர். அடுத்து ஜடாயு, வேதம் இருவரும் வணங்கிய நிலையில் உள்ளனர். இறுதியில் சிவபெருமானே வணங்கும் நிலையில் உள்ளார். சிவபெருமான் அருகில் சூரியனும் செவ்வாயும் நின்று வணங்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளனர். வேதம் என்பதைக் குறிக்கும் வகையில் ஓலைச்சுவடியும் சூரியன் என்பதைக் குறிக்கக் கீரிடத்தின்மேல் வட்டவடிவும் காட்டப்பட்டுள்ளது.

முதல் பக்கம் ஸ்ரீ ராமஜெயம் என்று பெரிய எழுத்துக்களில் தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டுச் செய்தியைப் பழனியப்ப வாத்தியார் மகன் வடமலை வாத்தியார் என்பவர் எழுதியுள்ளார். இச் செப்பேட்டை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

இத் தலத்தை வணங்கிப் பேறு பெற்றவர்களைப் பற்றிக் குறிக்கும் வடமொழிச் சுலோகம் ஒன்று முதலில் எழுதப்பட்டுள்ளது. பிற்காலச் செப்பேடுகளில் காணும் வழக்கமான மெய்க் கீர்த்திகளுக்குப் பின்னர் விசையநகர அரசர்கள் சிலர் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

3-2-1805 அன்று ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானாரவர்கள் வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீவைத்தியநாத சுவாமி, தையல்நாயகி அம்மன் ஆகியோரின் காலை சந்திக் கட்டளைக்கும் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கார்த்திகை நட்சத்திர மண்டகப்

படிக்கும் தர்மபுரம் ஆதீனம் திருஞான சம்பந்த தேசிகர் சந்நதியில் கட்டளை அட்சயலிங்கத் தம்பிரான் அவர்கள் வசம் கிளாங்காடு மகாணச் சேர்க்கையில் உள்ள முதலிப்பட்டி என்ற ஊருக்கு வைத்தியநாதபுரம் என்று பெயர் மாற்றம் செய்து சர்வமானியமாக அளித்ததை இச் செப்பேடு கூறுகிறது.

முதலிப்பட்டிக்கு எல்லைகளாகக் கோனூர் கருக்காடிபத்தை நிலம், வடக்குளூர் செங்கமேடு நிலம், கல்லுமடை நிலம், ஒடப்பமனை ஆறு, தாளையடி, கிளாங்காடு உள்ளூர் மேட்டுப் புன்செய், சதுரப் பனையடி வெட்டிக்காட்டு ஆறு, கோனூர் ஆதனக்கோட்டை எல்லை ஆகியன கூறப்பட்டுள்ளன.

## மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. உ ஸ்ரீராம சௌமித்ர ஜடாயு வேத ஷடாந நாதித்ய கூஜார்ச்சிதா
2. யா ஸ்ரீநீலகண்டாய தயாமயாய ஸ்ரீவைத்யநாதாய நமஸ்ஸிவாய உ
3. உ ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராயதள விபாடன், பாஷைக்கு தப்
4. புவராயர் கண்டன், மூவரா
5. ாயிர கண்டன், கண்டர் க
6. ண்டன், கண்டையப் பிரதா
7. பன், கட்டாரிச் சாளுவன்,
8. கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், ஒருபரி கொண்டு திரள்ப
9. ரி வெட்டு முடையகுலோத்துங்கன், எம்மண்டலங் கொண்டு யீழமுந் திறைகெ
10. ாண்ட ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசமாற்த்தாண்டன், ராச கண்ஊரவ
11. ன், ராசாக்கள் தம்பிர(ா)ன், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரி மன்னியர் சூரி

12. யன், கெடி மன்னியர் காலாந்தகன் தொண்டமண்டல
ஸ்தாபனாசாரியன், சோழ
13. மண்டல பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிமண்டலத்து
பத்மனாசாரியன்,பஸ
14. டகண்டு தத்தளிப்பார்கள் கண்டன், பஞ்சபாணாவதாரன்,
துலுக்கர்தள விபாட
15. ன், துலுக்கர்மோகந் தவிழ்த்தான், ஆரியர்தள விபாடன்,
ஆரியர்மோகந் தவிழ்
16. த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர்மோகந்
தவிழ்த்தான், ஒட்டி
17. யர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்காற்கு
தற்க்கன், தற்க்க
18. வினோதன், தண்டுவார் மிண்டன், சண்டப் பிறசண்டன்,
ஸகல குணாபிரா
19. மன், தூங்காபிராமன், தூர்க ரேபந்தன், சொல்லுக்
கரிச்சந்திரன்,வில்லுக்கு வி
20. சையன், பரிக்கு நகுலன், குடைக்கு கற்ன்னன்,
பொறுமைக்கு தற்ம்மர், பூறு
21. வ தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி, அசுபதி
கெசபதி தனபதி நரபதி, ந
22. ர வேட்டை கண்டருளிய மல்லிகார்ச்சுனதேவ மகாராயர்,
பிறபுடதேவ ம
23. காராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், அரிகரதேவ
மகாராயர், நரசிங்கதே
24. வ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், ராமதேவ
மகாராயர், புசங்கதேவ
25. மகாராயர், திருமலை தேவ மகாராயர், ஸ்ரீரெங்கதேவ
மகாராயர் பிறுதி
26. வி ராச்சியம் பண்ணி யருளாநின்ற சாலிவாகன ஸ்காா்த்தம் 172
27. 6 கலியுக சகார்த்தம் 4905 யிதின்மேல் செல்லாநின்ற

## இரண்டாம் பக்கம்

28. ரத்தாட்சி வருஷம் தையி மீ 24 உ சதுற்த்தியும் சுக்கில பஷ்ச
29. மும் ஆதித்தவாரமும் உத்திராட்டாதி நஷ்செத்திரமும் சிவனாம
30. யோகமும் வணிக கறணமும் சுவுப சுபதினத்தில் ராசராச
31. வளநாடு ராசேந்திர சோழவளநாடு பன்றிசூழ் நாடு அன்ம்பில்
32. தெற்குலூரிலிருக்கும்ங் காணியுடைய அரசமக்களில் காசி
33. ப கோத்திரத்தில் விளங்கும் யிந்திரகுல வங்குஷம் அன்ம்பி
34. ல்னாடன் தென்கோடி யாதிபன் வடரைப்புலி வாகைமா
35. லை புயனான ஸ்ரீமது திருமலை ராய தொண்டைமானார் பௌ
36. த்ரந் திருமலையப்ப ராய தொண்டைமானார் புத்ரந் ஸ்ரீரா
37. சா விசைய ரெகுனாதராய பாதற்த் தொண்டைமானாரவற்கள் வயித்
38. தீசுரன்கோவில் ஸ்ரீ வையித்தினாத சுவாமிக்கும் தையல்னாயகி
39. அம்மனுக்கும் காலசந்தி கட்டளைக்கும் ஸ்ரீமுத்துக் குமார சுவா
40. மிகாற்த்திகை நட்சத்திர மண்டகபடிக்கும் பங்குனி உத்திரத்தில் தீற்
41. த்தவாரி மண்டகபடிக்கும் வயித்தீசுவரன் கோவில் தற்மபுரம் ஆ
42. தீனம் திருஞானசம்பந்த தேசிகற் சந்நிதியில் கட்டளை அட்சயலிங்க த
43. ம்பிரானவாள் பாரிசமாயி வயித்தீசுவரன் கோவில் வயித்தினாதசுவ
44. ாமி கட்டளைக்கி தாம்பிர சாதன பட்டையங் கொடுத்தபடி கிளாங்க
45. ாடு ம (ா) காணச் சேற்கையில் முதலிபட்டிக்கி பிறிதினாமமான வயித்
46. தினாதபுரம் தாராபூறுவமாக சறுவமானியமாக தாம்பிர பட்டையங்
47. கொடுத்தபடி முதலிபட்டிக்கிப் பிறிதினாமமான வயித்தினாதபுரம் எல்
48. லையாவது கீள்பாற்கெல்லை கோனூற் கறுக்காடியத்தை நில
49. த்துக்கு மேற்கு தென்பாற் கெல்லை வடக்குளூற் செங்கமோ
50. டு நிலத்துக்கும் கல்லூமடை நிலம் ஒடப்பாமனை ஆத்துக்கு வடக்கு தாளையடி உள்
51. பட மேல்பாற்க்கெல்லை கிளாங்காடு உள்ளூற் மோட்டுப் புஞ்சை சதிறப் பனைய
52. டி வெட்டிக்காட்டு ஆத்துக்கு கிழக்கு வடபாற்க்கெல்லை கோனூற் ஆதன

53. கோட்டையெல்லைக்குத் தெற்கு, யிந்தப் பரினாங்கெல்லை
வானமன மு
54. த்திரைக் கல்லுக்கு உள்ப்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம்
படுகை
55. க தோப்புத் துறவு மாவடை மறவடை சொற்ன்னாதாயம்
வகையுறுப்பு
56. யெடங்கையி வலங்கையி பலசுவந்திரம் யிதுமுதலாகிய
யெப்பேற்ப்ப
57. ட்ட வரியும் கீள்னோக்கிய கிணறும் மேல்நோக்கிய விறுட்சமும்
செல த
58. ரு பாஷாணம் நிதி நிட்சேபம் சறுவ மான்னியமாக தாம்பர சாதன
59. பட்டையம் கொடுத்தபடியினாலே சந்திராதித்தியாள் உள்ளவரைக்
60. கும் கல்லும்ங் காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரைக்கும் யெங்
61. கள் புத்திர பவுத்திர பாரம்பறியமாகவும் தங்கள் சந்ததி பாரம்பறி
62. யமாகவும் அனுபவித்துக்கொண்டு தற்ம்மத்தை
உத்திறோத்திரம
63. ாக நடத்திவச்சுக்கொண்டு சுகத்துலே யிருக்கக்கடவாறாகவும். இ
64. ந்த தற்ம்மத்துக்கு வ(ா)க்கு சகாயம் சரிர சகாயம் அர்த்த சகாயம்
பண்
65. ணின பேர்கள் காசியிலே கெங்கைக் கரையிலே கோடி சிவலிங்க
66. பிறிதிஷ்ட்டை பண்ணின பலனை அடைவார்களாகவும், யிந்த
தற்ம்
67. மத்துக்கு அகிதம் பண்ணின பேற்கள் கெங்கைக் கரையிலே கோடி
68. காறாம்பசுவை கொன்ன தோஷத்திலே போவார்களாகவும்,
69. யிந்த சாஸனம் எழுதினது பழனியப்ப வாத்தியார் குமாரன்
வடமலை
70. வாத்தியார் கையிளெழுத்து.

## 21. திருச்சிராப்பள்ளிச் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | முதலியார் எஸ்டேட், திருச்சிராப்பள்ளி |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| காலம் | : | 3–12–1805 |
| மொழி | : | தமிழ் |
| அளவு | : | 37.5 செ.மீ X 21 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேட்டில் கைப்பிடியின் முன்பக்கத்தில் மேல் பகுதியில் சந்திர சூரியன் வரையப்பட்டுள்ளது. அதன்கீழ் ஒரு கையில் குடையும் மறு கையில் கமண்டலமும் தாங்கிய வாமனாவதார உருவம் வரைகோட்டு ஓவியத்தில் வரையப்பட்டுள்ளது.

முதல் பக்கம் நடுப்பகுதியில் ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கு எழுத்தில் பெரிய அளவில் எழுதப்பட்டுள்ளது. இச் செப்பேட்டைப் பழனியப்ப வாத்தியார் மகன் வடமலை வாத்தியார் எழுதியுள்ளார். இச் செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

இச் செப்பேட்டைக் கொண்டும் பிற புதுக்கோட்டைச் செப்பேடுகளைக் கொண்டும் இச் செப்பேடு எழுதியவரின் கொடிவழியை எழுதலாம்

பழனியப்ப வாத்தியார்
↓
ரகுநாத வாத்தியார்
↓
பழனியப்ப வாத்தியார்
↓
ரகுநாத வாத்தியார் | வடமலை வாத்தியார்

எல்லாச் செப்பேடுகள் போலவே அரசர்களைப் பற்றிய புகழ் மொழிகளும் சில விசயநகர அரசர்கள் பெயரும் கூறப்பட்டுள்ளன. புதுக்கோட்டைத் தொண்டைமான் வம்சப் புகழ்மொழிகளும் சில கூறப்பட்டுள்ளன.

3-12-1805 அன்று ராசா விசயரகுநாதராய பாதர் தொண்டைமான் அவர்கள் (1789-1807) காலத்தில் தேவனாம்பட்டணம் இருசப்ப முதலியார் பேரனும் கஞ்சமலை முதலியார் அவர்கள் மகனுமாகிய இருசப்ப முதலியார் என்பவர் திருசுரபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) பாலக்கரைக்குத் தென் பக்கம் இருசப்ப முதலியார் சத்திரம் என்ற பெயரில் பிராமணாள் போசனம் முதலாகிய தர்மத்துக்கு அளித்த கொடையை இச் செப்பேடு கூறுகிறது.

இது தனியார் அளித்த கொடை கூறும் செப்பேடாகும். ஓரண்டக்கொடி என்ற ஊர் இருசப்ப முதலியார் அவர்களால் சத்திரத்துக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது. அவ்வூர் கிழக்கே மண்டையூர் எல்லையையும் தெற்கே அவ்வையார்பட்டி தாயுமான ஊரணி தென்கரையையும் மேற்கே செங்களக்கொடி எல்லையையும் வடக்கே அரசு வயலையும் கொண்டிருந்தது.

ஓரண்டக்கொடிக் கிராமத்தைச் சேர்ந்த ஓரண்டக்கொடிக் குளமும் கொடையாக அளிக்கப்பட்டது. ஓரண்டக்குளத்தில் நன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 4400 குழி செய் 16 நிலமும் புன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 32280 குழி விரையடி 64 கலம் 4 மரக்கால் 1 ஆழாக்கு நிலமும்

சங்குளாகுடி எல்லையில் வாவு புஞ்சையில் 16 அடிக்கோலால் அளந்து 5525 குழி விரையடி 104 கலம் நிலமும்

அவ்வையார்பட்டியில் (புன்செயில்) 16 அடிக்கோலால் அளந்து 1553 குழி விரையடி 21 கலம் 1 மரக்கால் நிலமும்

மண்டையூர் அரசு வயலில் நன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 3600 குழி செய் 9ம் ஓரண்டக்கொடியில் நன்செயில் 16 அடிகோலால் அளந்து 10000 குழி செய் 25ம், புன்செயில் 16 அடிக்கோலால் அளந்து 48358 குழி விரையடி 96 கலம் 5 மரக்கால் 1 ஆழாக்கு நிலமும் வாமன முத்திரைக்கல் நட்டுக் கொடையாக அளிக்கப்பட்டது.

இவ்வெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், திட்டு, திடல், நத்தம், படுகை, தோப்பு, துரவு, மாவடை, மரவடை, சொர்ண ஆதாயம், வகையிருப்பு, இடங்கை வலங்கை, பல சுதந்திரம் முதலான எல்லா வரியும் கீழ்நோக்கிய கிணறும் மேல்நோக்கிய விருட்சமும் சல தரு பாஷாணம் நிதி நிக்ஷேபமும் சர்வமானியமாகச் சந்திர சூரியர் உள்ளவரை அனுபவிக்கக் கொடையாக அளிக்கப்பட்டது.

இதைக் காப்போர் பெறும் புண்ணியமும் அழிப்போர் அடையும் பாவமும் இறுதியில் கூறப்பட்டுள்ளது.

## மூலம்

## முதல் பக்கம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன், அரியராயதள விபாட
2. ன், பாஷைக்கு தப்புவராயர கண்டன், மூவாராயிர கண்ட
3. ன், கண்டரகண்டன், கண்டையப்பிறதாபன், கட்டாரிச்
4. சாளுவன், கண்டநாடு, கொண்டு கொண்டநாடு கொடா
5. தான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முடையகுலோத்து
6. ங்கன், எம்மண்டலங் கொண்டு யீளமுந் திறைகொண்ட
7. ராசாதிராசன், ராசபரமேஸ்வரன், ராசமாற்த்தாண்ட
8. ன், ராசகண்டீரவன், ராசாக்கள் தம்பிரான், கோட்டத்து
9. மன்னியர் கண்டன், சொரிமன்னியர் சூரியன், கெடிமன்னி
10. யர் காலாந்தகன், தொண்டமண்டல ஸ்தாபனாசாரியன், சே
11. சாழமண்டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன், பாண்டிம
12. ண்டலத்து பத்மனாசாரியன், படைகண்டு தத்தளிப்பார்
13. கள் கண்டன், பஞ்சபாணாவதாரன், துலுக்கர்தள விப
14. ாடன் துலுக்கர்மோகந் தவிழ்த்தான், அரியர்தள விபாடன்,
15. அரியர்மோகந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தெ
16. ாட்டியர்மோகந் தவிழ்த்தான், ஒட்டியர்தள விபாடன், ஒ
17. ட்டியர்மோகந் தவிழ்த்தான், தற்க்காற்க்கு தற்க்கன், தற்
18. க்கவினோதன், தண்டுவார்மிண்டன், சண்டப்பிறசண்
19. டன், ஸகல குணாபிராமன், துங்காபிராமன், துர்கரேபந்த
20. ன், சொல்லுக் கரிச்சந்திரன், வில்லுக்கு விசையன், பரிக்கு

21. நகுலன், குடைக்கு கற்னன், பொருமைக்கு தற்ம்மர், பூறுவ
22. தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்திராதிபதி அசுபதி செ
23. கசபதி தனபதி நரபதி நரவேட்டை கண்டருளிய மல்
24. லிகாற்ச்சுன
25. தேவ மகாரா
26. யர், பிறபுடதே
27. தவ மகாராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், விருப்பாச்
28. சிதேவ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர், ராமதேவ மக
29. ாராயர், அரிகரதேவ மகாராயர், நரசிங்கதேவ மகாராய
30. ர், புசங்கதேவ மகாராயர். திருமலைதேவ மகாராயர், ஸ்ரீரெ
31. ங்கதேவ மகாராயர் பிறுதிராச்சியம் பண்ணியருளாநி
32. ன்ற சாலிவாஹன சாகாத்தம் 1727 கலியுக சாக
33. ாத்தம் 4906 இதின்மேல் செல்லாநின்ற குரோ
34. தன வருஷம் காத்திகை மீ 20 உ மங்களவாரமும் துவாதெ
35. சியும் அசுபதி நட்செத்திரமும் வரியாநாம யோகமும் பவ
36. கரணமும் ராகத வேளையில் யிப்படிக்கொத்த சுபதினத்தி
37. ல் ராசராசவளநாடு, ஸ்ரீ ராசேந்திரசோழவளநாடு பண்
38. குளநாடு அன்ம்பில் தெற்குளூரிலிருக்கும் காணியுடை
39. டய அரசர் மக்களில் காசிப கோத்திரத்தில் விளங்கு
40. ம் இந்திரகுல வங்கிஷன் அன்ம்பில்நாடன் தென்ங்
41. கோடியாதிபன் வடகரைப்புலி வாகைமாலை புயனா
42. ன ஸ்ரீமது திருமலைராய தொண்டைமானார் பவுத்தி
43. ர திருமலைய்பராய தொண்டமானார் புத்திர ராசஸ்ரீ ர
44. ாசா விசய ரெகுநாதராய பாதர் தொண்டமானவா
45. வர்கள் தேவணாம்பட்டணம் இருசப்பமுதலியார் பவு
46. த்திர கஞ்சமலை முதலியார் புத்திர இருசப்பமுதலியார்
47. திருசுரபுரம் பாலக்கரைக்கி தெட்சண பாரிசம் மேற்படி
48. யார் சத்திரம் தற்மம் பிராமணபோசன முதலாகிய தற்ம
49. த்துக்கு தாம்பிரசாதன பட்டையம் பண்ணிகொடுத்
50. தபடி, ஓரண்டக்கொடி கிராமம் மூலமாக தாராபூருவமாக ச
51. ருவமானியமாக தாம்பிரசாதன பட்டையங் கொடுத்த
52. படி ஓரண்டக்கொடிக்கி யெல்லையாவது கீள்பாற்க்கெல்லை
53. யாவது மண்டையூர் யெல்லைக்கி மேற்க்கு தென்ம்பாற்க்கெ
54. ல்லையாவது அவயாற்பட்டி தாயுமானஊரணி தெ
55. ங்கரைக்கி வடக்கு மேல்பாற்க்கெல்லையாவது செங்க

56. ளக்கொடி யெல்லைக்கி கிளக்கு வடபார்க்கெல்லையாவது
57. அரசுவயலுக்கு தெற்க்கு இந்த பரிநாங்கெல்லைக்கு உள்
58. ப்பட்டஓரண்டக்கொடி கிராமத்தைச் சேந்தது ஓரண்டக்குளம்
59. ஒன்னுக்கு நஞ்சை 16 அடிக்கோலால் குளி 4400 க்கு
60. செயி 16 புஞ்சை 16 அடிக்கோலால் குளி 322
61. 80க்கு விரையடி 64 கலம், 4 மரக்கால் 1 ஆழாக்கு மேற்படி பிரகாரமத்தில் (பே) சத்
62. துக்குடுத்தது சங்குளாகுடியெல்லையில் வாவு புஞ்சை
63. சயில் 16 அடிக்கோலால் குளி 5525க்கு விரை
64. ரயடிய் 104ம், மேற்படி அவயார்ப்பட்டியில்ச் சேத்துக் குடுத்தது
65. 16 அடிக்கோலால் குளிய் 1553க்கு விரை அடி 21
66. கலம் 1 மரக்கால், மேற்படி மண்டைஊர் அரசுவயலில் விட்டுக் கொடுத்தது நஞ்
67. சை 16 அடிக்கோலால் குளி 3600 க்கு செயி 9, ஓர
68. ண்டக்கொடியில் சேத்தது 16 அடிக்கோலால் குளி 10000 க்கு
69. செயி 25 புஞ்சை 16 அடிக்கோலால் குளி 483
70. 58க்கு விரையடி 96 கலம் 5 மரக்கால் 1 ஆழாக்கு இந்த பரிணாங்கெல்லை வாமன
71. முத்திரைகல்லுக் குள்பட்ட நஞ்சை புஞ்சை திட்டுத் திடல் நத்தம் படு
72. கை தோப்புத் துரவு மாவடை மறவடை சொற்ன்னஆதா
73. யம் வகையிருப்பு இடங்கை வலங்கை பலசுவந்திரம் இ
74. துமுதலான எப்பேர்ப்பட்டவரியும் கீழ்நோக்கிய கிண
75. ரும் மேல்நோக்கிய விருஷ்ஷமும் சல தரு பாஷாணம் நி
76. தி நிஷ்ஷேப சருவமானியமாக தாராபூருவமாக தாம்பர ச
77. ாதன பட்டையம் குடுத்தபடியினாலே சந்திராதித்தாள் உள்
78. ளவரைக்கும் எங்கள் புத்திர பௌத்திர பாரம்பரையமாகவு
79. ம் தங்கள் சந்ததி பாரம்பரயமாகவும் அநுபவித்துக்கொண்டு
80. தர்மத்தை உத்திரகோத்திரமாக நடத்திவச்சிக்கொண்டு சுகத்திலே
81. இருக்கக் கடவார்களாகவும். இந்த தர்மத்துக்கு வாக்குசகாயம் சரீர
82. சகாய அர்த்தசகாயம் பண்ணினபேர்கள் காசியிலே கங்கை
83. க் கரையலே கோடி சிவலிங்கப்பிரதிஷ்ட்டை பண்ணின பல
84. னையடைவார்களாகவும், இந்த தர்ம்மத்துக்கு அகிதம் பண்ணி
85. னபேர்கள் கெங்கைக்கரையிலே அநேகம் கோஅத்தி பண்
86. ணின தோஷத்திலே போவார்களாகவும். இந்த பட்டையம் எ
87. ளுதினது பளணிப்பவாத்தியார் குமாரன் வடமலை வா
88. த்தியாரர் கையிளளுத்து.

# 22. தூவூர் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை |
| அரசர் | : | ராசா விசைய ரகுநாதராய பாதர் தொண்டைமானார் (1789 – 1807) |
| மொழி | : | தமிழ் (கிரந்தச் சுலோகங்களுடன்) |
| அளவு | : | 40 செ.மீ X 22.5 செ.மீ |

## அமைப்பும் செய்தியும்

இச் செப்பேடு ஒரு செப்பேட்டின் பிற்பகுதியாகும். முற்பகுதியில் அரசர் பெயரும் சத்திரம் கட்டி வைத்த செய்தியும் இருந்திருக்க வேண்டும். அப் பகுதி கிடைக்கவில்லை. கைப்பிடியில் துளைக்கு மேல்பகுதி உடைந்துள்ளது. வாமனவாவதார உருவத்தின் கழுத்தின் கீழ்ப் பகுதி மட்டும் உள்ளது. பிள்ளையார் சுழியுடன் இப் பகுதி தொடங்குகிறது.

ஏனைய அமைப்புக்களை வைத்தும் கைப்பிடி வரைகோட்டு ஓவியத்தைக்கொண்டும் இச் செப்பேடு ராசா விசயரகுநாதராய பாதர் தொண்டைமானார் காலத்தைச் சேர்ந்தது என்று கொள்ளப்பட்டது. இச் செப்பேட்டை மைய அரசு தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் படி எடுத்துள்ளனர்.

சத்திரத்திற்கு அளிக்கப்பட்ட 50 உருப்படிகளில் 35 மட்டும் இப் பகுதியில் உள்ளது. ஏனைய 15 உருப்படிகள் முன் பகுதியில் இருக்க வேண்டும்.

நூறு பசுமாடுகளும் முன்னூறு ஆடுகளும் சத்திரத்திற்குக் கொடுக்கப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது. நார்த்தாமலைச் சீமையிலும் புதுக்கோட்டைச் சீமையிலும் சூரிய கிரகணக் காலத்தில் தூவூரில் அய்யவாராய்யன் அவர்கள் கையில் குறுணி நிலம் கொடையாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. கடம்பவன ஈசுவரர்


பெரியநாயகியம்மன், மாதுருபூதேசுவரர், அரங்கநாயகர், வரதராசப்பெருமாள் இவர்கள் சாட்சியாகக் கொடை என்றென்றும் நின்று நிலைக்கவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு உள்ளூர் தெய்வங்கள் சாட்சியாகக் கொடையளித்துப் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இறுதிப் பகுதியில் கொடைகளைக் காப்பதால் வரும் புண்ணியத்தைக் கூறும் வடமொழிச் சுலோகங்கள் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன.

## மூலம்

### ஸ்ரீ ராமஜெயம்

1. உ னச்சருவம் னாலு, பித்தளைச்சருவம்
2. ஒண்ணு, செப்புச்சருவம் ரெண்டு, பெ
3. ரிய வெங்கலப்பானை ரெண்டு, இட்டு
4. வட்டி னாலு, பித்தளைச்சொம்பு அஞ்சு,
5. செப்புச்சொம்பு அஞ்சு, கறண்டி நாலு, செப்
6. புக்கொடம் னாலு, சந்தணக்கிண்ணி
7. கமலம் விளக்குத்தாளி உருப்படி னா
8. லு ஆக உருப்படி 50க்கு படி
9. பசுமாடு னூறு ஆடு முன்னூறு இந்தபடிக்கு
10. கல்லும் காவேரியும் புல்லும் பூமியும்
11. யுள்ளாந மட்டுக்கும் னாறுத்தாமலைச் சீமை செ
12. யிக் குறுணியும் புதுக்கோட்டை சீமைக்கு
13. றுணியும் வீர்யோபராக புண்ணிய காலத்
14. திலே தூவூரில் அய்யவாரய்யன் கய்யிலே
15. தாராபூருவமாக கடம்பவன யீசுரரும் பெரியனா
16. யகி அம்மனும் மாதுருபூதேசுரர் ரெங்கனாயகர்
17. வரதராசப் பெருமாள் யிவர்கள் சாச்சியாக யிந்த
18. தறுமத்தை சந்திரா சூரியாள் யுள்ளமட்டும் ப
19. ரிபாலனம் பண்ணிக்கொண்டு வர சொல்
20. லி குடுத்தோம் யிந்த தற்மத்துக்கு யாதாமொருவர்



22 தூவூர் செப்பேடு

21. விகாதம் பண்ணுறார்களோ அவர்கள் காசிலே
22. கெங்கை கரயிலே காராம் பசுவை கொண்
23. ண தோசத்திலே போககடவோராகவும் யிந்
24. த தற்மம் யாதாமொருதர் பரிபாலநும் பண்
25. ணுறாகளோ அவர்களுக்கு அசுவமேத யாக ப
26. லமும் கெங்காஸ்நாந பலமும் அடயகடவோரா
27. கவும் தாந பாலந யோமயே தாநா ஸ்ரயோ
28. நு பாலநம் தாநாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலா
29. நாதச்சுதம் பதம் : ஸ்வதத்தாவி குணம் புண்யம்
30. பரதத்தாநு பாலநம் பரதத்தபாப ஹறேண
31. ஸ்வதத்தம் நிஷ்பலம் பவேது. எ கைவ பஹிநி 6
32. லாகே சர்வேஷா மேவ பூவுஜாம் நகோஜ்யா நக
33. ர ராஹ்யா விப்ர தத்தா வஸ‌ுந்தரா.

# 23. சிங்கத்தாகுறிச்சிச் செப்பேடு

**இருக்கும் இடம்** : புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மண்டையூர் சிங்கத்தாகுறிச்சி சஞ்சீவிராயர் கோயில்

**அரசர்** : விசைய ரகுநாத ராயத் தொண்டைமானார்

**காலம்** : 1804, ரத்தாட்சி ஐப்பசி, 8–ஆம் தேதி

**மொழி** : தமிழ்

## அமைப்பும் செய்தியும்

விசயநகர அரசர் சிறப்புக்களுடன் புதுக்கோட்டை மன்னர் பெருமைகளும் கூறப்பட்டுள்ள வழக்கமான செப்பேடுபோல் இது அமைந்துள்ளது. சஞ்சீவிராயர் சுவாமிகோயில் நித்தப்படிக் கட்டளைக்கும் திருப்பணி, அபிசேகம், நெய்வேத்தியம், அன்னதானம் ஆகியவற்றிற்கும் குளத்தூர்ச் சீமை ராசிபுரம் சேர்க்கையில் உள்ள பீடம்பட்டி என்னும் ஊர் சருவமானியமாக அளிக்கப்பட்ட விபரத்தை இந்தச் செப்பேடு கூறுகிறது.

கொடையளிக்கப்பட்ட ஊருக்கு மிகவும் விரிவாக எல்லைகள் கூறப்படுகின்றன. இந்தச் செப்பேட்டை எழுதியவர் பழனியப்ப வாத்தியார்

மகன் வடமலை வாத்தியார் என்பவர் ஆவார். இச் செப்பேட்டை இரா. இராமமூர்த்தி, மேலப்பனையூர் கரு. இராசேந்திரன் ஆகியோர் படி எடுத்துத் தமிழகத் தொல்லியல் கழக ஆவணம் இதழ் மூன்றில் பதிப்பித்துள்ளனர். (பக். 48-51; 1993 சூலை)

## மூலம்

### முதல் பக்கம்

#### ஸ்ரீ ராமஜெயம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்ட லேசுவரன், அரியராய தளவிபாட
2. ன், பாஷைக்கு தப்புவராயர் கண்டன், மூவராயர் கண்டன்,
3. கண்டர் கண்டன் கண்டைய பிறதாபன், கட்டாரிச் சாளுவ
4. ன், கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், ஒருபரி கொ
5. ண்டு திரள்பரி வெட்டு முடைய குலோத்துங்கன், எம்மண்ட
6. லங்கொண்டு யீளமுந் திறைகொண்ட ராசாதிராசன், ராசபர
7. மேசுவரன், ராசமாத்தாண்டன், ராசகண்டீரவன், ராசாக்கள்
8. தம்பிரான், கோட்டத்து மன்னியர் கண்டன், சொரிமன்னிய
9. ர் சூரியன் கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டமண்டல
10. ஸ்தாபனாசாரியன், சோழமண்டலப் பிறதிஷ்ட்டாபனாசாரியன்
11. பாண்டி மண்டலத்து பத்மனாசாரியன் படைகண்டு தத்தளிப்பார்
12. கள் கண்டன் பஞ்சபாணாவதாரன் துலுக்கர்தள விபாடன்
13. துலுக்கர்மோகந் தவிழ்த்தான், அரியர்தள விபாடன் அரியர் மோ
14. கந் தவிழ்த்தான், தொட்டியர்தள விபாடன், தொட்டியர் மோ
15. கந் தவிழ்த்தான், ஒட்டியர்தள விபாடன், ஒட்டியர்மோகந் தவி
16. ழ்த்தான் தற்க்காற்கு தற்க்கன் தற்க்கவினோதன் தண்டுவார் மி
17. ண்டன் சண்டப்பிரசண்டன் ஸகலகுணாபிராமன் துங்கா
18. பிராமன் துர்கரேபுந்தன், சொல்லுக் கரிச்சந்திரன் வில்லு
19. க்கு விசையன் பரிக்கு நகுலன், குடைக்கு கற்னன், பொறுமை
20. க்கு தற்ம்மர், பூறுவ தெட்சண பச்சிம உத்தர ஸத்த ஸமுத்தி
21. ராதிபதி அசுபதி கெசபதி தளபதி நரபதி நரவேட்டை கண்ட
22. ருளிய மல்லிகாா்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகா
23. ராயர், ஆனைகுந்திதேவ மகாராயர், விருப்பாச்சிதேவ மகா
24. ராயர், கிஷ்ணதேவ மகாராயர், ராமதேவ மகாராயர் ஸரங்
25. கதேவ ம

26. காராயர்
27. பிறுதிவி
28. ராச்சிய
29. ம் பண்ணியருளா நின்ற சாலிவாகன சாகார்த்தம் 1726
30. கலியுக சகார்த்தம் 4905 யிதின்மேல் செல்லாநின்ற
31. ரத்தாட்சி வருஷம் அர்ப்பிசி மீ 8 உ செதுர்த்தி சோமவாரமும் ரோ
32. கினி நட்சத்திரமும் வயித்திரிதிநாம யோகமும் பாலவா
33. கறணமும் இப்படிக்கொத்த சுபதினத்தில் ராசராசவளநா
34. டு ராசேந்திரசோழ வளநாடு பண்டிகுள்நாடு அன்ம்பில் தெ
35. ற்க்குளூரிலிருக்கும் காணியுடைய அரசர்மக்களில் இந்திரகு
36. ல வங்குஷன் தென்கோடியாதிபன், வடகரைப்புலி, வாகை
37. மாலை புயனான காசிப கோத்திரத்தில் விளங்கும் ஸ்ரீமது
38. திருமலைராய தொண்டமானார் பவுத்திரன், திருமலையப்ப
39. ராய தொண்டமானார் புத்திரன் ராச ராசவிசை ரெகுனாத ரா
40. ய பாதர்த் தொண்டமானார்ரவர்கள் சஞ்சீவிராயசுவாமி
41. கோவில் நித்தப் படிக்கட்டளைப் பூசைக்கும் திருப்பணி
42. அபிஷேகம் நெய்வேத்தியம் அன்னதான முதலாகிய தற்
43. மங்களுக்கு குளத்தூர்ச் சீமையில் ராசிபுரம்ஞ் சேற்க்கை
44. யில் பீடம்பட்டி கிராம மூலமாக தாம்பிரசாதன பட்டயம் பண்ணி
45. கொடுத்தபடி தாம்பிரசாதனமாவது பீடம்பட்டி நஞ்சை
46. புஞ்சை யெல்லைக்கி விபரம் கீள்பார்க்கெல்லை யீசா
47. னிய மூலையில் ராசிபுரம் ஈசுரன்கோவில் கட்டுக்கரை
48. கடவயலுக்கு மேற்க்கு, யிதின் தெற்க்கு மேற்படி கட்டுக்கரை

## இரண்டாம் பக்கம்

49. கொள்வாயி மேல்மூலை ராயப்புடையான் கட்டுக்கரை மேல்வரப்பு
50. க்கு வடக்கு மூலைக்கு மேற்க்கு யிதின் தெற்கு
அய்யான்ங்குட்டிபு
51. ஞ்சை தெற்க்கி மூலைக்கு மேற்க்கு, தென்ம்பார்க் கெல்லையாவ
52. து சிங்கத்தாகுறிச்சி எல்லைக்கு வடக்கு பறையன்புஞ்சை
53. தெற்க்கு வொளிக்கு வடக்கு யிதின் மேற்க்கு வேப்படி புஞ்சைக்கு
54. தெற்க்கு வொளிக்கு வடக்கு யிதின்வடக்கு சிங்கத்தாகுறிச்
55. சி மூறானாயக்கன் புஞ்சை கீள்ப் பொளிக்கு கௌக்கு யிதின் மேற்
56. க்கு சிங்கத்தாகுறிச்சி போற்கு அடிப்புஞ்சை கீள்ப் வொளிக்கி

57. கௌக்கு யிதின்வடக்கு பீடம்பட்டி புதுக்கொளத்து மேல்கலி
58. ங்கிக்கு கௌக்கு யிதின் வடமேற்க்கு திருமலை சமுத்திரம்
59. யெல்லைக்கி கெழுக்கு நல்லபெருமாள் புஞ்சை மேல்பொளிக்கி
60. கௌக்கு யிதின் வடக்க திருமலைசமுத்திரம் யெல்லைக்கி கெழுக்
61. கு குமாறமங்கலத்து யெல்லைக்கி தெற்க்கு யிதின்வட கெழுக்கு
62. வடபார்க்கெல்லை கோவில்புஞ்சை வடக்கு பொழிக்கு தெற்க்கு யி
63. தின் கெழுக்கு மேற்படி புஞ்சை ஈசானியமூலையிதின் தெற்கு பாலைய
64. டி புஞ்சை வடக்கி பொளிக்கு தெற்க்கு யிதின் தென்ங் கெழுக்கு
65. குமாறமங்கலத்து யெல்லைக்கி தெற்க்கு முருகன் கட்டுக்க
66. ரை ஈசானியமூலைக்கி மேற்க்கு யிந்த நான்ங்க்கெல்லையும்
67. வீர அனுமார் முத்திரைக் கல்லுக்குள்பட்ட நஞ்சைபுஞ்சை
68. திட்டுத்திடல் நத்தம் படுகை தோப்புத்துரவு மாவடை மரவடை
69. சொற்னாதாயம் வகையறுப்பு யிடங்கை வலங்கை பலசுவந்தி
70. ரம் யிது முதலான யெப்பேர்ப்பட்ட வரியுங் கீழ்நோக்கிய கிண
71. றும் மேல்நோக்கிய விருச்சமும் செல தரு பாஷாணம் நிதி நிட்
72. சேபம் சறுவமானியமாக தாராபூறுவமாக தாம்புர சாதனப் ப
73. ட்டையம் வெங்கிடதாசரி பாரிசமாக கொடுத்தபடியினா
74. லே யிந்த தற்மம் சந்திராதித்தியாளுள்ள வரைக்கும் பில்லும்
75. பூமியும் கல்லும் காவேரியும் உள்ளவரைக்கும் தற்மத்தை ந
76. டப்பிவிச்சுக் கொண்டு தற்மத்தை உத்திரோத்தமாக ந
77. டப்பிவச்சுக்கொண்டுசுகத்திலேயிருக்க கடவாறாகவும், யிந்த
78. தற்மத்துக்கு வாக்கு சகாயம் சரீர சகாயம் அர்த்த சகாயம்
79. பண்ணினபேர்கள் காசியிலே கங்கைக் கரையில் கோடி சிவ
80. லிங்கபிரதிஷ்டை பண்ணின பலனை அடைவார்களாகவும்
81. யிந்த தற்மத்துக்கு அகிதம் பண்ணினபேற்கள் கெங்கைக்கரை
82. யிலே கோடி காராம்பசுவை கொன்ன தோஷத்திலே
83. போவார்களாகவும் யிந்த சாஸனம் யெளுதினது பழனியப்ப வாத்தி
84. யார் குமாரன் வடமலை வாத்தியார் கையெளுத்து உ.

# 24. நாஞ்சியூர் செப்பேடு

| | | |
|---|---|---|
| இருக்கும் இடம் | : | புதுக்கோட்டை மாவட்டம், நாஞ்சியூர், |
| அரசர் | : | விஜய ரங்க சொக்கநாத ராமசாமித் தொண்டைமான் |
| காலம் | : | கி.பி. 1734, ஆனந்த வருஷம் சித்திரை மாதம் 26-ஆம் தேதி |
| மொழி | : | தமிழ் |
| அளவு | | 55 செ.மீ x 27 செ.மீ |

**அமைப்பும் செய்தியும்**

செப்பேட்டின் தலைப்புப் பகுதியில் வாமனாவதார உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. நாஞ்சியூர் என்ற ஊருக்குப் புதுக்கோட்டை மன்னர் பரம்பரையில் முதல்வர் ஒருவரின் பெயரால் நமணராய சமுத்திரம் என்று பெயரிட்டு 50 வீடுகள் ஏற்படுத்தி அக்கிரகாரம் ஆக்கி 50 பிராமணர்கட்குப் பிரித்துக் கொடுத்ததை இச் செப்பேடு மிகவும் விரிவாகக் கூறுகிறது.

50 பங்குக்கு உரிய பல்வேறு நிலைகளிலுள்ள பிராமணர்கள் பெயர் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ ராமஜெயம் என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது.

இச் செப்பேட்டை கி. ஸ்ரீதரன் அவர்கள் படி எடுத்து ஆவணம் இதழ் 13-இல் (2002 ஜூலை) அச்சிட்டுள்ளார்.

இச் செப்பேடு புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களின் கிளை மரபினரான குளத்தூர் தொண்டைமான் மன்னர் ஒருவர் வழங்கியதாகும். ரகுநாத ராய தொண்டைமான் (1686-1730) புதுக்கோட்டை சிற்றரசை உருவாக்கி வந்த காலத்தில் இவரது சகோதரர் நமண தொண்டைமானை குளத்தூர் பாளையத்தின் பாளயக்காரராக மதுரை நாயக்கர் ரெங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் நியமித்தார். நாயக்கரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட நமணத் தொண்டைமான் தன்னை ரெங்க கிருஷ்ண முத்துவீரப்ப நமணத்

தொண்டைமான் என்று அழைத்துக் கொண்டார். இவருக்கு பின் இவரது மகன் ராமசாமி தொண்டைமான் குளத்தூர் பாளையத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவரும் நாயக்கர்களின் மேலாண்மையைக் குறிக்கும் வண்ணம் தன்னை விஜயரங்க சொக்கநாத ராமசாமி தொண்டைமான் என அழைத்துக்கொண்டார். இவரது கொடையாக இச் செப்பேடு அமைகிறது. 1750 வாக்கில் குளத்தூர் பாளையமும் புதுக்கோட்டையுடன் இணைக்கப்பட்டது. குளத்தூர் தொண்டைமான் பரம்பரை முடிவுக்கு வந்தது.

## மூலம்

### ஸ்ரீராமஜெயம்

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலே
2. லசுவரன், அரிய விபாடன், பாஷை
3. க்குத் தப்புவராய கண்டன், மூவராய கண்டன்,
4. கண்டர் கண்டன், கண்டையப் பிறதாபன், கட்டாரி
5. ச் சாளுவன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு
6. கொடாதான், ஒருபரி கொண்டு திரள்பரி வெட்டு முபை
7. ய குலோத்துங்கன், எம்மண்டலமும் கொண்டு மீழமு
8. ந் திறைகொண்ட ராசாதிராசன், ராசமாற்த்தாண்
9. டன், ராசகண்டரவன், கோட்டத்து மன்னியர்கள், சொரிமன்னிய
10. ரவன், கெடிமன்னியர் காலாந்தகன், தொண்டைமண்டல ஸ்
11. தாபனாச்சாரியன். சோழமண்டல பிரதிஷ்டாபனாச் சாரியன்
12. பாண்டிமண்டலத்து பிரதிஷ்டாபனாச்சாரியன், மறுமன்னி
13. யர் கோடரி, குறுமன்னியர் கோளரி, ஒட்டியர்தள
14. விபாடன், ஒட்டியர் மோகந் தவிழ்த்தான், துலுக்கர் மோகந் தவிழ்த்தான், ப
15. டைகண்டு தத்தளிப்பார்கள் மிண்டன், பஞ்ச ப
16. ாணாவதாரன், தற்காற்குத் தற்கன், தற்கவிநே
17. ாதன், தண்டுவார் மிண்டன், சண்டப்பிறசண்டன், பூறு
18. வ தெட்சண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி, அசு
19. பதி கெசபதி, நரவேட்டை கண்டருளிய மல்லிகா
20. ர்ச்சுனதேவ மகாராயர், பிறபுடதேவ மகாராயர், ஆ
21. னைகுந்திதேவ மகாராயர், கிஷ்ணதேவ மகாராயர்
22. ராமதேவ மகாராயர், விருப்பாச்சிதேவ மகா
23. ராயர், சீரங்கதேவ மகாராயர் பிறுதிவி ரா
24. ச்சியம் பண்ணியருளாநின்ற சாலியவாக
25. ன சகாப்தம் 1656 மேல் செல்
26. லாநின்ற ஆனந்த வருஷம் சித்திரை மீ 26 அட்சய தி
27. றிதிகையும் புதன்கிழமையும் ரோகணி நட்சத்திரமும் சுடி

28. டின சுபதினத்திலே ராசராச வளநாடு ராசேந்திர சோ
29. ழவளநாடு பன்றிசூழ்நாடு அன்ம்பில் தெற்குலூரிலிருக்கும்
30. யிந்திரகுல குலோத்பவரான காணியுடைய அரையர்மக்க
31. ளில் ராயரால் பேர்பெற்ற ஸ்ரீமது ராய தொண்டைமானார் பே
32. ரனார் ராய ஸ்ரீ ரெங்க கிஷ்ண முத்துவீரன் மன்ன
தொண்டைமானா
33. ர் குமாரனான ஸ்ரீவிசையரெங்க சொக்கநாத ராமசு
34. வாமித் தொண்டைமானார் அக்கிரகார தானசாசனம் பண்
35. ணிக் குடுத்தபடி, நம்முடன் கெப்பனாசி ரெங்ககிஷ்ண
முத்துவீர மன்
36. ன தொண்டமானார் பேரிலே சொல்ல நமக்கு சொந்தமாக நடக்
37. கிற நாறுத்தாமலைச் சீமையில் சேறுவாசி நாட்டில் விளா
38. ங்கும் நாச்சியூரை நமணராய சமுத்திரமென்று பிறதி நா
39. மமாகப் பண்ணித் தேவதாயமுட்படப் பங்கு 50 மனை 50
40. சகிரண்யோதக தாராபூருவமாகக் குடுத்தபடியினாலே யிந்த
41. நாஞ்சியூர் நஞ்சை புஞ்சை நான்கெல்லைக்குட்பட்ட மாவடை
42. ட கோசஞ்சார பூமிசல மாறாக பூமி நிதி நிசேஷப ஜல
43. தரு பாஷாண அக்ஷிணி ஆகாமி சித்தசாத்திய அஷ்டபோக
44. சுவாமியங்களும் சறுவமானியமாக புத்திரபவுத்திர பார
45. ம்பரியமாக ஆசந்திரார்க்கமாக தானாதி விற்கிறய வினிம
46. யோக்கியமாக அனுபவித்துக் கொள்ளவும். யிந்தப் பங்
47. கு 50க்கும் பாகை விபரம்
48. நமணராய சமுத்திரம் கினசங்கை பங்கு 50 பேருவழி
49. வாத்தியார் வைத்திய அய்யர் பங்கு 1
50. உதையாத்திரி வாத்தியார் பங்கு 1
51. விசுபதி வாத்தியார் பங்கு 1
52. ரெங்கய்யன்மார் பங்கு 1
53. புரோகித வைத்திய அய்யன் பங்கு 1
54. சீத்தாராம அய்யன் பங்கு 1
55. கோகருண்ண சாத்திரியார் பங்கு 1
56. அய்யப்பரசய்யன் பங்கு 1
57. வெங்கிட்டராயர் ரெங்கய்யங்கார் பங்கு 1
58. ஆதிநாராயணய்யன் பங்கு 1
59. திருமலையராயய்யன் பங்கு 1
60. ராயசம் ரெங்கய்யன் பங்கு 1
61. ராமய்யங்கார் பங்கு 1
62. ஆந்தை ரெங்கய்யன் பங்கு 1
63. தினசரி ராமசாமியய்யன் பங்கு 1
64. சீட்டு நாரப்பய்யன் பங்கு 1
65. காந்தபதானி சுப்பய்யன் பங்கு 1
66. வெசிர வெங்கிட்டரய்யன் பங்கு 1

67. ராம லிங்கய்யன் பங்கு 1
68. வீணை அய்யவாரய்யன் பங்கு 1
69. திருவமுடையார் பாஷராயர் பங்கு 1
70. வெங்கிட்ட நரசிங்கய்யன் பங்கு 1
71. தனுக்கோடி அய்யன் பங்கு 1
72. பூசை ஜெங்கய்யன் பங்கு 1
73. தேவதாயம் பங்கு 1
74. ராமச்சந்திரய்யர் பங்கு 1
75. வெங்கிட்டய்யர் பங்கு 1
76. நத்தம் சீனிவாசய்யர் பங்கு 1
77. தன்மாச்சியர் பங்கு 1
78. குப்பா பட்டாச்சாரி பங்கு 1
79. சோணாத்திரி சாத்திரியார் பங்கு 1
80. சிந்த கிஷ்ணய்யங்கார் பங்கு 1
81. சிங்காச்சாரியார் பங்கு 1
82. வெங்கடாசலய்யன் பங்கு 1
83. கோபாலசாமி அய்யன் பங்கு 1
84. அழகிரி அய்யன் பங்கு 1
85. சூரிய நாராயண அய்யன் பங்கு 1
86. தச்சாணி ராமய்யன் பங்கு 1
87. வேங்கை வெங்கிட்டய்ய நாராயணன் பங்கு 1
88. சீட்டு வெங்கடாசலமய்யன் பங்கு 1
89. ராஜுவ நாராயய்யன் பங்கு 1
90. ராமா பண்டிதரய்யன் பங்கு 1
91. துக்கைபூசை ராயரங்கய்யன் பங்கு 1
92. பூசை சேஷகிரி நாரண பட்டன் பங்கு 1
93. ராயபுரம் தருமி அய்யன் பங்கு 1
94. சுப்பய்யர் பாகவதர் பங்கு 1
95. புல்லதரு வேங்கடசாமி பங்கு 1
96. பூசை முத்தய்யன் பங்கு 1
97. ஜெங்கபோகிய்யன் பங்கு 1
98. ஆகக் கிணசங்கை பங்கு 50
99. தான பாலன யோர்மத்யே தானா ச்ரயோனு பாலனம்
100. தானாத் ஸ்வர்க்க மவாப்நோதி பாலநாத் அச்சுதம் பதம் :
101 ஸ்வத்தாம பரதத்தாம் வா பூமிம் விர்ஸய யோகரேத்
102. ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்ட்டாயாம் ஜாயதே க்ருமி:
103. இந்த தர்மத்துக்கு யாதாமொருவன்
104. விகாதம் பண்ணுகி
105. றான் அவன் கெங்கைக் கரையிலே நல்ல பிராமண
106. ரையும் பசுவையும் கொன்ற தோஷத்தி
107. லே போவான்.

## மேற்கோள் நூல் பட்டியல்


| | | |
|---|---|---|
| இராசமாணிக்கனார், மா. | : | கல்வெட்டுக்களில் சமயம் சமுதாயம்- 1997 |
| இராச.செ. | : | தஞ்சை மராட்டியர் செப்பேடுகள்- 50 (தமிழ்ப் பல்கலைக் கழகம்- 1983) |
| | : | தொண்டைமான் செப்பேடுகள் (தமிழ்ப் பல்கலைக் கழகம் - 2004) |
| கமால் எஸ்.எம். | : | மாவீரர் மருதுபாண்டியர்- 1988 |
| சிரஞ்சீவி மற்றும் க.இலக்குமி நாராயணன். | : | புதுக்கோட்டை சமஸ்தான வரலாறு- 1981 |
| தொண்டைநாடன், ஜி.எம். | : | மூவரசர் குலவிளக்கம் |
| ராஜாமுகமது, ஜெ. | : | புதுக்கோட்டை மாவட்ட வரலாறு- புதுக்கோட்டை- 1992 |

| | | |
|---|---|---|
| Chandrasekaran, A. | : | Studies in Pudukkottai History (Unpublished Ph.D. Thesis, University of Madras) |
| Chandrasekar, M.S. | : | Guide to the Principal exhibits in the Government Museum Pudukkottai- 1966. |
| Gopalakrishna Gandhi. (Editor) | ; | Pudukkottai District Gazetteer- 1983 |
| Commissioner of Museums- (Reprint-2002) | : | Chronological list of Inscriptions of the Pudukkottai State- 1929, Pudukkottai Darbar.<br>Inscriptions of Pudukkottai State. Text.<br>Inscriptions of Pudukkottai State Translated in to English-part. I - 1941, Part. II- 1944.<br>Pudukkottai Darbar Records. |
| Radhakrishna Iyer, | : | A General History of Pudukkottai State -1966. |
| Ragupathy, M. | : | Guide to the Important Monuments in and around Pudukkottai - 1983 |
| Raja Mohamad, J. | : | Handy Guide to Government Museum. Pudukkottai. |
| Venkatarama Iyer,K.R. | : | A Manual of Pudukkottai State Vol.I. - 1938<br>A Manual of Pudukkottai State Vol.II. Part.I-1940<br>A Manual of Pudukkottai State Vol.II. Part II- 1944<br>A Guide to the Pudukkottai State - 1945. |

